விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 22 செவ்வாய்க்கிழமை (08.11.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 324

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இலங்கை மீது உளவியல் போரை அமெரிக்கா ஆரம்பித்துள்ளது!

### கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு) அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இலங்கை அரசாங்கத்தின் மீது உளவியல் போரொன்றை ஆரம்பித்திருப்பதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றின் அமெரிக்கச் செய்தியாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் சுமார் ஒரு மாத காலமாக அதிகாரபூர்வமற்ற வகையில் இலங்கை அரசாங்கத்திற்கு சில செய்திகளை மறைமுகமாக தெரிவித்து வருவதாக செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## சார்க் அமைப்புக்கு அழைப்பு விடுகிறார் பீரிஸ்



(கொழும்பு)

சார்க் உறுப்பு நாடுகள் அனைத்தும் இணைந்து பிராந்தியத்தின் பயங்கரவாதத்தை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். த எக்ஸ்பிரஸ் ரிபியூன் செய்தித்தாளுக்கு அளித்த விசேட செவ்வியிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த வாரம் (19ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு சக்திகளிடமிருந்து தமிழர்களை மீட்க வேண்டும்

### கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் தீர்வுத் திட்டமொன்றை வழங்குவதன் மூலம் தமிழ் மக்களை வெளிநாட்டு சூழ்ச்சித் திட்டங்களிலிருந்து மீட்க முடியும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார் என லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இன, மத பேதங்களைக் களைந்து அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் சமூகத்தை தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளும் முயற்சிகளில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கடுமையான இனவாத, மதவாத கோட்பாடுகளை கத்தோலிக்க திருச்சபை வன்மையாக கண்டிக்கிறது.

அதே நேரம் மதகுருமார் அரசியலில் ஈடுபடுவது பொருத்தமற்றது. எந்தவொரு மத குருவையும் கட்சி அரசியலுக்கு பொருத்தமானவர் என (19ஆம் பக்கம் பார்க்க)



## டிப்பர்-பஸ் விபத்து ஆறு பேர் படுகாயம்

### கொக்காவிலில் சம்பவம்

கொழும்பிலிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணிகளுடன் வந்த தனியார் பஸ், டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் படுகாயமடைந்தனர். இவ்வாறு படுகாயமடைந்த 6 பேரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை 4.30 மணியளவில் கொக்காவில் ஏ-9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, நேற்றுக் காலை சம்பவ இடத்தில் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்ட டிப்பர் வாகனத்ததுடன், 30 பயணிகளுடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த கொண்டிருந்த தனியார் பஸ் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் படுகாயமடைந்த நிலையில் 6 பேர் கிளிநொச்சி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

பின்னர் இவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் மூன்று பேர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (19ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர் மீது இல. படையினர் தாக்கு

### ஜெயா கண்டனம்

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பாக இலங்கைக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தமிழக முதல்வர் ஜெ.ஜெயலலிதா நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விவகாரத்தை தமிழ்நாட்டிற்குரிய பிரச்சினையாகப் பார்க்காமல் ஒரு தேசிய பிரச்சினையாக பார்க்க வேண்டும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அனுப்பியுள்ள கடித (19ஆம் பக்கம் பார்க்க)

## சட்டத்திற்கு மேலானவராக ஜனாதிபதி; ஆணைக்குழு அறிக்கை பலனளிக்குமா?

### ஆசிய மனித உரிமை ஆணைக்குழு கேள்வி

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை விமர்சகர்களின் எதிர்மறை கருத்துக்களுக்கு அப்பால் திறமையானதாக இருந்தாலும் சட்டத்திற்கு மேலானவராக ஜனாதிபதி உள்ள போது அந்த அறிக்கை பலனளிக்குமா? என ஆசிய மனித உரிமை ஆணைக்குழு கேள்வியெழுப்பியுள்ளது.

ஆசிய மனித உரிமை ஆணைக்குழு இது தொடர்பாக நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. ஆணைக்குழுவின் அறிக்கையில் இடம்பெற்றுள்ள சில கருத்துக்கள் வருமாறு,

2009மே மாதத்தில் அரச படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நடந்த இறுதிக் கட்ட யுத்தத்தில் என்ன நடந்தது? சட்டம் மற்றும் ஒழுங்கு என்ற அடிப்படையில் அரசபடையினர் விரிவான நீதி நடைமுறைக்கு உட்படுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது.

முக்கியமாக பொறுப்புக்கூறும் நடைமுறை உண்மையை சொல்வதுடன் நல்லிணக்கத்தை காண்பதுடனும் வரையறுக்க முடியாது. அவை இலங்கையின் நீதித்துறை அமைப்புக்களின் நேர்மையை மீண்டும் நிலை நாட்டுவதுடன் இணைக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும்

சட்டம் மற்றும் நீதி என்ற பொதுக் கருத்து ஆகியன நாட்டில் தொலைந்த பின்னர் ஒன்றுமே இல்லாத வெற்றிடமொன்றில் இனங்கள் மற்றும் சமூகங்களுக்கிடையேயான மனப் புண்களை ஆற்றலாம் என்பதும் நல்லிணக்கத்தை காணலாம் என்பதும் வெறும் நகைப்புக் (20ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் எழுச்சி ஏற்படும் ஐ.தே.கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

செயற்பாடு குறைந்த நிறுவனங்கள் மற்றும் பயன்பாடு குறைந்த சொத்துக்களை சுவீகரித்தல் சட்டத்தை அறிமுகப்படுத்தல் போன்ற செயற்பாடுகளால் அரசாங்கம் ஜனநாயகத்தை மீறுமாயின் மக்கள் எழுச்சி ஏற்படும் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.

சிம்பாவேயில் எதேச்சதிகார ஆட்சியாளர் றொபேர்ட் முகாபேயும், அந்நாட்டின் சொத்துக்களை சுவீகரிப்பதற்கு இதுபோன்ற சட்டங்களை அறிமுகப்படுத்தியதாக ஐ.தே.க பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

1956 ஆம் ஆண்டு தனியாருக்குச் சொந்தமான பெருந்தோட்டங்கள், பஸ் கம்பனிகள், சுரங்கங்கள் என்பன அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டபோது உள்நாட்டு தொழிற்துறை கடுமையாக பாதிக்கப்பட்டது எனவும் தற்போதைய அரசாங்கம் மீண்டும் அத் தவறை செய்ய முயற்சிக்கிறது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)



நேற்று ஹஜ் பெருநாளின் போது கொழும்பு காலிமுகத்திடலில் தொழுகையில் ஈடுபடும் முஸ்லிம்கள்...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காணி விடயத்தில் கூட்டமைப்பு இரட்டைவேடம்;

# இனவாதத்தை தூண்டி அரசு இருப்பை பாதுகாக்கிறது

## நாம் இலங்கையர் அமைப்பு குற்றச்சாட்டு

கிளிநொச்சி நகரில் பெரிய எழுத்துக்களில் இது கௌதம புத்தன் தேசம் என எழுதியும் விகாரைகளை அமைத்தும் தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதத்தை தூண்டி சிங்கள மக்கள் மத்தியில் அரசியல் இருப்பை அரசாங்கம் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. அத்துடன் தமிழ் மக்களின் காணிகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரட்டை வேடம் போடுகின்றது என நாம் இலங்கையர் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

அரசங்கத்தினதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் பொய்யான நடிப்பை புரிந்து கொள்வோம் என்ற தலையங்கத்தில் நாம் இலங்கையர் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள் ளது.

வடக்கு, கிழக்கில் பௌத்த விகாரைகளை அமைத்து பெரும் சத்தத்துடன் பிரித் பாராயணங்களை ஒலிபரப்புவதும், கந்தரோடை கிராமத்தின் பெயரை கந்துருகொட என மாற்றியமைத்தும் முற்றுமுழுதாக தேசப்பற்று என்ற பெயரில் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தை அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

சிங்கள மக்களை குஷிப்படுத்தி அரசாங்கத்தின் இருப்பை பாதுகாத்துக் கொள்ளவே தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்காது இனவாதத்தை தூண்டுகிறது. வடக்கில் அனைத்து காணிகளிலும் தமிழ் மக்களை மட்டுமே குடியேற்ற வேண்டுமென்பதல்ல. சிங்கள, முஸ்லிம் மக்களும் குடியேற்றப்பட வேண்டும். ஆனால் இனவாத குடியேற்றங்களாக இல்லாது நியாயமான விதத்தில் அமையவேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும்.

அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் உரிமைகளுக்காக முன்னிற்கின்றதா என்ற கேள்வியும் எழுகிறது.

வடக்கில் குடியேற்றங்கள் தொடர்பாக எதிர்க்கும் கூட்டமைப்பு அரசாங்கம் வட, கிழக்கில் பெரும் நிலப்பரப்புக்களை வகை, தொகையின்றி இந்தியாவிற்கு விற்பனை செய்வதை பார்த்துக்கொண்டு கூட்டமைப்பு மௌனமாகவே இருக்கின்றது.

கூட்டமைப்பின் இரட்டை வேடமானது அரசாங்கத்திற்கு மறைமுகமாக ஆதரவை வழங்குகின்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# குழு மோதல் ஐவர் கைது

இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக 5 பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கொழும்புத்துறை கொய்யாத்தோட்டம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கொய்யாத்தோட்டம் பகுதியில் கைத் தொலைபேசி கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்ட இரு இளைஞர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கமே பின்பு இரு குழுக்கிடையிலான மோதலாக உருவெடுத்தது.

இந்த சம்பவத்தை அடுத்து அப்பகுதிக்குச் சென்ற யாழ்ப்பாணப் பொலிஸார் நான்கு பேரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை விசாரணை செய்தபோது பொலிஸாருக்கு இடையூறு ஏற்படுத்திய மற்றுமொரு நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (பா-6)

# நோர்வே சமாதான முயற்சிகளின் மதிப்பீடு வெள்ளியன்று வெளியாகிறது

இலங்கையில் நோர்வேயால் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையினை வெளியிட்டு வைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தரங்கு நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் இலங்கைக்கான சமாதான முயற்சியின் முன்னாள் சிறப்புத் தூதரும் நோர்வேயின் சூழல் மற்றும் மேம்பாட்டுத் துறை அமைச்சருமான எரிக் சொல்ஹைம் கலந்து கொண்டு மதிப்பீட்டறிக்கை தொடர்பான தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவுள்ளார்.

1997-2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் நோர்வேயால் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் குறித்த மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கான பொறுப்பு நோர்வே பேர்கன் நகரில் அமைந்துள்ள ஆய்வு நிறுவனமான கிறிஸ்ரன் மிச்சல்சன் இன்ஸிரியூட் மற்றும் லண்டன் பல்கலைக்கழகத்தின் ஸ்கூல் ஒப் ஓரியன்ரன் அன்ட் ஆப்ரிகன் ஸ்ராடீஸ் ஆகிய நிறுவனங்களிடம் நோர்வே வெளிவிவகார அமைச்சினால் என்.ஓ.ஆர்.ஏ.டி. ஊடாக கையளிக்கப்பட்டிருந்தது.

இந்நிறுவனங்கள் மேற்கொண்ட மதிப்பீட்டு முடிபுகளை வெளியிடும் நோக்குடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கில் மதிப்பீட்டுக் குழுத்தலைவர் ஹன்னார் சோர்போ மதிப்பீட்டறிக்கையின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்தி கருத்துரை வழங்கவுள்ளார்.

இக்கருத்தரங்கில் பங்குபற்றுபவர்கள் கேள்விகள் கேட்பதற்கான வாய்ப்புக்களும் கருத்தரங்கு நிகழ்ச்சி நிரலில் வழங்கப்பட்டுள்ளதோடு நோர்வே வெளிவிவகார அமைச்சினால் ஒழுங்கு செய்யப்படும் விவாத அரங்கு ஒன்றும் கருத்தரங்கில் இடம் பெறுகிறது. (பா)

# உலக அழகு ராணியாக வெனிசுலாவின் சார்கோஸ் தெரிவு




புதிய உலக அழகு ராணியாக வெனிசுலாவைச் சேர்ந்த இவியன் சார்கோஸ் தெரிவாகியுள்ளார். 61 ஆவது உலக அழகு ராணிப் போட்டி நேற்று முன்தினமிரவு லண்டனில் நடைபெற்றது. 22வயதான இவியன் சார்கோஸ் முடிசூட்டப்பட்டார்.

பிலிப்பைன்ஸை சேர்ந்த க்வென் டோலின் ருவைஸ் இரண்டாமிடத்தையும் பியுர்டோ ரிக்கோவின் அமண்டா பெரேஸ் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

இதேவேளை மிஸ்வேர்ல்ட் 011 ஸ்போரட்ஸ் அணிக்கான விருது டொமினிக்கன் குடியரசுக்கு வழங்கப்பட்டது. இங்கிலாந்து அழகு ராணி மிஸ் வேர்ல்ட் கடற்கரை அழகியாக தெரிவானார். கஸகஸ்தான் அழகு ராணி வருடத்தின் சிறந்த மொடல் அழகியாக தெரிவானார். சிலி அழகுராணிக்கு திறமைக்கான விருது வழங்கப்பட்டது. கானா, இந்தோனேஷிய அழகுராணிகளுக்கு ஒரு நோக்கத்துடனான அழகுக்கான விருது வழங்கப்பட்டது.

அடுத்த வருட உலக அழகுராணி போட்டி சீனாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கான கொடி நேற்று முன்தினம் சீன போட்டி ஏற்பாட்டாளர்களிடம் கையளிக்கப்பட்டது. (பா-8)

# யாழ். பல்கலை மாணவர்கள் மீது தாக்குதல் விசாரணை மேற்கொள்ளப்படாதது ஏன்?

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேள்வி

(கொழும்பு)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் மீது கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் அதிகாரிகள் இன்னமும் விசாரணை மேற்கொள்ளாதுள்ளமை ஏன் என அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேள்வியெழுப்பியுள்ளது.

அத்துடன் பல்கலைக்கழக மாணவர்களின் உரிமையை பாதுகாக்குமாறும் அரசாங்கத்திடம் அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

கடந்த மாதம் தாக்குதல்களுக்குள்ளான யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உட்பட பல்கலைக்கழக மாணவர்கள் பலருக்கு தொலைபேசி மூலம் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பேச்சாளர் சஞ்ஜீவ பண்டார தெரிவித்துள்ளார். அவர்களது உயிருக்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தல் உள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் இதுவரையில் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. இந்த விடயம் குறித்து அரசாங்கம் மௌனம் காக்கின்றது. தமது பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கு சுதந்திரம் இல்லை. எனவே மாணவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்தினுடையது.

வடக்குக் கிழக்கில் இப்பிரச்சினை மோசமாகவுள்ளது. மாணவர்களுக்கு எதிரான அச்சுறுத்தல் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. அவர்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்.

இந்த இரு பல்கலைக்கழக மாணவர்களும் தமது கருத்தை துணிந்து வெளிப்படையாக வெளியிடக்கூடியவர்கள். இதனால் தான் அவர்கள் கடந்த மாதம் அச்சுறுத்தல்களுக்கு உள்ளானார்கள்.

யாழ். பல்கலைக்கழக மாணவ பேரவைத் தலைவர் சுப்பிரமணியம் தவபாலசிங்கம் கடந்த ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி தாக்குதலுக்குள்ளாகி இருந்தார்.

சுப்பிரமணியம் தவபாலசிங்கம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தைச் சேர்ந்த இறுதி வருட மாணவரான ரவிராஜ் கவிதாஸ் ஒரு வாரத்தின் பின்னர் தாக்கப்பட்டு கடுங்காயங்களுக்குள்ளானார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் 19ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே பழைய மாணவர்கள் தமது உறுப்புரிமையை உறுதிப்படுத்துவதற்கு பாடசாலை நாட்களில் விண்ணப்பங்களை பூர்ணப்படுத்தி ஒப்படைக்குமாறு அதிபர் என். தேவராஜா கேட்டுள்ளார். (பா-11)

# பிரபாகரன் மீது ஆணையிட்டு பதவியேற்ற வட்டார உறுப்பினர்

(சென்னை)

தமிழகத்தில் எந்த தேர்தலாக இருந்தாலும் வென்று பதவியேற்பவர்கள் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாக இருந்தால் கடவுளின் பெயரால் என்றும், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் உளமார என்றும் பதவியேற்கும் போது சத்திய பிரமாணம் எடுத்துக் கொள்வார்கள்.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெயரால் தமிழக வட்டார உறுப்பினர் ஒருவர் பதவியைப் பொறுப்பேற்றுள்ளது அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

பழனி நகராட்சியின் முதலாவது வட்டார அ.தி.மு.க. கிளைக் கழக செயலாளராகவும், பழனி நகர எம்.ஜி.ஆர். மன்ற துணைத் தலைவராகவும் இருப்பவர் சோலை தேசவன். இவருக்கு வயது 55. அ.தி.மு.க கட்சிக்காரரான இவர், பழனி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பத்திரப்பதிவு அலுவலகத்தின் அருகில் பத்திரம் எழுதி வருகிறார்.

கடந்த 2001 உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் பழனி நகராட்சி முதலா வது வட்டார உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின்னர் 2006 தேர்தலில் அதே வட்டாரத்தில் போட்டியிட்டு தோற்றுப் போனார்.

இந்த முறை அ.தி.மு.க சார்பில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காமல் போனதால், சுயேட்சையாக போட்டியிட்டு அ.தி.மு.க. வேட்பாளரை காட்டிலும் 120 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த 25ஆம் திகதி நகர மன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் எடுக்கும் போது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் வளர்த்து உருவாக்கப்பட்ட உலகத் தமிழர்களின் ஒப்பற்ற ஒரே தலைவரான தம்பி பிரபாகரன் அவர்களின் விடுதலை வேட்கையின் மீது ஆணை யாக நான், எனக்கு வாக்களித்த மக்களுக்கும், இந்த நாட்டுக்கும், நாட்டின் இறையாண்மைக்கும் கடமை தவறாமல் பணியாற்றுவேன் என்று உறுதி கூறுகின்றேன் என்று பிரமாணம் எடுத்துள்ளார். (பா)

# இந்து நங்கை இன்று வெளியீடு

மரபுவழி ஆற்றுகைக்கழக ஆரம்ப விழாவும் இந்து நங்கை வெளியீடும் இன்று காலை 10.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறும்.

செல்வி கஜவாணி கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ந-8)

# இன்று ஒரு தகவல்

## ஆணவக்குரங்கு!!

ஒரு காடு. அங்கே புத்தர் ஒருவர் நடந்து போய்க் கொண்டிருந்தார்.

அவருக்குப் பின்னால் ஒரு குரங்கு தொடர்ந்து சென்று கொண்டிருந்தது.

புத்தர் திரும்பிப் பார்த்தார். குரங்கு அப்படியே குதித்து உயரே எழும்பி ஒரு கிளையிலே போய் உட்கார்ந்து கொண்டது.

"ஏன் இப்படி செய்கிறாய்?" என்று கேட்டார் புத்தர்.

"என்னை சாதாரணமாக நினைக்க வேண்டாம்... நான் மகா மந்தி... என்னாலே எல்லாம் முடியும்... முடியாது என்ற வார்த்தையே என்னுடைய அகராதியிலே கிடையாது" என்றது.

"அப்படியென்றால் ஒரு பந்தயம் வைக்கலாமா?" என்று கேட்டார்.

"ஓ... வைத்துக் கொள்ளலாமே" என்றது.

"வேறு ஒன்றுமில்லை... இப்போது நீ மேலே எழும்பி அந்தக் கிளையிலே உட்கார்ந்தது மாதிரி... அங்கேயிருந்து தாவி என் உள்ளங்கையிலே வந்து உட்கார வேண்டும்..." என்றார்.

"அப்படி உட்கார்ந்து விட்டால் என்ன பரிசு?"

"சுவர்க்கத்திலே இருக்கிற மாமன்னன் மரகதச் சக்கரவர்த்தியை என்னுடன் வந்து இருக்கும் படியாக அழைத்துள்ளேன். அந்தச் சமயத்திலே அவருடைய அரியணை அங்கே வெற்றிடமாகிவிடும். நீ அதில் போய் உட்கார்ந்து கொள்ளலாம்."

குரங்குக்குத் தாவுகிறது ஒரு பெரிய காரியமா? இது எனக்கு மிகவும் சாதாரண விடயம்... என்ன இப்போதே தாவட்டுமா? என்றது.

"சரி" என்று கூறிவிட்டு, உள்ளங்கையை நீட்டினார். அவருடைய கை தாமரை இலை அளவுக்கு விரிந்தது... குரங்கு சௌகரியமாக வந்து உட்காருவதற்காக!

குரங்கு தாவுகிறதற்கு தயாரானது. அதற்கு முன்பு ஒரு சிறிய யோசனை...

"என்னுடைய கௌரவத்துக்கு இது சரியாக இருக்காது. அதனாலே இங்கே இந்தக் கிளையிலேயிருந்து உயரே எழும்பி மேலுலகம் போய் அங்கே ஒரு சுற்று சுற்றிவிட்டு அங்கேயிருந்து வந்து விடலாமே!" என்று நினைத்தது.

"என்ன யோசனை செய்கிறாய்?" என்று புத்தர் கேட்டார்.

ஒன்றுமில்லை. இதோ பாய்கிறேன் என்று சொல்லி தாவி உயரே போனது... சிறிது நேரத்திலே வானுலகத்துக்கே போனது. அங்கே ஐந்து பளிங்குத் தூண்கள்... இளஞ்சிவப்பு நிறத்திலே நிறுத்தப்பட்டிருந்தது.

குரங்கு நினைத்தது... "புத்தரிடம் போய் இந்தப் பளிங்குத் தூண்கள் பற்றி கூறினால் அவர் திகைத்துப் போய் விடுவார்... இந்த தூணிலே ஏதாவது அடையாளம் செய்து விட்டு போக வேண்டுமென்று அந்தரத்திலே மிதந்து கொண்டே நினைத்தது.

உடனே ஒரு தூணிலே... எழுதியது. "ஒரு மகா ஞானி இங்கே வந்துவிட்டுப் போனார்! என்று எழுதி விட்டு அப்படியே கீழே தாவி வந்து புத்தரின் உள்ளங்கையிலே உட்கார்ந்தது!"

"எப்படி பார்த்தீர்களா? வானுலகத்திற்கே போய் அங்கே இருக்கிற ஐந்து பளிங்குத் தூண்களைப் பார்த்து விட்டு அதிலே நான் வந்த விபரத்தையும் எழுதி வைத்துவிட்டு வந்துள்ளேன்" என்றது.

"அப்படியா?" என்றார் புத்தர்.

"ஆமாம்... சந்தேகமாக இருந்தால் வாருங்கள். அழைத்துக் கொண்டுபோய் காட்டுகிறேன்" என்றது குரங்கு.

"அது ஒன்றும் தேவையில்லை... அப்படியே சற்று கீழே குனிந்து பார்!" என்றார் புத்தர். குரங்கு பார்த்தது.

அங்கே புத்தரின் உள்ளங்கை தெரிந்தது. நன்றாக உற்றுப் பார்த்தது... அவரின் ஒரு விரலில் அது எழுதிய வாசகம் தெரிந்தது.

குரங்கு யோசனை செய்ய ஆரம்பித்தது.

"அப்படியென்றால்... வானுலகில் நான் பார்த்தது புத்தருடைய விரல்களா?"

இதை விளங்கிக் கொண்டவுடனேயே அந்தக் குரங்கின் கர்வம் அழிந்து போனது.

எமது மனம்தான் இந்தக் குரங்கு. "மனம்" என்பதும்; "ஆணவம்" என்பதும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள். மனம் உள்ளவரை ஆணவமும் இருந்தே தீரும். மனம் அழிந்தால் தான் ஆணவமும் அழியும்.

மனம் அழிய வேண்டுமென்று பெரியவர்கள் சொல்வது இந்த அர்த்தத்திலேதான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# திருஞானசம்பந்தர் ஆதீனத்திற்கான புதிய தலைமை கட்டட அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

திருஞானசம்பந்தர் ஆதீனத்திற்கான புதிய கட்டடம் 4 கோடி ரூபா செலவில் மீள் நிர்மாணம் செய்யப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று இடம்பெற்றது. மீள் நிர்மாணம் செய்யப்படவுள்ள திருஞானசம்பந்தர் ஆதீனத்திற்கான தலைமை கட்டடத்திற்கான நிதியினை லண்டன் வாழ்கின்ற புலம் பெயர் தமிழர்கள் வழங்குகின்றனர் என திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித் துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நல்லை ஆதீனத்திற்கான தலைமை கட்டடம் அமைக்கும் பணிக்கென இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்த லண்டனில் வாழ்ந்துவரும் தமிழர்கள் நான்கு கோடி ரூபாவை வழங்குகின்றனர்.

இதற்கு அகில இலங்கை இந்து மாமன்றம் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது.

நீண்டகாலமாக ஆதீனத்திற்கான புதிய கட்டடம் அமைக்கும் முயற்சியில் நாம் ஈடுபட்டு வந்தோம். கட்டடம் அமைக்கும் பணி பல முறை தடைப்பட்ட போதும் தற்போது ஆரம்பித்துள்ளது மகிழ்ச்சியளிக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அடிக்கல் நாட்டும் நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் இந்து சிரோத்தினம், மனிதநேய மாமணி வி. கைலாசபிள்ளை, செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரி யருமான பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ் .பல்கலைக்கழக இந்து நாகரித் துறை பேராசிரியர் க.வேதநாதன் பேராசிரியர் சி.சத்தியசீலன், முன்னாள் யாழ். மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ-6)

# க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் இம்மாத முடிபுக்குள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. சாதாரண பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளுக்கு இம்மாத முடிபுக்குள் அனுப்பி வைக்கப் படுமென்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவிக்கின்றார்.

பரீட்சை டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகி 21 ஆம் திகதி வரை நடைபெறும். 16 வயதைப்பூர்த்தி செய்துள்ள மாணவர்கள் தமது அடையாளத்தை நிரூபிப்பதற்கு தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.

ஏனையோர் தபால் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் அடையாள அட்டையை சமர்ப்பிக்க முடியும்.

இந்த ஆண்டு பரீட்சைக்கு தோற்றுவதற்கு 5இலட்சத்து 50 ஆயிரம் பேர் தகுதி பெற்றுள்ளனர்.

நாடெங்கிலும் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் மேற்பார்வையில் 2 ஆயிரத்து 500 செயலமர்வுகளும் நடைபெறுகின்றன. (அ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 120 | 130 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 130 | 140 | 120 |
| தக்காளி | 80 | 70 | 80 |
| மரவள்ளிக் கிழங்கு | 20 | 40 | 30 |
| கோவா | 30 | 60 | 40 |
| கரட் | 100 | 120 | 60 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 40 | 60 | 30 |
| வாழைக்காய் | 30-35 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 90 |
| பெரிய வெங்காயம் | 75 | 70 | 80 |
| பாகற்காய் | -- | 180 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 |
| கருணைக் கிழங்கு | 70 | 90 | 60 |
| பயற்றங்காய் | 60 | 120 | 100 |
| லீக்ஸ் | 25 | 40 | 30 |
| பீற்றூட் | 15 | 30 | 20 |
| கறிமிளகாய் | -- | 90 | 60 |
| முருங்கைக்காய் | 40 | 90 | 50 |
| போஞ்சி | -- | 140 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 100 | 90 |
| கீரை - 1 பிடி | 15 | 30 | 20 |
| தேசிக்காய் | 260 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 20-35 | 30 | 30 |

# இராசி பலன்

*08.11.2011*
*(ஐப்பசி 22, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு*
*திரயோதசி முன்னிரவு 10.23 மணிவரை*
*ரேவதி பின்னிரவு 3.04 மணிவரை*
*இராகுகாலம் 3.05-4.35 மணிவரை*
*சுபநேரம் 10.35-12.05 மணிவரை*
*பிரதோச விரதம்.*

**மேடம்** தொழில் நலன் கருதி வெளியூர் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை அமையும், கொடுக்கல்-வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், அஞ்சல் வழியில் ஆச்சரியமான செய்திகள் வந்து சேரலாம், தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும்.

**மிதுனம்** தொட்ட காரியம் வெற்றி பெறும், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், தந்தை வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும், அரசு வழியில் எதிர் பார்த்த சலுகைகள் வந்து சேரலாம்.

**கடகம்** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், மங்கையரால் ஏற்பட்ட மனக்கலக்கம் மாறும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், உடல் நலம் சீராகும்.

**சிங்கம்** சஞ்சலங்கள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, உடல் நலனில் கவனமெடுக்க வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர், தன்னம்பிக் கையோடு செயற்படுவீர்கள், விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**துலாம்** தொழில் வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்,பூர்வீகச் சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும்.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே வந்து சேரும், வாகன பழுது பார்த்தல் செலவுகள் அதிகரிக்கும், தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும்.

**கும்பம்** நன்மைகள் நடைபெறும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், வாக்கு மேன்மையுண்டு, வரவேண்டிய தொகைகள் வந்து சேரலாம்.

**மீனம்** பொருளாதார நலன் கருதி வெளியூர் பயணமொன்றை மேற்கொள்வீர்கள், எப்படி நடக்கமோ என நினைத்த காரியம் நல்லபடியாக நடைபெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

வளவன்

## பரிசளிப்பு விழா

(உடுப்பிட்டி)

யா/ தொண்டைமானாறு வீரகத்தி பிள்ளை மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் இரா.ஸ்ரீநடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வல்வெட்டித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் சி.ஸ்ரீகாந்தன், வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி றொசற் தவநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி புஸ்பகுமாரி புஸ்பலிங்கம் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (அ-3-52)

* * * * * *

(சாவகச்சேரி)

சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி ச.தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி எஸ்.ஆர். சத்தியேந்திரம்பிள்ளை கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக சரசாலை வடக்கு கிராம சேவையாளர் முல்லைமாறன், பிரபல வர்த்தகர்களான வே. நகுலேஸ்வரன், க.சுதாகரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-29)

## ஆதார வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் பற்றாக்குறை

(கரவெட்டி)

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் வைத்திய பற்றாக்குறையினால் நோயாளிகள் தொடர்ந்தும் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வடமராட்சி பிரதேசத்தில் ஆதார வைத்தியசாலையாக இவ்வைத்தியசாலை விளங்குகின்றது. இதனால் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை, கரவெட்டி அம்பன் பிரதேச வைத்தியசாலை மற்றும் ஏனைய பிரதேச வைத்தியசாலைகளில் இருந்து நோயாளிகள் இவ்வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்படுகின்றனர்.

இவ்வைத்தியசாலைக்கு 50 வைத்தியர்கள் தேவையான நிலையில் தற்போது 13 வைத்தியர்களே கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் வெளிநோயாளர் பிரிவில் வைத்தியர் பற்றாக்குறையினால் பொதுமக்கள் நீண்ட நேரம் காத்துநின்று சிகிச்சை பெற வேண்டிய அவல நிலையும் உள்ளது. மற்றும் ஏனைய வைத்திய பிரிவுகளுக்கும் இதுபோன்ற குறைபாடுகள் காணப்படுகின்றது.

எனவே, மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் இவ்வைத்தியசாலைக்கு வைத்தியர்களை நியமித்து மக்கள் வைத்திய நலனை பாதுகாக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

## நல்வாழ்வு கூட்டுறவு சங்க கிளை தென்மராட்சியிலும்

(சாவகச்சேரி)

வரையறுக்கப்பட்ட நல்வாழ்வு கூட்டுறவுச் சங்கமானது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள்,குடும்பத்தலைவரை இழந்த பெண்கள் உட்பட வறிய நிலையில் உள்ளவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் தென்மராட்சியில் தனது கிளையை ஆரம்பித்துள்ளது.

வடமாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதற் கிளை இதுவாகும். தென்மராட்சி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்கு பொறுப்பாக உருவாக்கப்பட்ட குழுவின் தலைவராக சாவகச்சேரி நகர சபையின் உபதலைவர் கு.சடாசிவமூர்த்தி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும் உறுப்பினர்களாக டாக்டர் எல்.எஸ். அருளானந்தம், சாவசச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ், சாவகச்சேரி லயன்ஸ் கழக தலைவர் லயன்.கே.பிரதீபன், சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் க.சுதர்சன்,சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்தி சங்க செயலாளர் திருமதி ம.கீர்த்திநாதன், செல்வி ய.புகழேந்தி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

## கிறிஸ்தவ மாநாடு

(யாழ்ப்பாணம்)

தேசிய கிறிஸ்தவ ஒன்றியம் நடத்தும் ஒன்றிப்பின் மேன்மை மகாநாடு நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய அருகாமையிலுள்ள ரிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு அனைத்து திருச்சபையினதும் போதகர்கள், ஊழியர்கள், விசுவாசிகளையும் வருகை தருமாறு தேசிய கிறிஸ்தவ ஒன்றியத்தின் யாழ். மாவட்ட தலைவர் போதகர், சலமோன் டிக்ஸ்சன் கேட்டுள்ளார். (அ)

## தேசிய மரநடுகை திட்டம்

(சாவகச்சேரி)

தேசிய மரநடுகை திட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி காலை 9 மணி ஒரு நிமிடத்திற்கு நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இத்திட்டத்திற்கென நல்லூரில் உள்ள பிராந்திய மரக்கூட்டுத்தாபனத்தின் நடுகைக்கான கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளது. இம்மரக்கன்றுகள் பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (அ-3-2

## ஒளிவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஒளிவிழா நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் நாகேந்திரராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வுகளை பாடசாலை கிறிஸ்தவ மன்றத்தினர் ஒழுங்கமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)




## நிர்வாக தெரிவு

(தளங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்ட சம்மேளனத்திற்கான நிர்வாக தெரிவு நேற்று மாவட்ட காரியாலயத்தில் நடைபெற்றது.தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வடமாகாண பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி, மாவட்ட அதிகாரி திருமதி வினோதினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சம்மேளனத்தின் தலைவராக க.நவதர்சன்,செயலாளராக வினோதினி,பொருளாராக யோ.நஜீரதன்,அமைப்பாளர்களாக கி.சுதாகரன், விளையாட்டுப்பிரிவு செயலாளராக யுவராஜ்,கலாசார துறைக்காக க.வினோதினி, தொழில் முயற்சி அ.சிவராமலிங்கம், ஊடகமும் தகவலும் தி.விமலதாஸ், தேசிய சேவை க.ஜெயரூபி, கல்வி பயிற்சி கோகுல்ராஜ்,தொழில் வழிகாட்டல் ஆலோசனை அ.குணேஸ், கணக்கு பரிசோதகராக ச.ஜெறின்சன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (அ-37)

## சாவகச்சேரி பூதவராயர் ஆலயத்தில் சிலை திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரியிலுள்ள பூதவராயர் ஆலயத்தின் பழைமைவாய்ந்த பிள்ளையார் உருவச்சிலை திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரிய வருவது, கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை ஆலயத்துக்கு வழிபட சென்ற பொதுமக்கள் ஆலய கதவு உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்த போதே மேற்குறித்த சிலை திருடப்பட்டது தெரியவந்துள்ளது.

அதேதினம் அண்மையிலுள்ள கந்தசாமி ஆலயத்திலும் கதவுகள் உடைக்கப்பட்டிருந்த போதும் களவுகள் எதுவும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(அ-3-29)

## வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)

பருத்தித்துறை தெருமூடி மடம் தும்பளை செல்லும் வீதி பாரிய குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் வீதியால் பயணிக்க முடியாது நடந்து செல்ல வேண்டிய அவலநிலையும் உள்ளது.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழகத்திற்கு முன்னாள் உள்ள இவ்வீதியானது பாரிய குழிகளுக்குள் மழைநீர் தேங்கி பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதனால் பாடசாலை மாணவர்களே அதிகமாக பாதிக்கப்படுகின்றனர்.

இது தொடர்பாக பலமுறை உரிய அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டும் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வீதியை புனரமைத்து மக்களின் போக்குவரத்துக்கு உதவ முன்வர வேண்டுமென்ன அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

## மக்கள் நலன் பேணும் நட்புறவு கழகத்தால் உதவிகள்

(நல்லூர்)

நெதர்லாந்து நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் கைதடியை சேர்ந்தவர்களின் நிதியுதவியுடனும் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தால் கைதடி பகுதியில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 8 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா பணமும் படுக்கை விரிப்புகளும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் விசேட தேவையுடைய மாணவர்கள் 12 பேருக்கு தலா ஆயிரத்து 500 ரூபாவும் டென்மார்க்கில் புலம்பெயர்ந்து வாழும் கைதடியைச் சேர்ந்தவர்களால் கைதடியைச் சேர்ந்த க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள 22 மாணவர்களுக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-3-134)







கரணவாய் தாமோதரா வித்தியாலய நூற்றாண்டு விழா அண்மையில் பாடசாலை அதிபர் ஏ.குருகுலலிங்கன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் பாடசாலை அதிபர் சஞ்சிகையினை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பிரதி அதிபர் அ.அரியரத்தினத்திடம் கையளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.செல்வதீபன்)





நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆலய வழிபாடு இடம்பெறுவதையும் ஆதீனக்கொடியை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஏற்றிவைப்பதையும் அடிக்கல் நாட்டப்படுவதையும் படங்களில் காணலாம்.
*(படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)*

# இனப்பிரச்சினை இல்லை என்று கூறுபவர்கள் மதப்பிரச்சினையை தூண்ட முயற்சிக்கின்றனர்

## யோகேஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு

இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லையென்று கூறுபவர்கள் மறைமுகமாக மதப்பிரச்சினையை தூண்ட முயன்று வருவதாகவும் தமிழர்களின் கலை, கலாசாரம், பண்பாடுகள் திட்டமிடப்பட்ட முறையில் அழிக்கப்பட்டு வருவதாகவும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார். களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டிலே நாங்கள் பூர்வீகக் குடிகள். ஆனால், இந்நாட்டில் பல பகுதிகளில் கடந்த சில வருடங்களாக கலாசார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் சமய ரீதியாகவும் நாங்கள் அடக்கப்பட்டுள்ளோம், ஒடுக்கப்பட்டுள்ளோம், ஒடுக்கப்பட்டும் வருகின்றோம். அழிக்கப்படுகின்ற நிலைமைகூட உருவாக்கப்பட்டு வருகின்றது.

தற்போது வந்தேறுகுடிகளாக பெரும்பான்மை இனத்தின் அரசியல்வாதிகள் எம்மை சித்தரித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை குறிப்பாக நாங்கள் உணர்ந்து கொள்ள வேண் டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்த சூழலைப் பயன்படுத்தி 23 விகாரைகள் இராணுவ முகாம்களில் அமைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அரண்கள் உள்ள இடங்களில் இவ்விகாரைகள் ஸ்தாபிக்கப்பட்டு வழிபாடுகள் இடம்பெறுகின்றன. நாளடைவில் இது எங்களது பூர்வீக இடம் என்று சொல்லி உறுதிப்படுத்த நடவடிக்கைகள் திட்டமிட்டு எடுக்கப்பட்டு வருகின்றது.

1948 ஆம் ஆண்டிற்கு முன்னர் இங்கு ஆட்சி புரிந்த மேலை நாட்டார் இந்த நாட்டை ஒப்படைக்கும் போது தமிழ்ச் சமூகத்திடமும் சிங்களச் சமூகத்திடமும் சேர்த்துத்தான் ஒப்படைத்தார்கள். அதன் பிற்பாடு இல்லாத துன்பம் கடந்த சில ஆண்டுகளாக நாங்கள் அனுபவிக்கின்றோம்.

எங்களது வாழ்விடங்கள் பறிக்கப்படுகின்றது, கலாசாரம் பறிக்கப்படுகின்றது. இன்று இந்துக் கோயில்களைக் கூட இடித்து பௌத்த விகாரைகள் கட்டியிருக்கிறார்கள். இது எங்கள் கலாசாரத்திற்கு ஏற்பட்ட பெரும் பாதிப்பு. பழங்காலத்தில் அரசாண்ட தமிழ் அரசர்கள் பௌத்த மதத்தை அனுசரித்தார்கள். பௌத்த மதத்திற்கு உதவினார்கள், பௌத்த விகாரைகள் அமைப்பதற்கு உதவினார்கள், அதே போல் சிங்கள அரசர்கள் இந்து மதத்திற்கு உதவினார்கள், இந்துக் கோயில்கள் ஸ்தாபிப்பதற்கு உதவினார்கள் இது வரலாறு.

எங்கள் தமிழ் மக்களின் பூர்வீக கலாசார பாரம்பரியத்தை சித்தரிக்கின்ற வரலாற்றுச் சான்றுகளைக் கொண்ட தொல்பொருட்கள் கூட இன்று வாசிப்பதற்கு யாருமில்லாத நிலையில் இருக்கின்றது என்றார். (அ)

## இறுவெட்டு வெளியீடு


யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி மாணவர்களின் கிப்றஸ் ஆங்கில பாடல்களிற்கான இறுவெட்டு வெளியீட்டு விழா நாளை காலை 8 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/ கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி அதிபர் எஸ்.கே.யோகநாதன், சிறப்பு விருந்தினராக வணக்கத்துக்குரிய போதகர் எஸ். ஆர். ஜெயரட்ணம் மற்றும் வைத்தியர் லயன் வை. தியாகராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இவ் இசைத் தொகுப்பின் முதல் இறுவெட்டினை யா/ வட்டுக்கோட்டை கல்லூரி உப அதிபர் என். விக்ரர் ஜெயக்குமாரும் விசேட பிரதிகளைப் பிரதேச செயலக முன்னாள் முகாமைத்துவ உதவியாளர் ஏ.வரதராஜா, டி.எஸ்.ஐ.நிறுவனத்தின் யாழ். பிராந்திய முகவர் கே. ஸ்ரீபதி, ஆங்கில ஆசிரியர் எஸ்.பிரஷ்னன் ஆகியோரும் பெறவுள்ளனர். இறுவெட்டிற்கான ஆசியுரையினை கல்லூரி உப அதிபர்களான ஜே. தியாகலிங்கம் மற்றும் எஸ். சிவபாதம் ஆகியோரும் பாடல்களிற்கான திறனாய்வினை சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆங்கில ஆசிரியர் கே. ஜெயவீரசிங்கமும் ஆற்றவுள்ளனர். (அ)

# அரசாங்கம் ஜனநாயகத்தை மீறினால் மக்கள் எழுச்சி ஏற்படும்

## ஐ.தே.க. எச்சரிக்கை



(கொழும்பு)

செயற்பாடு குறைந்த நிறுவனங்கள் மற்றும் பயன்பாடு குறைந்த சொத்துக்களை சுவீகரித்தல், சட்டத்தை அறிமுகப்படுத்தல் போன்ற செயற்பாடுகளால் அரசாங்கம் ஜனநாயகத்தை மீறுமாயின் மக்கள் எழுச்சி ஏற்படும் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.

சிம்பாவேயில் எதேச்சாதிகார ஆட்சியாளர் றொபேர்ட் முகாபேயும் அந்நாட்டின் சொத்துக்களை சுவீகரிப்பதற்கு இதுபோன்ற சட்டங்களை அறிமுகப்படுத்தியதாக ஐ.தே.க. பிரதித்தலைவர் கருஜயசூரிய நேற்று செய்தியாளர் மாநாடொன்றில் கூறினார்.

1956ஆம் ஆண்டு தனியாருக்குச் சொந்தமான பெருந்தோட்டங்கள், பேருந்துக் கம்பனிகள், சுரங்கங்கள் என்பன அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டபோது உள்நாட்டு தொழிற்துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டது எனவும் தற்போதைய அரசாங்கம் மீண்டும் அத்தவறை செய்ய முயற்சிக்கிறது எனவும் கருஜயசூரிய கூறினார்.

இந்தியாவில் ஆட்சியாளர்கள் ஒருபோதும் அப்படிச் செய்யவில்லை. அவர்கள் தொழில் முனைவோரையும் முதலீட்டாளர்களையும் ஊக்குவித்தனர். அதனால்தான் பிர்லா, டாடா போன்ற உலகப் புகழ் பெற்ற கோடீஸ்வரர்கள் உருவானார்கள் எனவும் கருஜயசூரிய தெரிவித்தார்.

இலங்கையில் சில தொழிலதிபர்கள் 1956ஆம் ஆண்டின் தவறுக்குப்பின்னரும் எல்லாப் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு தலைதூக்கினர்.

செவனகல சீனித்தொழிற்சாலை உரிமையாளர் தயா கமகே, பெல்வத்தை சீனித்தொழிற்சாலை உரிமையாளர் ஹரி ஜயவர்த்தன ஆகியோரும் அவர்களில் இருவராவார் என கருஜயசூரிய கூறினார். (அ-2)

# நாசா விஞ்ஞானிகளால் அதிசய நட்சத்திரமொன்று கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் பெர்மி காமா கதிர் தொலைகாட்டி மூலம் விண்வெளியில் ஆய்வு மேற்கொண்டுள்ளனர். அப்போது அதிசய நட்சத்திரத்தை கண்டுபிடித்தனர்.

அது மிகவும் வெளிச்சமாக உள்ளது. அதிகவேகமாக சுழன்று வருகின்றது. அது உருண்டையாக ஒன்று சேர்ந்து திரண்டு இருப்பது போன்று காட்சி அளிக்கின்றது.

அந்த நட்சத்திரத்துக்கு ஜே/1823-3021 ஏ என பெயரிட்டுள்ளனர்.

இது பூமியில் இருந்து 27 ஆயிரம் வெளிச்சம் மைல் தொலைவில் உள்ளது. இதன் வயது 2 1/2 கோடி வருடம் என கணித்துள்ளனர்.

இந்த நட்சத்திரம் அதிசக்திவாய்ந்த காமா கதிர்களை வெளியேற்றுகின்றது. இதை வைத்து விஞ்ஞானிகள் மேலும் பல நட்சத்திரங்களை ஆய்வு செய்து வருகின்றனர். (அ-2)





# அறிவித்தல்

**ஐயப்பன் புனித மாலை அணிந்து விரதம் இருப்பவர்கள் எமது இல்லத்தில் பெயரை பதிந்து கொள்ளவும்.**

**உரும்பிராய் சிவதர்ம சாஸ்த்தா ஆலயத்தில் 17.11.2011 முதல் 15.01.2012 வரை மாலை 4 மணிக்கு அபிஷேகம், பூசை, பஜனை, படிப்பூசை இடையில் 10 நாட்கள் உற்சவம் நடைபெறும்.**

**சபரி யாத்திரை செல்ல முடியாதவர்கட்கு யாழ்/ கட்டுவன் ஐயப்பன் ஆலயத்திற்கு இருமுடி கட்டி 18 படி ஏறி தரிசன காட்சிதர வசதி செய்து தரப்படும்.**

ஆதீனம்,
குருசுவாமி
தா.வாசுதேவ சிவாச்சாரியார்,
உப்பு மடச்சந்தி, கோண்டாவில் மேற்கு.

(6752)

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை




லண்டன் 640/=
பிரான்ஸ் 690/=
ஜேர்மனி 690/=

72 மணிநேரத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்

எம் ஊடாக அனுப்பப்படும் சகல பொதிகளுக்கும் 100% சுங்கதீர்வை (Customs Duty) விலக்கு உண்டு.

கடலுணவுப் பொருட்கள், எண்ணை வகைகள், மருந்துப் பொருட்கள் என்பனவும் அனுப்பி வைக்கப்படும்.

உலகின் முன்னணி கூரியர் சேவை நிறுவனத்தின் முகவர்

**Arrul Global Express**
International Courier & Cargo Service
T.P : 021 222 6113
இல. 01 பிறவுண் வீதி
நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
(சி/4925)

# த.தே.கூட்டமைப்பினர் கிழக்கு மாகாணத்தை தொடர்ந்து புறக்கணித்து வருகின்றனர்

## பிரதி அமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் தொடர்ந்தும் கிழக்கு மாகாணத்தை புறக்கணித்தே வந்துள்ளனர் என மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சமுர்த்தி உற்பத்தி மற்றும் விற்பனை கண்காட்சியின் இரண்டாம் நாள் நிகழ்வுகளில கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதியமைச்சர் முரளிதரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் கிழக்கு மாகாணத்தை குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தை தொடர்ந்து புறக்கணித்து வருகின்றனர் என்பதற்கு நல்ல உதாரணம் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஐரோப்பிய விஜயத்தின் போது கூட்டமைப்பைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை சேர்த்து கொள்ளாமையைக் குறிப்பிடலாம்.

ஆனால், கிழக்கு என்ற ஒரு காரணத்திற்காக மட்டக்களப்பை இவர்கள் புறக்கணித்துள்ளனர்.

கிழக்கை இவர்கள் புறக்கணிப்பது இன்று மட்டுமல்ல தொடர்ந்து செய்துவரும் நடவடிக்கையாகும்.

இராஜதுரையை புறக்கணித்தார்கள் விடுதலைப்புலிகள். நான் கிழக்கு என்பதற்காக என்னைப் புறக்கணித்தார்கள்.

இவ்வாறு காலாகாலமாக இவர்களின் கிழக்கு புறக்கணிப்பு இடம் பெற்றுக் கொண்டே இருக்கின்றது.

கடந்த 30 வருடகால யுத்தத்தின் போது கிழக்கு மாகாண மக்கள் எவ்வாறு இவர்களினால் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

இன்று இலங்கையின் மிகப்பெரிய இரண்டாவது குடிநீர் விநியோகத் திட்டம் ஜனாதிபதியினால் அண்மையில் வவுணதீவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்பகாலத்தில் நான் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருக்கும் போது இந்த உன்னிச்சை குடிநீர் திட்டத்திற்கு அதிகாரிகள் என்னிடம் அனுமதி கேட்டபோது அந்த அனுமதியினை எழுத்தில் எழுதிக் கொடுத்ததுடன் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் அப்போது உன்னிச்சைப் பிரதேசம் இருந்தபோது அதிகாரிகளை அழைத்துச் சென்று அத்திட்டத்தை பார்வையிட்டேன்.

மக்களின் நன்மைக்காகவே நான் செயற்பட்டேன். கிழக்கு மாகாணத்தில் இன்று ஜனாதிபதியால் பாரிய அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வரலாற்றில் என்றுமில்லாதவாறு மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அரசாங்கம் பெருந்தொகையான பணத்தினை ஒதுக்கீடு செய்துள்ளது எனவும் தெரிவித்தார்.

(அ-2)

# வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு-குருநாகல் வீதியில்-திவிலுபிட்டி- பர வாவில சந்தியில் நேற்று காலை 7.45மணி அளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதோடு மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

கென்டேனர் ஒன்றும் முச்சக்கர வண்டியும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.விபத்தில் முச்சக்கர வண்டி சாரதி மற்றும் அதில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளனர். (அ-2)

# காஸ் விலையில் திருத்தம் மேற்கொள்ள கோரிக்கை

சமையல் எரிவாயுவின் விலையில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு நுகர்வோர் அதிகார சபையிடம் காஸ் நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதனால் காஸின் விலை அதிகரிக்கும் சாத்தியம் ஏற்பட்டுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

உலக சந்தையில் காஸின் விலை அதிகரித்துள்ளதை அடுத்தே காஸின் விலையில் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்று நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. உலக சந்தையில் ஒக்டோபர் மாதம்791 டொலராக இருந்த ஒரு மெற்றிக்தொன் காஸ் நவம்பர் மாதம் ஒரு டொலரினால் அதிகரித்துள்ளதாக காஸ் நிறுவனங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. (அ-2)

# பாரதவின் கொலையுடன் தொடர்புடைய நபர் சரண்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பாதாள உலகக் குழு உறுப்பினர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

ரோல்பாரே சஞ்சீவ் என அழைக்கப்படும் பிரபல பாதாள உலகக் குழு உறுப்பினரும் சரணடைந்துள்ளார்.

மனித படுகொலைகள், போதைப் பொருள் வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு பாரிய குற்றச் செயல்களுடன் குறித்த நபர்களுக்கு தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கொழும்பு புளுமெண்டல் வீதி மற்றும் கிராண்ட்பாஸ் ஆகிய பிரதேசங்களில் மையமாகக் கொண்டு குறித்த நபர்கள் குற்றச் செயல்களை மேற்கொண்டு வந்ததாக குறிப்பிடப்படுகிறது.

பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த இருவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (அ-2)

# இலங்கை மத்திய வங்கி வெளிநாடுகளில் கட்டடங்களை கொள்வனவு செய்ய முடிவு

(அ-2)

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி வெளிநாடுகளில் கட்டடங்களை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளது. வெளிநாடுகளில் இயங்கி வரும் இலங்கை இராஜதந்திர அலுவலகங்களுக்கு இந்தக் கட்டடங்கள் வாடகைக்கு விடப்பட உள்ளன.

முதல் கட்டமாக இலங்கை மத்திய வங்கி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கட்டடமொன்றை கொள்வனவு செய்துள்ளது. நியூயோர்க்கில் 12 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவுடைய கட்டடமொன்றை மத்திய வங்கி கொள்வனவு செய்துள்ளது.

645 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கட்டடம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய நாடுகளின் இலங்கை வதிவிட அலுவலகத்திற்கு இந்த கட்டடம் வாடகைக்கு விடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சிற்கும் மத்திய வங்கிக்கும் இடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

(அ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்றைய எமது கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பாடசாலைக்கு பெருமை தேடித்தந்த மாணவர்களை வாழ்த்துகின்றோம்.

பல்கலைக்கழக அனுமதி 2010/2011

1.ச.தனுசன்- Food Science & Nutrition
2.இ.கோபிக்கண்ணா- Science & Technology
3.சு.சுகிர்தரூபன்- Agriculture
4. க.ஸ்ரீரூபன்- Physical Science
5.ச.வனுராகினி- Applied Science(Bio)
6.த.கிரீந்திரன்- Pharmacist
7.இ.பிருந்தா- Arts
8.ஸ்ரீ.பத்மகரன்- Arts
9.தே.சோபனா- Arts

கல்வியியற் கல்லூரி அனுமதி 2010/2011

1. நி.தனஞ்செனி
2. வை.ரம்யா
3. ந.பாசினி

விளையாட்டு

1.நா.சுமன் (13 வயது) 100m, 200m, 400m -மாகாண மட்ட சம்பியன்
2. ஜெ.மயூரா (19 வயது)200m-மாவட்ட மட்டம் 2 ஆம் இடம்
3.தே. சுஜீவன் (21 வயது)200m-மாவட்ட மட்டம் 3ஆம் இடம்
4. கரப்பந்து 19 வயது பெண்கள் - மாவட்ட மட்டம் 3 ஆம் இடம்

விசேட பரிசுகள்

1. மு.குயிலரசி- கவிதை (பிரிவு-4) மாவட்டமட்டம் முதலாம் இடம்
2.ந.ஜெயவானுஜன்- கவிதை ஆக்கம் தேசிய மட்டம் முதலாம் இடம்
3. செ. சாருண்யா-கவிதை ஆக்கம் தேசிய மட்டம் 3 ஆம் இடம்

பிரதம சாரணர் ஆணையாளர் விருது பெற்றோர்

1. பா. அருணன்
2. பா. அஜந்தன்
3. ப.வேணுஜன்

வாழ்த்துவோர்:-
அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
பழையமாணவர் சங்கம்.

(6753)


# முன்னாள் பிரதம நீதியரசர் தவறான தீர்ப்பை வழங்கினார்

## எஸ்.பி. திஸாநாயக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தவறான தீர்ப்பினை வழங்கியதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அறுவடை நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட உரையாற்றிய போது, உச்ச நீதிமன்றத்தை அவதூறு செய்ததாக தெரிவித்த எஸ்.பி. திஸாநாயக்கவிற்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தமக்கு எதிராக தீர்ப்பு வழங்கப் படுவதற்கு பிரதம நீதியரசே காரணம் எனவும் ஏனைய நீதிவான்களை சரத் என் சில்வா தவறாக வழிநடத்தியதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தென் மாகாணத்தில் நடைபெற்ற அறுவடை நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்தத் தண்டனை விதிக்கப்பட்ட நீதிவான் குழாமில் தற்போதைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவும் அங்கம் வகித்ததாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

எஸ்.பி திஸாநாயக்க இது தொடர்பில் தற்போதைய பிரதம நீதியரசரிடம் கேட்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



08.11.2011 அன்று அலரி மாளிகையில் தாதியர் பட்டம் பெறும் எமது நண்பன் நிரோஜனின் மனைவி

கஸ்தூரி நிரோஜன்

அவர்களை அன்புடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
றுபேஸ்- சுகன்யா தம்பதிகள்.
றஜி அக்கா

(6750)

# பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு த.தே.கூ. ஆதரவு வழங்கும்

## எனது நம்பிக்கை என்கிறார் தினேஷ்



(கொழும்பு)

**இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை தயாரிக்கும் நோக்கில் அமைக்கப்படவுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆதரவு வழங்கும் என அரசாங்கம் நம்புகின்றது. அந்த நம்பிக்கையிலேயே அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது என ஆளும்கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

தமது மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் நோக்கில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு ஆதரவு வழங்க வேண்டுமென நம்புகின்றோம். மக்களின் நலன்கருதி முன்னெடுக்கப்படும் இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்க வேண்டியது எதிர்க்கட்சிகளின் கடமையாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை தயாரிக்கும் நோக்கில் அமைக்கப்படவுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு நியமனம் தாமதமடைந்து வருகின்றமை குறித்து கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தீர்வை தயாரிப்பதற்கான பாராளுமன்ற தெரிவுக்குழு நியமனம் விரைவில் இடம்பெறும். தற்போது தயாரிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள புதிய பிரேரணை விரைவில் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படும்.

பின்னர் இது தொடர்பில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஆராயப்பட்டு சபாநாயகரினால் தெரிவுக்குழு நியமிக்கப்படும். ஆனால், இந்த செயற்பாட்டுக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டியது அவசியமாகும்.

பாராளுமன்றத்தில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பாராளுமன்ற தெரிவுக்குழு விடயம் கலந்துரையாடப்படும்போது எதிர்க்கட்சிகள் தமது நிலைப்பாட்டை அறிவிக்கும் என எதிர்பார்க்கின்றோம். அதாவது தெரிவுக்குழு விடயத்துக்கு ஆதரவு வழங்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி இதுவரை தெரிவுக்குழுவை எதிர்ப்பதாக உறுதியாக தெரிவிக்கவில்லை. எதிர்க்கட்சிகள் ஆதரவு இன்றியும் தெரிவுக்குழுவை அரசாங்கத்தினால் நியமிக்கலாம். ஆனால், அவ்வாறு செய்வதற்கு அரசாங்கம் தயாராக இல்லை.

எது எவ்வாறு இருப்பினும் மக்களின் நலன்கருதியே அரசாங்கம் பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது. எனவே, முக்கியமாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பானது தமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் பொருட்டு இந்த தெரிவுக்குழு செயற்பாட்டுக்கு ஆதரவு அளிக்குமென எதிர்பார்க்கின்றோம். இந்த செயற்பாட்டுக்கு ஆதரவு வழங்க வேண்டியது கூட்டமைப்பின் கடமை என்றே கருதுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# சடலம் மீட்பு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதுர்நகர் கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கிய இனந்தெரியாத நபரொருவரின் சடலத்தை நேற்று முன்தினம் மாலை அக்கரைப்பற்று பொலிஸார் மீட்டுள்ளனர்.

சடலம் கறுப்புப் பொலித்தீன் பையால் சுற்றப்பட்டு பச்சை நிற இரும்புக் கம்பித் தகட்டில் சுற்றப்பட்ட நிலையில் காணப்பட்டதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவருக்கு சுமார் 35 வயது இருக்கும் என நம்பப்படும் நிலையில் இது வரை அடையாளம் காணப்படவில்லை. (அ)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதனால் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சி பிரதேசம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ)

# துணுக்காய் கல்வி வலயத்தின் வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடைபெற்ற போட்டி நிகழ்வில் பங்குபற்றி வெற்றியீட்டிய முதல் மூன்று மாணவர்களின் விபரம் துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் த.மேகநாதனால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**எழுத்தாக்கம்**

உ.ஜெனார்த்தனி (மு/ஆறுமுகம் வித்தி), ர. டியூமெக்வலா (மு/துணுக்காய் அ.த.க.பா), அ. கீர்த்தன் (மு/பாலிநகர் ம.வித்தி)

**வாசிப்பு (சிறுவர் கதை)**

அ.பிரதீபா (மு/முத்தையன்கட்டு வ.க. அ.த.க.பா), வி.தர்சிகா (மு/துணுக்காய் அ.த.க.பா), பா. திருவரங்கன் (மு/யோகபுரம் ம.வி),

**கனிஷ்ட இடைநிலைப்பிரிவு பொது அறிவுப்போட்டி**

யோ. துவாரகன் (மு/பாண்டியன்குளம் ம.வி), அ.பௌசிகா (மு/முத்தையன்கட்டு இ.க. அ.த.க.பா), இ.ரஜிந்தன் (மு/மல்லாவி ம.க)

**சுவரொட்டி**

ஜெ.தனுஷன் (மு/நட்டாங்கண்டல் அ.த.க.பா), வ.சாரங்கன் (மு/யோகபுரம். ம.வி), யோ. கயூரியா (மு/துணுக்காய் அ.த.க.பா)

**சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு சிறுகதையாக்கம்**

த.விதுஷா (மு/மாங்குளம் ம.வித்தி), தெ. யதுஸ்லா (மு/தண்டுவன் (அ.த.க.பா), எஸ். ஷாந்தினி (மு/நட்டாங்கண்டல் அ.த.க.பா.)

**ஓவியப் போட்டி**

மோ. குகன்ராஜ் (மு/முத்தையன்கட்டு வ.க. அ.த.க.பா.), த.துவாரகன் (மு/மல்லாவி ம.க), ந.கிஷாந்தன் (மு/மாங்குளம் ம.வி)

**மேற்பிரிவு கவிதையாக்கம்**

அ.சுஜன் (மு/மல்லாவி ம.க.), சி.பிரசா (மு/மாங்குளம் ம.வி), அ.சங்கீதா (மு/ஒட்டுசுட்டான் ம.வித்தி)

**ஓவியப் போட்டி**

யே. அருட்சிகன் (மு/மல்லாவி ம.க), அ.ஜெனிற் (மு/பாலிநகர் ம.வித்தி), ப.கனிஸ்ரன் (மு/முத்தையன்கட்டு வ.க. அ.த.க.பா.). (அ)

# சிறுவர்களின் துஷ்பிரயோகத்திற்கு அரசியல் தொடர்புகளும் காரணம்

## அனோமா திஸாநாயக்கா தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் இவ்வருடத்தில் மட்டும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 7 ஆயிரத்திற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக முறையிடுவதற்காக துரித தொலைபேசி சேவை உள்ளதாகவும் அதிகமான முறைப்பாடுகள் அதன் மூலமே ஊர்ஜிதம் செய்யப்படுவதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி அனோமா திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

சிறுவர்கள் பாலியல் தொடர்பில் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு அரசியல் தொடர்புகளும் காரணமாக இருப்பதாக மக்கள் நம்புவதாகவும் இதன் காரணமாகவே சந்தேக நபர்களுக்கு எதிராக முறையிடாமல் இருப்பதாகவும் கூறினார். தொடர்ந்தும் அவர்,

சிறுவர்கள் பாலியல் ரீதியாகவே அல்லது துன்புறுத்தலுக்குள்ளாக்கப்படுவது அவர்களின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் மற்றும் உறவுகளாலேயே என்றும் இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து பொலிஸாரும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் கவலை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். (அ)

# இலங்கை கடற்படையினர் தாக்கினரென இந்திய மீனவர்கள் குற்றச்சாட்டு

இராமேஸ்வரம் கடற்கரையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளையில் தாம் இலங்கை கடற்படையினரின் தாக்குதல்களுக்குள்ளானதாக இராம நாதபுரம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலின் போது மீனவரொருவர் காயமடைந்துள்ளதுடன் பல படகுகள் சேதமடைந்துள்ளதாகவும் கரை திரும்பிய மீனவரொருவர் கூறினார்.

இராமேஸ்வரம் கடற்கரையிலிருந்து கடந்த சனிக்கிழமை 600 படகுகளில் புறப்பட்டிருந்த மீனவர்கள் கச்சதீவுக்கு அருகில் தமது வலைகளை வீசிவிட்டு காத்திருந்தனர். இதன்போது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளையில் அதிவேகப் படகுகளில் வந்த இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்களை சூழ்ந்து கொண்டு கற்கள் வீசி தாக்குதல் நடத்த ஆரம்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு சூழ்ந்து கொண்ட இலங்கைக் கடற்படையினரின் படகுகள் தமது படகுகளை அவ்விடத்திலிருந்து வெளியேறிச் செல்லவிடாது வழிமறித்தன. தமது படகுகளினுள் பாய்ந்த இலங்கை கடற்படையினர் மரக்கட்டைகளால் தங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக மீனவரொருவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை கடற்படையினரின் மீனவர்கள் மீதான இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் வழமையாகி விட்டதாக இந்திய மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# மூவருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை இரத்துச் செய்ய வேண்டும் -டி.ராஜா கோரிக்கை

(புதுடில்லி)

முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை இரத்துச்செய்ய வேண்டும் என்று டி.ராஜா கூறினார்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா, கோவையில் ஏ.ஐ.டி.யு.சி. அலுவலகத்தில் கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துக்கூறும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகம் முழுவதும் 139 நாடுகளில் மரண தண்டனை நிறுத்தப்பட்டுள்ள நிலையில் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை இரத்துச் செய்ய வேண்டும். மரண தண்டனையை நீக்குவதற்காக இந்திய கம்யூனிஸ்டு கட்சி தொடர்ந்து குரல் கொடுக்கும்.

இலங்கை தமிழர்களின் நலனுக்காக தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் தொடர்ந்து தாக்கப்படுவதால் கச்சதீவு உடன்பாட்டை மறு ஆய்வு செய்ய வேண்டும். கூடங்குளம் அணுமின் நிலைய விடயத்தில் பொதுமக்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இவ்வாறு டி.ராஜா கூறினார். (அ)

# இந்த மேடையில் அந்த நாடகம்
# இன்னும் எத்தனை நாளம்மா!

கடந்து விட்ட காலம், விடுவிக்கப்பட்ட வார்த்தைகள், தொடுக்கப்பட்ட அம்பு ஆகிய மூன்றும் திரும்பப் பெற முடியாதவை. ஆனால் நம் அரசியல்வாதிகள் வாய்மலர்ந்த வார்த் தைகள் மட்டும் எளிதில் திரும்பப் பெறக் கூடியவை. 'இன்று புதிதாய் பிறந்தோம்' என்றான் பாரதி. நம் விதியெழுதும் அரசியல் வித்தகர் கள், அன்றாடம் புதிதாய் பிறப்பவர்கள். அதனால் தான் நேற்று சொன்ன வார்த்தையும் செய்த செயலும் அவர்களைக் கட்டுப்படுத் துவதில்லை. அரசியல் அரங்கில் அவர்கள் நடத் தும் நவீன திருவிளையாடல்களைக் காவியமாக்க எந்தக் கவிஞனாலும் இயலாது.

முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரும் 20 ஆண்டுகளாக மரணத்தின் நிழலில் இளமை முழுவதையும் இழந்து சிறைக்கம்பிகளுக்குள் சீரழிந்து நிற்கின்றனர். அவர்கள் குற்றமே இழைத்திருந்தாலும்... ஓர் ஆயுள் தண்டனைக் காலத்தை விட அதிகமான நாட்களைக் காராக்கிருகத்தில் கழித்து விட்டனர். இனியாவது அவர்களை வாழ அனுமதிப்பதுதான் சட்டத்துறை கோட்பாட்டுக்கு (Jurisprudence) எல்லா வகையிலும் ஏற்புடையது என்று மனிதநேயம் சார்ந்த மக்கள் சிந்தித்ததன் விளைவாக மாநிலம் முழுவதும் மூவரின் மரணதண்டனைக்கு எதிராக உணர்வலைகள் பொங்கிப் புரண்டன.சட்டமன்றத் தேர்தலில் கலைஞர் மகுடம் இழந்தார். ஜெயலலிதா மீண்டும் அரியாசனத்தில் அமர்ந்தார்.

தி.மு.கழகம் மரணப்படுக்கையில் கிடத்தப்பட்டது. விழுந்த கலைஞர் எழத் துடித்தார். ஆட்சியைக் கைப்பற்றிய ஜெயலலிதா கழகத்தின் கதை முடிக்க நினைத்தார். இனத் துரோகத்தில் ஈடுபட்டதனால்தான் இழிந்த தோல்வி நேர்ந்து விட்டது என்று கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதி' இடித்துரைத்தது.மீண்டும் கலைஞர் 'தமிழினத் தலைவர்' வேடமேற்று நடிக்க விரும்பினார். மூவரின் மரண தண்டனை அவருடைய நவீன நாடகத்துக்கு வசதியான மேடையானது. திரைக்கதை திருத்தி எழுதப்பட்டது. நெஞ்சை உருக்கும் வசனங்கள் கலைஞரின் பேனாவிலிருந்து கசிந்தன. திரைச்சீலை அகன்றது. வசனம் பேச கலைஞர் வாய் திறந்தார்.

போட்டி நாடகம் சட்டப் பேரவையில் அரங்கேற்றப்பட்டது. ஜெயலலிதா பேசிய ஒவ்வொரு வசனமும் பெரிய வரவேற்பைப் பெற்றது. கலைஞர் நாடகத்தில் கூட்டம் குறைந்தது.

'கருணாநிதி முதல்வராக இருந்த போது 20-04-2000 அன்று கூட்டப்பட்ட அமைச்சரவையில் நளினிக்கு மட்டும் மரண தண்டனையை குறைக்க வேண்டும் என்றும் ஏனைய மூவருக்கும் கருணை மனுவை நிராகரிக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. அதன்படியே ஆளுநர் ஆணை பிறப்பித்தார்' என்று சட்டப்பேரவையில் ஜெயலலிதா வீசிய வெடி குண்டு சத்தத்தில் விழித்துக் கொண்ட பூனை கலைஞர் மறைத்து வைத்திருந்த கோணிப்பையிலிருந்து வெளியே வந்து விழுந்தது.

அமைச்சரவையைக் கூட்டி மூவரின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றும் தீர்மானம் இயற்றி ஆளுநருக்கு அனுப்பும்படி இன்று ஜெயலலிதாவுக்கு இலவச ஆலோசனை வழங்கும் கலைஞர் நேற்று அதைச் செய்யத் தவறியது ஏன்? அவரைச் செய்யவிடாமல் தடுத்த 'கை' எது? அந்த மனிதநேயமற்ற 'கை' யை முற்றாக முறித்து விட்டு விலகும் மனத்துணிவு கலைஞருக்கு உண்டா?

'கனிமொழி ஜாமீனில் வெளியே வரும் வரை சோனியாகாந்தியை நான் சந்திக்கப் போவதில்லை. உடல்நலம் விசாரிக்கச் சென்றாலும் உள்ளர்த்தம் கற்பிக்கப்படும்' என்று சொன்ன கலைஞர், கனிமொழி திஹார் சிறையில் இருக்கும் போதே புதுடில்லி சென்று சோனியாவையும் பிரதமரையும் சந்தித்தார். 'கனிமொழியின் ஜாமீன் குறித்து இருவரிடமும் நான் எதையும் பேசவில்லை' என்று அவர் சொன்னதை நாம் நம்புவோம். எவற்றையெல்லாமோ நம்பி நைந்துவிட்ட நமக்கு இதை நம்புவதால் புதிதாக இழக்க எதுவும் இல்லை. கலைஞரின் டில்லிப் பயணத்துக்கும்...சி.பி.ஐ., கனிமொழி ஜாமீன் விவகாரத்தில் அடக்கி வாசிப்பதற்கும் எள்ளளவும் தொடர்பில்லை என்பதையும் நம்புவோம். சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட சீஸரின் மனைவி அல்லவா நம் சி.பி.ஐ!

கலைஞர் எழுதி, இயக்கி நடிக்கும் 'இனவுணர்வு' நாடகத்தில் இரண்டாது காட்சி 'தூக்குத் தண்டனை பெற்றிருக்கும் மூவரும் 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடுவதால் இதுவரை அனுபவித்த தண்டனை போதுமானது என்ற முறையில் அவர்களுடைய உயிர்களைக் காப்பாற்ற மத்திய அரசு உதவிட வேண்டுமென்று பிரதமரிடம் வலியுறுத்தினேன்' என்று பத்திரிகையாளர்களிடம் வெளிப்படுத்தினார் கலைஞர்.





நிராயுதபாணியாக நிற்கும் போது நெஞ்சில் கசிந்த கரிசனம் சகல அதிகாரங்களும் கையில் இருந்தபோது ஏன் காணாமற் போனது? முதல்வர் என்ற முறையில் பிரதமரிடம் அப்போது வலியுறுத்த ஏன் வாய் வரவில்லை? 'மத்திய அரசு உதவிட வேண்டும்' என்றாராம். அந்த மத்திய அரசில் இவருடைய கட்சியும் தானே இடம் பெற்றிருக்கிறது. கூட்டணி தர்மப்படி ஆட்சி நடத்தும் 'கலியுக தர்மர்' நம் பிரதமர் கூட்டணி தர்மத்துக்காக அலைக்கற்றை ஊழலை அனுமதித்தவர். மூவரின் மரண தண்டனையை நிறுத்த முடியாதா என்ன?

'ஐயகோ! மூன்று இளைஞர்கள் மரணத்தின் மடியில் மயங்கிக் கிடப்பதை மனச்சான்று உள்ள தமிழர்கள் இனியும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பது முறையோ? ஜெயலலிதா அம்மையார் நினைத்தால் அமைச்சரவையைக் கூட்டி மூவரின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றும்படி ஒரு தீர்மானம் தீட்டி ஆளுநருக்கு அனுப்பி வைத்தால் போதுமே. அப்படித் தானே நளினியைக் காலனின் பிடியிலிருந்து நான் காப்பாற்றினேன்...' என்ற கலைஞரின் 'காகிதப்பூ' வசனம் காதில் விழுந்தாலும் உள்ளாட்சித் தேர்தல் ஜெயலலிதாவின் கண் முன்னால் ஊசலாடியது. 'வீதி நாடகம்' நடத்துவதில் நம் முதல்வருக்கு முன்னனுபவம் அதிகம் என்பதை கலைஞர் மறந்து விட்டார்.

# மூவரின் உயிரைக் காப்பாற்றுவது யார்?

கலைஞரின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டால்... கழகம் மத்திய அரசிலிருந்து விலகி விடுமா? 'இந்த மேடையில் அந்த நாடகம் இன்னும் எத்தனை நாளம்மா?' என்ற கண்ணதாசனின் பாடல்தான் கவனத்துக்கு வருகின்றது.

கலைஞர் நடத்தும் நவீன நாடகம் பொது மக்கள் பார்த்துச் சலித்த பழைமையான நாடகம்தான். ஆனால் நம் முதல்வர் நடத்தும் நாடகமோ காட்சிக்குக் காட்சி அதிரடி திருப்பங்

தமிழருவி மணியன்

கள் நிறைந்தது. 'ஈழத்தமிழர்' நாடகத்தில் ஜெயலலிதா அரங்கேற்றிய முதல் காட்சியே யாரும் எதிர்பாராத ஆனந்த அதிர்ச்சியைத் தந்தது. 'இலங்கை அரசின் மீது இந்திய அரசு பொருளாதார தடை விதிக்க வேண்டும்' என்று சட்டப் பேரவையில் சங்குநாதம் செய்து நிறைவேற்றிய தீர்மானம் கண்டு உலகத் தமிழர்கள் உவகை அடைந்தனர்.

முருகன், சாந்தன், பேரறிவாளன் பிரச்சினை எழுந்தபோது 'கருணாநிதி அமைச்சரவை தீர்மானத்தின்படி ஆளுநர் கருணை மனுவை நிராகரித்த பின்பு என்னால் ஒன்றும் செய்ய இயலாது. இந்த அரசுக்கு அதை மாற்றும் அதிகாரமில்லை. வேண்டுமானால் மூவரும் குடியரசுத் தலைவரிடம் மீண்டும் கருணை மனு சமர்ப்பிக்கட்டும்' என்று முதல்வர் கை கழுவியதும் வீதி நாடகத்துக்கு வேண்டிய விறுவிறுப்பு குறைந்தது. பார்வையாளர் அரங்கில் கூச்சல் எழுந்தது.

உள்ளாட்சித் தேர்தல் முடியும் வரை நாடகத்தை வெற்றிகரமாக நடத்திப் பார்வையாளர்களைத் தன்பக்கம் தக்கவைத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்று உணர்ந்த முதல்வர் அடுத்த நாளே அதிரடி திருப்பத்தை அறிமுகப்படுத்தினார். 'சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரின் கருணை மனுக்களை மறுபரிசீலனை செய்து அவர்களின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென மேதகு குடியரசுத் தலைவரைத் தமிழ்நாடு சட்டப்பேரவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது' என்று ஒரு தீர்மானத்தை முன்மொழிந்த முதல்வர் மக்களின் உணர்வுக்கும் அரசியல் கட்சிகளின் கருத்துக்கும் மதிப்பளித்து ஒருமனதாக நிறைவேற்றித் தரும்படி வேண்டிக் கொண்டார். நாடகத்தின் புதிய திருப்பம் கண்டு மகிழ்ச்சியில் திளைத்த தமிழர் கூட்டம் 'தாயே! தெய்வமே! தமிழினத்தின் உண்மையான தலைவியே! புரட்சியின் புதிய வடிவமே!' என்று பாரெங்கும் 'பஜகோவிந்தம்' பாடத் தொடங்கியது. உள்ளாட்சித் தேர்தல் வந்தது. அசுர வெற்றியை அ.தி.மு.க. பெற்றது. நாடகத்தின் நோக்கம் நிறைவேறிவிட்டது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் மூவர் கருணை மனுவுக்கு எதிராக ஜெயலலிதா அரசு தாக்கல் செய்த குறிப்புக்கள்தான் யாருமே கனவிலும் எதிர்பார்த்திராத நாடகத்தின் உணர்ச்சி நிலை வீழ்ச்சி(anti-climax) ஆகும். 'மூவரின் கருணை மனுக்கள் மீது கால தாமதமாக முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்துத் தமிழக அரசு எதுவும் கூற முடியாது' என்று குறிப்பிட்டதோடு நில்லாமல் 'மூவரும் தாக்கல் செய்த மனுக்கள் தகுதியற்றவை என்பதால் அவற்றை தள்ளுபடி செய்ய வேண்டும்' என்றும் ஜெயலலிதா அரசு தெளிவாகத் தெரிவித்து விட்டது. இதன்மூலம் மூவரும் தூக்கில் தொங்குவது தமிழக அரசுக்கு சம்மதமே என்று மறைமுகமாக உணர்த்தி விட்டார் ஜெயலலிதா.


அப்படியானால், 60 நாட்களுக்கு முன்பு சட்டப் பேரவையில் மூவர் உயிர் காக்க ஏன் ஒரு தீர்மானத்தை அவர் முன்மொழிந்தார்? இடையில் நடந்தது என்ன? ஏன் இந்த இரு நிலைப்பாடு? 'அடிமைப்பெண்' படத்தில் இரு வேடங்களில் அற்புதமாக நடித்ததில் அவருடைய ஆற்றல் வெளிப்பட்டது. ஆட்சிப் பீடத்தில் அமர்ந்த பின்பும் இரு வேடங்களில் நடித்தால் அவருடைய சந்தர்ப்பவாதம் தான் சாயம் வெளுக்கும். ஜெயலலிதாவின் கட்சிச் சின்னம் 'இரட்டை இலை' என்பதற்காக அவருடைய அரசியல் நடவடிக்கைகளிலும் இரட்டை நிலை இருப்பது அவருக்கு ஒரு போதும் பெருமை சேர்க்காது.

மூன்று உயிர்களின் மரண மேடையில் கலைஞர், ஜெயலலிதா என்ற இரண்டு நடிப்புச் சுதேசிகளின் நாடகம் நன்றாகவே நடக்கிறது. பார்வையாளர்களாக நாம் எவ்வளவு நாள் பார்த்து ரசிக்கப் போகிறோம் என்பது தான் விடைக்கான் வேண்டிய கேள்வி!

விகடன்



முருகன்



சாந்தன்



பேரறிவாளன்

# குருவின் பார்வையில்



ஆன்மீகம் 27

## இயற்கையும் மனிதநல வாழ்வும்

வெளியே இவற்றை எப்படி உருவாக்குவது என்பதைத்தான் கற்றுக்கொண்டிருக்கிறோம். எனவே, இந்தத் தொழில் நுட்பங்கள் மிக உயர்ந்த நோக்கத்தில் செயற்பட வேண்டுமானால், அடிப்படையாக நமது உடல் எப்படி செயற்படுகிறது, மனம் எப்படி செயல்படுகிறது. சுற்றியிருக்கும் சூழ்நிலைகள் எப்படி உள்ளன. இயற்கை எப்படி செயற்படுகிறது. என்பதைக் கவனித்துப்பார்த்தால், எல்லா விதமான தொழில் நுட்பங்களும் இவற்றில்தான் உள்ளன என்பதை அறியலாம்.

பிரபஞ்சத்தில் இல்லாததை நாம் கண்டு பிடிக்கவில்லை. ஏற்கனவே இருப்பதைத்தான் கண்டு பிடித்திருக்கிறோம். ஏற்கனவே இருப்பதைத்தான் கண்டுபிடிக்க முடியும். இதைப் புரிந்துகொள்ளும் தன்மை ஆழமாகும்போதுதான் இயற்கைக்கும் மனிதனுக்கும் ஏற்றவாறு தொழில் நுட்பத்தினை வளர்ச்சியுறச் செய்ய முடியும். இயற்கையின் செயல் எப்படிப்பட்டது.அல்லது தன் உடலின் செயற்பாடு எத்தகையது என்பதை புரிந்து கொள்ளாத மனிதன்தான் தொழில்நுட்ப வளர்ச்சி என்ற பெயரில் இயற்கைக்கு எதிராகச் செயற்படுகிறான்.இயற்கைக்கு எதிராகச் செயற்படும்போது அவன் தனதுஉயிருக்கே எதிராகச் செயற்படுகிறான். 50 வருடங்களுக்கு முன்னர் செய்ததன் விளைவை இப்போது உணர்ந்து வேறு விதமாக மாற்றிக் கொள்கிறோம். இன்னும் சில வருடங்கள் கழித்து அதன் விளைவை உணர்ந்து அதையும் வேறு விதமாக மாற்றி விடுவோம். இப்படித்தான் இது நடந்து கொண்டிருக்கிறது. இந்தத் தடுமாற்றம் எதனால் என்றால், மனிதனுடைய அடிப்படையான தேவை என்ன? இயற்கையிலிருந்து இந்த தேவைகளை எப்படி நிவர்த்தி செய்வது என்ற முழுமையான பார்வை இல்லாததுதான்.



ஒரு நாள் சென்னை மாநகருக்குப் புதிதாக வந்தவர்கள் ஒரு ஆட்டோ ரிக்ஷாவில் ஏறினார்கள். ஆட்டோ டிரைவர், ஆட்டோவை மிக அதிகமான வேகத்தில், அதில் பயணம் செய்பவர்கள் பயப்படும்படியாக தாறுமாறாக ஓட்டிச் சென்றார். பயணம் செய்தவர்கள் மெதுவாகப் போகுமாறு எவ்வளவோ சொல்லியும் ஆட்டோ டிரைவர் அதே வேகத்தில் போய்க்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் மிகவும் குறுகலான தெருவில் போக வேண்டியிருந்தது. அந்தக் குறுகலான தெருவிலும் ஆட்டோவை மிக வேகமாக ஓட்டிச் சென்றார். அவ்வாறு செல்லும்போது இரண்டு பக்கமும் இரண்டு லாரிகள் வந்தன. அப்போதும் அதே வேகத்தில் ஆட்டோவை ஓட்டினார். லாரிகளைக் கடந்து ஓட்டோ வந்தவுடன் அதில், பயணித்தவர்கள் “இரண்டு பக்கமும் லாரிகள் வந்தபோதும் எப்படி இவ்வளவு வேகமாய் வந்தீர்கள்?” என்று கேட்டனர். அதற்கு ஆட்டோ டிரைவர் “எனக்குப் பயமாக இருந்ததால் கண்ணை மூடிக்கொண்டேன்” என்றார். எல்லாம் இப்படித்தான் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. நமக்குப் புரியாத போது கண்ணை மூடிக் கொண்டால், சரியாகிவிடும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். இதனால், நம் வாழ்க்கை மட்டுமல்ல, அடுத்த தலைமுறையும் பாதிக்கும் சூழலை உருவாக்கியிருக்கிறோம்.

இப்போது நாம் வாழும் முறையைப் பார்த்தால், நாம்தான் கடைசி தலை முறை என்பது போல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமக்குப் பின்னால் வருகின்ற தலைமுறைகளும் வாழும் விதமாக உலகத்தை வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு மனிதரும் நம்மைச் சூழ்ந் திருக்கிற இயற்கையைக் காத்து நாமும் நமது சந்ததியினரும் நன்றாக வாழ்வதற்கான ஒரு சூழலை எப்படி உருவாக்குவதென கவனித்து வாழ வேண்டும். இல்லாவிட்டால் கண்ணை மூடிக் கொண்டு வண்டியை ஓட்டுவது போல நம் வாழ்க்கைச் சூழ்நிலை இருக்கும்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# சங்கீதத்தின் தொன்மையும் வளர்ச்சியும்

07

16 ஆம் நூற்றாண்டில் சங்கீத பிதாமகர் என்றழைக்கப்படும் புரந் தரதாசர் சங்கீத கலை வளர்ச்சிக்கு மிக முக்கியமான பணியைச் செய்தவராவார். இவர் இசைப் பயிற்சிக்குரிய ஸ்வரவரிசைகள், அலங்காரங்கள், கீதங்கள் போன்றவற்றை இயற்றினார். ஸ்வர வரிசைகள் பாடுவதற்கு மாயாமாளவ கௌளை இலகுவான இராகம் என்று, பயிற்சிக்க அவ்விராகத்தைப்பாட வேண்டும் என வழி வகுத்தார். இவர் கன்னட மொழியில் நூற்றுக்கணக்கான கீர்த்தனைகளையும் தேவர் நாமாக்களையும் புரந்தரவிட்டல் என்னும் முத்திரையுடன் இயற்றினார். லஷ் ஷியத்திற்குத் தக்கதாக லட்சணம் அமைய வேண்டும் என்ற முறையில் இராம நாதையரால் எழுதப்பட்ட ஸ்வர மேளகாலநிதி எனும் சமஷ் கிருத கிரந்தம் அக்காலத்தில் சங்கீதக் கலையில் இருந்த ஐயப்பாடுககளை நீக்குவதாக இருந்தது.

இந்நூற்றாண்டிலேயே வெங்கடமகி அவர்கள் இயற்றிய சதுர் தண்டிப் பிரகாசிகை என்னும் கிரந்தம் வெளிவந்தது. இதில் 12 ஸ்வர தானங்களும் 16 ஸ்வரப் பெயர்களையும் ஆதாரமாகக் கொண்டு 72 மேளகர்த்தாக்களை வகுக்கும் வழிகளை விபரித்துள்ளார். இது வளர்ச்சியில் ஒரு சாதனையாகும்.

17 ஆம் நூற்றாண்டில் ஷேக்தரக்ஞர் நாயக, நாயகி பாவத்தை அடிப்படையாகக் கொண்டு ஆயிரக் கணக்கான பதங்களை இயற்றினார். இராகத்தின் மூலம் பக்திப் பிரவாகத்தை வெளிப்படுத்தலாம் என்பதற்கு அத்தாட்சியாக பத்ராசல இராமதாஸ பல கீர்த்தனைகளை இயற்றி சங்கீதத்திற்குப் பெருமை சேர்த்தார். 18 ஆம் நூற்றாண்டில் அருணாச்சல கவிராயரால் இராமநாடகக் கீர்த்தனத்தில் விருத்தங்கள், கீர்த்தனங்கள், தருக்கள் போன்றவை காணப்படுவது சங்கீத வளர்ச்சியில் ஒரு திருப்புமுனையாகும். இந்நாடகம் பாமர மக்களிடையே மிகச்சிறப்பாக விளங்கி வந்திருந்தன. இந்நாடகத்திலுள்ள கீர்த்தனைகளில் பண்டைய தமிழ் பழமொழிகள் பல காணப்படுகின்றன. இராம நாடகம் தவிர சீர்காழிஸ்தல புராணம், ஹனு மார் பிள்ளைத்தமிழ், சீர்காழி கோவை அசோகமுகி நாடகம் போன்றவையும் திரிகூட இராசப்ப கவிராயால் எழுதப்பட்ட குற்றாலக் குறவஞ்சி என்ற இசை நாடகமும் மிகப்பிரபல்யமாக இருந்தது.

இக்காலத்தில் சிறந்த லஷ்ய, லஷ்ண வித்துவானாக விளங்கிய பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள் ஆயிரக்கணக்கான கீதங்கள் பிரபந்தங்களை இயற்றியுள்ளார். இதனால், இவர் வெயிகீத பைடாலகுருமூர்த்தி சாஸ்திரம் மூலம் கற்ற கமகங்கள், நுட்பங்களைப் பாடிக்காட்டி சீர்ப்படுத்தியவர், பச்சமிரியம் ஆதியப்பய்யர் தானவர்ணமார்க்க தீர்க்கதரிசி எனச் சிறப்புப் பெயர்பெற்றார். இவர் இராகம் பல்லவி பாடும் முறையில் ஓர் ஒழுங்கினை உண்டாக்கினார். இக்காலத்தில்தான் தானவர்ணம் என்ற உருப்படி தோன்றியது. கமகங்களை வெளிப்படுத்தும் விரிபோணி வர்ணம் இயற்றப்பட்டது.

சங்கீத மும்மூர்த்திகள் காலத்தில் உன்னத நிலையில் விளங்கிய கர்நாடக இசையை 19 ஆம் நூற்றாண்டில் திருவாங்கூரை அரசாண்ட ஸ்வாதித்தி திருநான்மகாராஜா மென்மேலும் சிறப்புற வளர்த்தார். இவர் ஒரு அரசனாக இருந்து சங்கீதத்தை வளர்த்தது மட்டுமல்லாமல், சிறந்த வாக்கேயராகவும் விளங்கினார். இவரது சபையை தஞ்சை நால்வரான சின்னையா, பொன்னையா, சிவானந்தம் வடிவேலு சகோதரர்களும் மும்மூர்த்திகளின் சீடர்களும் அலங்கரித்தனர். 19 ஆம் நூற்றாண்டில் தமிழ் மொழியில் பல்வேறு கிருதிகளை இயற்றிய பெருமை கலிக்குஞ்ச பாரதியார் இயற்றியவற்றுள் முக்கியமானது அழகர் குறவஞ்சி நாடகப் பாடல்களாகும். இதில் வெண்பா, விருத்தம் முதலிய செய்யுள் வகைகளும் சிந்து, கும்மி, கண்ணிகள், ஓரடிக் கீர்த்தனம் போன்ற பா வகைகளும் கையாளப் பட்டுள்ளன. இதில் சாஸ்திரி இசையும் நாட்டுப்புற இசையும் நன்கு கையாளப்படுகின்றது. இக்கால கட்டத்தில் ஆன்மீகத்தையும் தமிழிசையையும்

“கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை”

வளர்த்த பெருமை கோபால கிருஸ்ண பாரதியாரைச் சாரும் நந்தனார் கீர்த்தனை மூலம் தனி முத்திரை பதித்தவர் இவராவார். நலுக்கு, ஊஞ்சல், கும்மிப் பாடல்களையும் இவர் இயற்றியுள்ளார். இதே காலகட்டத்தில் பாலஸ்வாமி தீட்சிதரால் மேல்நாட்டு இசை வாத்தியமான வயலின் கர்நாடக இசையோடு மேடையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதைவிட தாளவகைகள் தேசாதி, மத்தியாதி, தாளங்கள் பிரசித்திக்கு வந்தன. அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்துகள் பலவற்றைப் பாடினார். இவர் காவடிச் சிந்தின் தந்தை எனப் போற்றப்பட்டார். இதன் பின் சாதாரண மக்கள் விரும்பத்தக்க இசைப் பாடல்கள் சுப்பிரமணிய பாரதியார், தேசிகவிநாயகம் பிள்ளை போன்றோரால் இயற்றப்பட்டன. தேசிய கல்விப் பாடநெறியில் இசை ஒரு பாடமாக பேராசிரியர் பி.சம்பந்த மூர்த்தி அவர்களால் புகுத்தப்பட்டது. இதனால், இசை கற்கும் மாணவர் பரம்பரை ஒன்று உருவாகியது.

பாபநாசம்சிவன் காலத்தில் பாமரரும் படித்தோரும் இரசிக்கும் வகையில் பாடல்கள் தமிழில் இயற்றப்பட்டன. சங்கீத லிபி முறையில் பாடல்கள் அச்சடிக்கப்பட்டன. திரைப்படப் பாடல்கள் சாருகேசி, கரகரப்பிரியா, நாதநாமக் கீர்த்தனை போன்ற பல ராகங்களில் இயற்றப்பட்டன. இதனால், கர்நாடக இசை வளர்ச்சி கண்டுகொண்டிருந்தது.

இப்போதும் இதை வளர்க்கும் நிறுனங்கள், இசை மன்றங்கள், சபாக்கள் போன்றவையும் சங்கீதத்தை வளர்ப்பதில் முன்னணி வகிக்கின்றன.

(முற்றும்)

திருமதி மலர்விழி கனகசபை

# நீரிழிவு நோயால் வரும் சில முக்கிய பிரச்சினைகள்

**நீரிழிவு நோயின்போது மயக்கம்**

நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு அடிக்கடி மயக்கம், சில வேளைகளில் கோமா நிலை கூட உண்டாகிவிடும். இது ஏன் என்பது பலருக்குப் புரிவதில்லை.

இன்சுலினை தொடர்ந்து பயன்படுத்தி வருபவர்கள் அதை உடனே நிறுத்தக் கூடாது. நிறுத்தினால் மயக்கம் வரும்.

ஏன்?

நமது உடலில் சேகரிக்கப்பட்டுள்ள சீனியும் கொழுப்பும் தேவைப்படும் நேரத்தில் எரிக்கப்பட்டு சத்தாகப் பயன்படுத்தப்படுகின்றன என்ற உண்மை உங்களுக்குத் தெரியும். இவ்வாறு பயன்படுத்துவதால் நன்மையை விட தீமைதான் அதிகமாக விளைகின்றன.

காரணம், சேகரிக்கப்பட்டுள்ள கொழுப்பு மற்றும் சீனிப்பொருட்களை உடல் எரிக்கும் போது உடலில் நச்சுத்தன்மை மிக்க அமிலங்கள் அதிகரிக்க ஆரம்பிக்கின்றன. இந்த அமிலங்களின் நச்சுத்தன்மையால் தான் நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு மயக்கம் வருகிறது. சில சமயம் மரணம் கூட நேர்ந்து விடுகிறது.

**நீரிழிவு நோய் மயக்கத்தின் அறிகுறிகள்**

- குமட்டல்,வாந்தி வருவது போன்ற உணர்வு.
- அசௌகரியம், உடல் நலமில்லாதது போன்ற உணர்வு.
- அதிக தாகம்
- பசியின்மை
- மூச்சு இரைப்பு
- மனம் குழம்புதல்
- சுய நினைவிழத்தல்
- வயிற்று வலி
- கண் பார்வை மங்கிவிடுதல்
- தூக்க உணர்ச்சி அதிகமிருத்தல்
- இதயம் மெதுவாகத் துடித்தல் ஆகிய அறிகுறிகள் தோன்றும்.

நாட்பட்ட நிலையில் மயக்கம் ஆரம்பிக்கும். கொஞ்சம் கூடுதலாக சாப்பிட்டு விட்டால் மயக்கம் வந்துவிடும். அல்லது மயக்கம் வருவதைப்போன்ற உணர்வு ஏற்படும்.

கை, கால்களில் அதிகமாக காயம் இருந்தாலும் தோல் வறட்சியடைந்திருந்தாலும் இன்சுலினை சரியான நேரத்திற்கு போட்டு கொள்ளாததாலும் நீரிழிவு நோயால் மயக்கம் உண்டாகும்.

இன்சுலின் ஊசியை பயன்படுத்தாமல் மாத்திரை பயன்படுத்தி வருபவர்கள் மாத்திரையைப் பயன்படுத்த மறந்து விட்டால் நீரிழிவு மயக்கம் வந்துவிடும்.

கலப்பு முறை இன்சுலினை சரியான முறையில் கலக்காமல் போட்டுக் கொண்டாலும் நீரிழிவு நோய் மயக்கம் வரும்.

இன்சுலினை போட்டுக் கொண்டால் அல்லது தானாக சில மணி நேரங்களில் இந்த மயக்கம் தெளிந்து விடுவதுண்டு.

**இன்சுலினால் வரும் மயக்கம்**

இரத்த சீனி அதிகமாகும்போது மயக்கம் வருவதைப் போலவே அளவுக்கு அதிகமாக இன்சுலினைப் போட்டுக் கொண்டாலும் மயக்கம் வரும். இதைப் பற்றி சரியாகப் புரிந்து கொண்டால் இன்சுலின் மயக்கத்தைத் தடுக்கலாம்.

இன்சுலினில்,

- **பிளெயின் இன்சுலின்**
- **குளோரின் இன்சுலின்**
- **என்பிஎச் இன்சுலின்**
- **லென்டி இன்சுலின்**
- **பிஇசட் ஐ இன்சுலின்**

என்ற ஐந்து வகைகள் உள்ளன.

இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான செயல்திறன் கொண்டவை.

உதார்ணத்திற்கு பிளெயின் இன்சுலின் அதாவது சுத்த இன்சுலின் என்பது ஒளி ஊடுருவக்கூடிய இன்சுலினாகும். இது நான்கு மணி முதல் ஆறு மணி நேரம் செயற்படும். சாப்பிட்ட உடனே சீனி அதிகரிக்கும் நோயாளிகளுக்கு இது தேவை. தினமும் மூன்று வேளை பயன்படுத்த வேண்டும். நீண்ட நேரம் வேலை செய்யும் இன்சுலின்களில் லென்டீ இன்சுலின் பதினெட்டு முதல் இருபத்து நான்கு மணி நேரம் வரை செயல்புரியும். இன்சுலினுடன் துத்தநாகம் மற்றும் புரோடமின் போன்றவை சேர்க்கப்படும்.

என்பிஎச் இன்சுலினில் அதிக துத்தநாகம், குறைந்த புரோடமின் சேர்த்து பிளெயின் இன்சுலினுடன் கலந்திருப்பர்.

பிஇசட் ஐ இன்சுலின் சுமார் முப்பத்தாறு மணி நேரம் வரை பணி செய்யக்கூடியது. தினமும் ஒருவேளை போட்டால் போதும்.

இதெல்லாம் இன்சுலின் வகைகள். இவற்றைத் தேவைக்கு ஏற்ப போட வேண்டியிருக்கும்.

இன்சுலின் மயக்கம் வரக்கூடிய நோயாளிகள் இவற்றை மருத்துவர் மூலம் அறிந்து போட்டுக் கொள்வோருக்கு இத்தகைய மயக்கம் எளிதில் வரும்.

இயல்பான அளவை விட குறைவாக உண்ணும் போது, மாத்திரைகளை அளவுக்கு அதிகமாக எடுத்துக் கொள்ளும் போது வரும்.

**இன்சுலின் மயக்கத்தை அறியும் வழிகள்**

- ☆ மயக்கம் திடீரென வரும்.
- ☆ அவ்வப்போது சில நிமிடத்தில் மயக்கம் வந்து விடும்.
- ☆ தலை கிறுகிறுப்பு,தலைச் சுற்றல் இருக்கும்.



**01**

- ☆ இதயம் படபடப்பாகத் துடிக்கும்
- ☆ மயக்கத்தின் போதே பசி எடுக்கும்
- ☆ தாகம் இருக்காது
- ☆ உடலெல்லாம் வியர்க்கும்

பேராசிரியர்
டாக்டர் டி.காமராஜ்,
M.D.,P.G.D.C.G.,D.M.R.,
சென்னை.

- ☆ பார்ப்பவை இரண்டிரண்டாகத் தெரியும்
- ☆ தலை வலிக்கும்
- ☆ எரிச்சல் வரும்
- ☆ வாந்தி அதிகமாக வரும்
- ☆ தூக்கத்திற்கு பதில் குழப்பம் அதிகரிக்கும்
- ☆ பிறரை பார்த்ததும் எரிச்சல் வரும்
- ☆ சிறுநீரில் சீனி இருக்காது
- ☆ திடீரென சுய நினைவு இருக்காது
- ☆ சிகிச்சைக்குப் பிறகு மயக்கம் தெளியும்.

**சிக்கல்கள்**

நீரிழிவு நோயின் போது வரும் மயக்கம் அதிக பாதிப்பை விளைவிக்காது. ஆனால், இன்சுலின் மயக்கம் ஆபத்தை விளைவிக்கும். இந்த மயக்கம் திடீரென ஆரம்பித்து தொடரும். எனவேதான் நீரிழிவு நோயாளிகள் எப்பேதும் கைவசம் கொஞ்சம் சீனிப் பொருளை வைத்திருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறார்கள்.


மருத்துவமனையில் அனுமதித்து குளுக்கோஸ் கரைசலை சிரை வழியாக உடலில் செலுத்தலாம். மயக்கம் வரக்கூடிய தன்மையுள்ளவர்கள் எப்போதும் கவனமாக இருக்க வேண்டும். (தொடரும்)




# இடுப்பு மாற்று அறுவை சிகிச்சை

**ஒருவருக்கு இடுப்பு மூட்டு பாதிப்பிருந்தால் அதனை அவசியம் கவனிக்க வேண்டியதன் அவசியம் என்ன?**

நீரிழிவு, இதய நோய், புற்று நோய், கண் நோய் போன்றவைகளே நமது நாட்டில் இதுவரை பெரிய தாக்குதல் நோய்களாகக் கருதப்பட்டு வந்தன. இப்போது இந்த பட்டியலில்சேர்ந்திருக்கும்இன்னொரு நோய் மூட்டு பாதிப்பாகும். நமது நாட்டில் இந்தப் பாதிப்பால் ஒரு கோடிக்கும் கூடுதலான மக்கள் அவதிப்படுகிறார்கள் என்று கணக்கெடுப்பு கூறுகிறது. முழங்கால் மூட்டு, முழங்கை மூட்டு, தோள் பட்டை [illegible], பாத மூட்டு, இடுப்பு மூட்டு என ஐந்து வி[illegible]ான மூட்டுப் பாதிப்புகள் ஏற்படுகின்றன.





குறிப்பாக இடுப்பு மூட்டு பாதிப்புக்கு 10 முதல் 15 இலட்சம் பேர் வரை ஆளாகி இருக்கிறார்கள் என்பது ஓர் அதிர்ச்சியான செய்தியாகும். இதிலும் வேதனையான விடயம் என்னவென்றால், இளைஞர்கள் தான் அதிக அளவில் இடுப்பு மூட்டு பாதிப்பு நோயால் அவதிப்படுகிறார்கள் என்பது தான். ஆண், பெண் பேதமின்றி இருபாலாரிடையேயும் இந்த நோய் உள்ளது.

இடுப்பு மூட்டு பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு இயற்கையான இடுப்பு மூட்டை அகற்றி விட்டு இரும்பு மற்றும் பிளாஸ்டிக்கால் தயாரிக்கப்பட்ட செயற்கை மூட்டை பொருத்துவதுதான் இதுவரை சிகிச்சை முறையாக இருந்து வந்தது.

இப்போது பர்மிங்ஹாம் இடுப்பு மூட்டு சீரமைப்பு என்னும் புதிய அதிநவீன சிகிச்சை முறை வந்துள்ளது.

**இடுப்பு மூட்டு வலி உள்ளதை இளம் வயதினர் எப்படி அறிந்து கொள்வது?**

பலர் இடுப்பு மூட்டு வலியையும் முதுகு வலியையும் குழப்பிக் கொள்கிறார்கள். இரண்டும் வெவ்வேறு ஆகும். இடுப்பு மூட்டு வலி என்பது இடுப்பின் கீழ்ப்பாகத்தில் ஏற்படுவதாகும். இடுப்பு மூட்டு பாதிப்பு ஏற்பட்டால் முதலில் நடப்பது பாதிக்கப்படும். சிலர் தொடர்ந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் நடந்த பின்னர் உணர்வார்கள். பின்னர் நடக்கும் தூரம் படிப்படியாக குறையும். அப்போது இடுப்பு மூட்டில் வலி அதிகரிக்கும். நாளடைவில் நடப்பதற்கே சிரமமாக இருக்கும். பின்பு நடப்பதும் இல்லாமல் போய்விடும். தூக்கத்தின் போதும் இடுப்பு மூட்டில் வலி எடுக்கும். காலில் பிடிப்பு ஏற்பட்டு காலை அசைக்க முடியாத நிலை உருவாகும். இடுப்பு மூட்டு தேய்மானம் அடைவதால் கால்கள் குட்டையாகிவிடும்.



ஸ்கூட்டர், காரில் ஏறிச் செல்வதும் இந்திய முறை கழிவறையில் உட்காருவதும் கஷ்டமாக இருக்கும். சாய்ந்து சாய்ந்து நடப்பார்கள். சிலர் வலி இல்லாமலேயே கூட சாய்ந்து நடக்கலாம். இந் நோய் பற்றி பெண்கள் கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சு



**01**

விட்டுக்கொள்ளலாம். ஏனெனில் இளம் பெண்களைவிட இளவயது ஆண்களிடமே இடுப்பு மூட்டு பாதிப்பு அதிகம் ஏற்படுகிறது.

**இடுப்பு மூட்டு பாதிப்படையக் காரணங்கள் என்ன?**

இடுப்பு மூட்டு செயற்பட சீரான இரத்த ஓட்டம் அவசியம். சிறு வயதில் காயம் ஏற்பட்டு முறையாக சிகிச்சை பெறாமல் இருப்பது, மது அருந்துவது, ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு வீரியமிக்க ஸ்டீ

டாக்டர் விஜய்.சி.போஸ்,Ms.,FRCS.,
சென்னை-35

ராய்டு மருந்து சாப்பிடுவது போன்ற காரணங்களால் இடுப்பு மூட்டுப் பாதிப்படைகிறது. வாதத்தின் காரணமாகவும் மூட்டு பாதிக்கும் வாய்ப்பு உண்டு. பரம்பரையாக ஜீன்களும் காரணமாக அமைகின்றன. உடல் பருமன் உள்ளவர்களுக்கும் கால்களை சீரற்ற முறையில் வைத்துக்கொண்டு உட்கார்ந்து பணிபவர்களுக்கும் இடுப்பு மூட்டு பாதிப்பு வரலாம்.

(தொடரும்)

# சட்டத்தை நிலைநாட்டுவது பொலிஸாரின் கடமையாகும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

மக்கள் சட்டத்தை கையில் எடுக்கக் கூடாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சட்டத்தை நிலைநாட்டுவது பொலிஸாரின் கடமையாகும். பொலிஸாருடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளும் தரப்பினர் சட்டத்தை கையில் எடுத்துக் கொள்கின்றனர் என்றும் தங்காலையில் அமைக்கப்பட்ட புதிய பொலிஸ் நிலைய அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்ட போது குறிப்பிட்டுள்ளார்.

இன்று ஏதேனும் சிறு பிரச்சினை என்றால் மக்கள் பொலிஸ் நிலையங்களை தாக்குகின்றனர். அல்லது பொலிஸ்நிலையத்தைஎரிக்கின்றனர். எரிப் பதற்காக இவ்வளவு செலவழித்து கட்டங்களை அமைக்க வேண்டிய தில்லை. சட்டம் எல்லோருக்கும் சமமானது.

பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு இருந்தால் அவை உரிய முறையில் விசாரணை நடத்தப்படும். பொலிஸாரின் அதிகாரங்களை மக்கள் எடுத்துக் கொள்ள முடியாது. அதற்கு அனுமதிக்கவும் முடியாது.

இலங்கை மனித உரிமை மீறல்கள் குறித்து குற்றம் சுமத்தப்படுகின்றது. உலக நாடுகளில் இடம்பெற்று வரும் உரிமை மீறல்கள் குறித்து நான் இங்கு சுட்டிக்காட்டப் போவதில்லை. இந்த நாட்டில் சட்டம் அனைவருக்கும் சமமான முறையில் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# கொழும்பு மாநகர சபையில் சர்ச்சை; குற்றச்சாட்டை மறுக்கிறது எதிர்க்கட்சி

கொழும்பு மாநகர சபையின் அறை ஒன்றின் திறப்பை எடுத்துச் சென்றதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் மறுத்துள்ளனர்.

கொழும்பு மாநகரசபையின் எதிர்க்கட்சி பேச்சாளர் ரியாஸ் சரூக் இந்த மறுப்பை வெளியிட்டுள்ளார்.

கொழும்பு மாநகரசபையில் அமைக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்துக்கு தாம் எந்த நேரமும் செல்லலாம். அதனை உடைத்துக் கொண்டு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாநகரசபையில் எதிர்க்கட்சிக்கு அறைஒன்று தேவை என்று தமது தரப்பு மேல்மாகாண முதலமைச்சரிடம் கோரிக்கையை முன்வைத்தது. இந்த நிலையில் அதற்கு மாநகரசபை முதல்வரிடம் கோரிக்கை விடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

முன்னதாக மாநகர சபை முதல்வர், குறித்த அறை சட்டவிரோதமாக பயன்படுத்தப்பட்டமை குறித்து பொலிஸாருக்கு முறையிட்டார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இணையத்தளங்களை முடக்குவதற்கு ஊடக அமைப்புக்கள் கண்டனம்

(கொழும்பு)

இலங்கையின் இணையத்தளங்களை தடைசெய்யும் நடவடிக்கைகளை ஊடக அமைப்புக்கள் கண்டித்துள்ளன.

உலக ஊடக முறைமைக்கு எதிராக இலங்கை அரசாங்கம் செயற்பட முனைவதாக சுதந்திர ஊடக மையம் தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான, செய்தி இணையத்தளங்கள் பதிவுசெய்து கொள்ளவேண்டும் என்று அண்மையில் இலங்கையின் ஊடக அமைப்பு அறிவித்திருந்தது.

ஐக்கிய தேசிய சட்சியின் உத்தியோகபூர்வ இணையத்தளமான லங்கா வே.நியூஸ், லங்கா கார்டியன் ஆகிய இணையத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த தீர்மானம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஊடக அமைப்புக்களுடன் கலந்துரையாட வேண்டும் என்று சுதந்திர ஊடக அமைப்பின் அமைப்பாளர் சுனில் ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கையில் முடக்கப்பட்ட எந்த இணையத்தளங்களையும் புரொக்சி முறையின் மூலம் பார்க்க முடியும் என்று தொழில்நுட்ப நிபுணர் கிஹான் மெண்டிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் செய்தி இணையத்தளங்கள் தடை செய்யப்படுவதை எதிர்த்து அமெரிக்க தூதரகம் அண்மையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## கலந்துரையாடல்

Nation Popular Travels Tours நிறுவனத்தின் ஏற்பாட்டில் சுற்றுலாத்துறை வருகையின் பின் யாழ்ப்பாணமும் கலாசாரமும் பற்றிய சிறப்பு கலந்துரையாடல் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை இல.82, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பல்வேறுபட்ட துறைகளைச் சார்ந்த கல்வியியலாளர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், சட்ட மருத்துவ நிபுணர்கள், சமயத்தலைவர்கள் ஊடக வியலாளர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்று தமது கருத்துக்களை முன் வைக்கவுள்ளனர். (அ-2)




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1520-டென்மார்க் படைகள் சுவீடனை முற்றுகையிட்டன. சுமார் 100 பேர் வரையில் உயிரிழந்தனர்.

★ 1811-இலங்கையில் இயற்றப்பட்ட புதிய நீதிமன்ற சட்டப்படி மேல் நீதிமன்றம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஒன்று கொழும்பில் பிரதம நீதியரசரின் நீதிமன்றமும் Puisne Justice என அழைக்கப்படும் நீதிமன்றம் யாழ்ப்பாணத்திலும் அமைக்கப்பட்டன. கிரிமினல் வழக்குகளுக்கு ஜூரி முறையும் அமுலுக்கு வந்தது.

★ 1889-மொன்டானா ஐக்கிய அமெரிக்காவின் 41 ஆவது மாநிலமாக இணைந்தது.

★ 1895-எதிர் மின்கதிர்களைச் சோதனையிடும் போது வில் ஹெம் ரொண் ட்ஜென் எக்ஸ் கதிர்களைக் கண்டுபிடித்தார்.

★ 1917-ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சியை அடுத்து லெனின் ட்ரொட்ஸ்கி, ஸ்டாலின் ஆகியோருக்கு முழு அதிகாரமும் வழங்கப்பட்டது.

★ 1923-மியூனிக் நகரில் ஹிட்லர் தலைமையில் நாசிகள் ஜேர்மனிய அரசைக் கவிழ்க்கும் முயற்சி தோல்வியில் முடிந்தது.

★ 1938-பாரிஸ் நகரில் ஜேர்மனிய தூதுவர் கொலை செய்யப்பட்டதை அடுத்து ஜேர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் யூதர்களுக்கு எதிராக வன்முறைகள் கிளம்பின.

★ 1939-மியூனிக் நகரில் ஹிட்லரைக் கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.

★ 1942-மேற்கு உக்ரேனின் தெர்னோப்பில் நகரில் நாசி ஜேர்மனியினர் 2 ஆயிரத்து 400 யூதர்களை பெல்செக் நகரில் இருந்த வதை முகாமுக்கு அனுப்பினர்.

★ 1950-கொரியப் போர்: ஐக்கிய அமெரிக்க வான்படையினர் வட கொரிய மிக் விமானங்கள் இரண்டை சுட்டு வீழ்த்தினர்.

★ 1965-பிரித்தானிய - இந்தியப் பெருங்கடல் மண்டலம் அமைக்கப்பட்டது.

★ 1977-கி.மு.1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க மன்னன் இரண்டாம் பிலிப்பு என்பவனின் சமாதி மனோலிஸ் அண்ட்ரோனிக்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1987-வடக்கு அயர்லாந்தில் பிரித்தானிய இராணுவ நினைவு நிகழ்வொன்றில் ஐரியக் குடியரசு இராணுவத்தினரின் குண்டு வெடித்ததில் 12 பேர் உயிரிழந்தனர்.

★ 2006-பாகிஸ்தானில் தர்காய் என்ற இடத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 45 இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1656-எட்மண்ட் ஹேலி, பிரித்தானிய வானியல் ஆராய்ச்சியாளர் (இ.1742)

★ 1680-வீரமா முனிவர், இத்தாலியத் தமிழறிஞர் (இ.1847)

★ 1900-ந.பிச்சமூர்த்தி, தமிழ் இலக்கிய முன்னோடிகளுள் ஒருவர் (இ.1976)

★ 1923-ஜாக் கில்பி, அமெரிக்க மின்னியல் பொறியாளர் (இ.2005)

★ 1927-லால் கிருஷ்ண அத்வானி, இந்திய அரசியல்வாதி

### இறப்பு

★ 1958-சி.கணேசையர், ஈழத்துத் தமிழறிஞர் (பி. 1878)



★ 1902-இலங்கையின் தமிழ் அரசியல்வாதியும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ஜி.ஜி. பொன்னம்பலத்தின் பிறந்த தினம்.

# கயிறே என் கதை கேள்!

# முருகன் சொல்லும் கண்ணீர்

எங்களின் தூக்குக்கு எதிராக மொத்த தமிழகமும் கைகோர்த்த போது, காங்கிரஸ்காரர்கள் மட்டும் கோபத்தோடு எதிர்த்தார்கள். "மறக்க முடியுமா...மன்னிக்க முடியுமா?" என உரக்கக் குரல் எழுப்பினர். ராஜீவ் கொலையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரைத் திரட்டி வந்து உண்ணா விரதப் போராட்டம் நடத்தினர்.

உண்மையாகவே ராஜீவ் காந்தியின் மீது நேசமும் பாசமும் பூண்டிருக்கும் காங்கிரஸ்காரர்களே... மாண்பையும் மனித நேயத்தையும் மறவாதிருக்கும் நியாயவாதிகளாகளே... உங்களிடம் எனது நீதிக்கான உண்மைக்கான சில கேள்விகளை சமர்ப்பிக்கிறேன். உங்களை நீதிபதிகளாக மாறும்படி நான் வேண்ட வில்லை. குறைந்த பட்சம் நீங்கள் உண்மை என்று தவறாக நம்பிக் கொண்டு இருக்கிற... எம்மைப் பற்றிய முடிவிலும் அபிப்பிராயத்திலும் சிறு மாறுதல் ஏற்பட்டாற்கூட, எமக்கு அதில், இதை வாசிக்கும் கணத்தில் மட்டும் என்னை ராஜீவ் காந்தி கொலையாளி எனப்பார்க்காது, தூக்குக் கயிற்றின் கீழ் நிற்கும் ஒரு துரதிர்ஷ்டக்காரனாக மட்டுமே பாருங்கள். என்றோ ஒரு நாள் உங்களது நெஞ்சுத் தராசுகளில் எங்களின் நியாயத் தட்டு ஜெயிக்கும். உங்களது மனச்சாட்சிக் கதவுகள் எங்களின் ஒப்பாரிகளால் உடைக்கப்படும். அன்று எம்மை நிரபராதிகள் என்று நிச்சயம் நீங்கள் நம்புவீர்கள். இதோ என் கேள்விகள்.

1) "இனிமேல் ராஜீவ் காந்தி தேர்தல் பிரச்சாரத்துக்கு வரமாட்டார்" என 11.5.91 அன்று தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் அறிவிப்பு வெளியிட்டார். பின்னர் அந்த முடிவை மாற்றி ராஜீவை தமிழ் நாட்டுக்கு கூட்டிவரக் காரணமானவர் யார்? அது ஏன் இன்று வரை மறைக்கப்படுகிறது? ராஜீவ் வந்த போது வாழ்ந்த காங்கிரஸ் தலைவர்கள் யாருமே இப்போது இல்லையா? இல்லை உண்மையைச் சொல்லும் வல்லமை அவர்களுக்கு இல்லையா?



2) ராஜீவ் காந்தி தமிழ் நாட்டுக்கு மீண்டும் வருகிறார் என்ற முடிவு மிக ரகசியமாகவே இருந்தது. பத்திரிகைகளில் அது பற்றி அனுமானச் செய்திகூட வெளிவராத நிலையில், சிவராசனுக்கு மட்டும் ராஜீவ் வருகை குறித்து எப்படி தெரிந்தது? முன் கூட்டியே அதை சிவராசனிடம் சொன்ன காங்கிரஸ் கறுப்பு ஆடு யார்?

3) 21.15.91 அன்று ஸ்ரீ பெரும்புதூரில் ராஜீவ் காந்தியின் பொதுக் கூட்டத்துக்கு பொலீசார் முதலில் அனுமதி அளித்த இடத்தை திடீரென ஒதுக்குப் புறமான இடத்துக்கு ஏன் மாற்றினார்கள்? இடத்தை மாற்றச் சொன்னவர்யார்? ராஜீவ் வழக்கைத் துப்புத் துலக்கிய அறிவார்ந்த பெருமக்கள் ஏன் இடமாற்றம் செய்தவர்களைப் பற்றி விசாரிக்கவில்லை?

4) ராஜீவ் ஒரு சாதாரண தலைவர் இல்லை? அவர் ஒரு கூட்டத்துக்கு வருகிறார் என்றால், அவரையே நேரில் யார் யார் பார்க்க முடியும். அவருக்கு மரியாதை செலுத்தும் அனுமதி யாருக்கெல்லாம் உண்டு என்பதை முன்கூட்டியே திட்டமிடுவது வழக்கம். ஆனால், ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்தில் அத்தகைய முன்னேற்பாடுகளை ஏன் செய்ய வில்லை? ராஜீவுக்கு மாலை அணிவிப்பவர்களின் பட்டியலை ஏன் முறையாகப் பதிவு செய்ய வில்லை?

5) அகில இந்தியத் தலைவருக்கு மாலை அணிவிப்பவர்களைப் பரிசோதனை செய்வது [illegible] துமே வழக்கம். ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்தில் உ[illegible] பரிசோதனை நடத்த ஏன் பெண் பொலீஸாரையும், மெட்டல் டிடெக்டரையும் ஏற்பாடு செய்யவில்லை? உரிய ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டியவர்கள் யார்? அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.

6) ராஜீவ் காந்தியின் மெய்க்காவல் அதிகாரியிடம் அவரது கைத்துப்பாக்கி இல்லாமல் இருந்தது எப்படி? கைத்துப்பாக்கியை வைத்துக் குண்டு வெடிப்பை எப்படி தடுத்திருக்க முடியும் என நீங்கள் கேள்வி எழுப்பலாம்... தனு இடுப்பில் கட்டிய குண்டுடன் வருவது தெரிந்தால் நிச்சயம் அவரைச் சுட்டாவது வீழ்த்தியிருக்க முடியும். மெய்க்காவலர்களை நம்பித்தானே தலைவர்கள் வெளியில் செல்கிறார்கள். அப்படி இருக்க, கைத்துப்பாக்கி எடுத்து வராமல் அந்த அதிகாரி எப்படி பாதுகாப்புக்கு வந்தார்? கைத்துப்பாக்கி எடுத்து வராதபடி அவரைத்தடுத்தவர்கள் யார்?

7) தமிழ் நாட்டில் ராஜீவ்காந்தியின் உயிருக்கு ஆபத்து உண்டு என உளவுத்துறை அறிக்கைகள் முன்னதாகவே அனுப்பட்டு உள்ளன. இருந்தும் உரிய பாதுகாப்பு வழங்கப்படாதது எப்படி? உளவுத்துறை தகவல்களையே உதா சீனப்படுத்திய சக்தி எது?

8) ராஜீவைக் கொலை செய்ய வந்த தனு, லதாபிரிய குமாரின் காரில் வந்து இறங்கியதையும், பின்பு அவருடனும் லதா கண்ணனுடனும் தனு பேசிக்கொண்டு இருந்ததையும் சம்பவ இடத்தில் பார்த்த தாக காங்கிரஸ் பெண்மணி குமுத வல்லி பத்திரிகைகளில் பேட்டி அளித்தார். அதோடு, வர்மா கமிஷன், ஜெயின் கமிஷன்களிலும் வாக்கு மூலம் அளித்தார். சி.பி.ஐ... எஸ்.ஐ.டி இனர் அவரைச்சாட்சியாக சேர்த்து இருந்தும்நீதி மன்றத்துக்கு சாட்சியாக அழைத்து விசாரிப்பதை தவிர்த்து விட்டனர். இந்த விடயங்கள் ஏன் கண்டு கொள்ளப்பட வில்லை? யாரைக் காப்பாற்றுவதற்காக இந்த முக்கிய விடயங்கள் வேண்டுமென்றே தவிர்க்கப் பட்டன?

9) சம்பவ இடத்தில் இறந்த அரிபாபு எடுத்த புகைப்படங்களின், இறுதிப்படத்தில் தனு தோளின் முதுகுப்பக்கத்தில் இருந்து யாரோ ஒருவர் கைவைத்து தள்ளிக்கொண்டிருப்பது அபபட்டமாகத் தெரிகிறது. அவர் யார்? தனுவை ராஜீவ் காந்தியின்அருகில் நெருங்க வைத்த அவரைப் பற்றி ஏன் சி.பி.ஜ. யினர் விசாரிக்க வில்லை? விசாரிக்க முடியாத அளவுக்கு அந்த நபரைக் காப்பாற்றியவர்கள் யார்?

10) சம்பவ இடத்தில் ஒரு பொலீஸாருக்கு 750ரூபாய் பணம் கொடுத்துத்தான் ராஜீவ் காந்தி அருகில் போக முடிந்தது என சிவராசன் சொன்னதாக ஒர் ஒப்புதல் வாக்கு மூலத்தில் சி.பி. ஐ யினர் எழுதி வைத்துள்ளனர். அந்த பொலீஸ்காரரர் யார் என்று சி.பி.ஜ விசாரிக்காதது ஏன்?

11) ராஜீவ் காந்தியைப் பொதுகூட்ட இடத்துக்கு அழைத்து வந்த கார், குண்டு வெடித்த மறுகணமே அந்த இடத்தை விட்டு மறைந்து போனதே... ராஜீவ் காந்திக்கு என்ன ஆனது என்று கூடப்பார்க்காமல் அந்தக் கார் பறந்தது எப்படி? ஒருவேளை காயப்பட்ட நிலையில்

## கைப்பை எங்கே? தள்ளியது யார் கை?

ராஜீவ் கிடந்தால், அவரை உடனடியாக கிளம்பிப்போகவைத்திருக்க வேண்டும். ராஜீவ் காந்தி மீது பேரன்பு கொண்ட காங்கிரஸ் பெரியவர்கள் இது பற்றி ஏன்கேள்வி கேட்க வில்லை? ராஜீவ்காந்திஇறந்திருந்தாலும் பரவாயில்லை... தான் தப்பித்தால் சரி என எந்த ஓட்டுநராவது நினைப்பார்களா? கார் உடனடியாகக் கிளம்பிப் போனது பற்றி ஏன் இந்தப் புலனாய்வு அதிகார்கள் விசா ரிக்க வில்லை?

12) இது மிக முக்கியமான கேள்வி. ஓர் உள்ளூர்தலைவர் பொதுக் கூட்டத்துக்கு வந்தாலே, அந்தக்கட்சியின் முக்கிய பிரமுகள் சம்பந்தப்பட்ட அந்தத் தலைவரைச் சுற்றி இருப்பார்கள். ஆனால், ராஜீவ் காந்தி என்கிற மாபெரும் தலைவர் அந்தப்பொதுக்கூட்ட இடத்துக்கு வந்து இறங்கி மேடையை நோக்கி நடத்து போனபோதும் குண்டு வெடித்த போதும் தமிழக காங்கிரஸ் தலைவர்கள் ஒருவர் கூட அவருக்கு அருகில் இல்லாமல் போனது எப்படி? மற்றக் கூட்ட இடங்களில் எல்லாம் ராஜீவ் காந்தியைச் சுற்றி முண்டிய டிக்கும் உள்ளூர் தலைவர்கள் அன்று மட்டும், அங்கு விலகி இருந்ததன் மர்மத்தை ஏன் காங்கிரஸ் அபிமானிகள் உணரவில்லை? இப்போது நான் சொல்வது கற்பனைகூட செய்யக் கூடாதது. ஆனாலும், ராஜீவ் கொலைச் சதியின் பின்னனியை விளக்க எனக்கு வேறு வழி இல்லை.



இன்றைக்குப் பிரசித்தியாக இருக்கும் ஏதாவது ஒரு அரசியல் தலைவரை மனதுக்குள் பாவித்துக் கொள்ளுங்கள். அவர் ஒரு கூட்டத்துக்கு வரும்போது குண்டு வைத்துக் கொல்லப்படுகின்றார் என்றால், அவரை அடுத் திருக்கும் இரண்டாம் கட்ட தலை வர்கள் எத்தனை பேர் இறப்பார்கள்? நீங்கள் நினைக்கும் தலைவரோடு இரண்டாம் கட்ட தலைவர்களையும் மனதுக்குள் நினைத்துப் பாருங்கள். ஆனால், ராஜீவ் என்கிற மாபெரும் தலைவனின் படுகொலை தமிழக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எந்தத் தலைவர் களையும் இம்மி அளவும் பாதிக்காதது எப்படி? மரணத்தை விடுங்கள்... சம்பவத்தின் போது அங்கே இருந்த காங்கிரஸ் தலைவர்கள் யாருக்கும் சிறு கீறல்கூட ஏற்படாதது எப்படி? சாதாரண மக்களையும் அப்போது ஆச்சரியப் படுத்திய – அதிரவைத்த கேள்வி இது. ஆனால், நாளாக ஆக இருந்த இந்தக் கேள்வி எல்லோருடைய மனங்களில் இருந்தும் மறைந்து விட்டது. ராஜீவ் காந்தி இறந்த துக்கம் தாங்காமல் இன்றைக்கும் கண்ணீர் வடிக்கும் காங்கிரஸ் காரர்களின் மனங்களில் மட்டும் இந்தக் கேள்வி ஏன் எழவில்லை.

13) குண்டு வெடிப்பு சம்ப வத்தில் காயமடையாத லலித் சந்திர சேகர் காயமடைந்த தாக மருத்தவமனையில் போய் படுத்துக் கொண்ட மர்மத்தையும், அவரது சிங்கள நண்பர் சம்பவ இடத்தில் இருந்து மாய மான மர்மத்தையும், அது பற்றி உண்மைகளை கண்டறியாது சி.பி.சி தவிர் துக் கொண்ட மர்மத்தையும் பற்றி ஏன் ஒரு காங்கிரஸ் காரர்கூட கேள்வி எழுப்பவில்லை?

14) அந்த பாரதூரமான சம்பவம் நடந்தவுடன் அந்த இடத்தில் இருந்த அரிபாபுவின் கேமராவில் இருந்த புகைப் படச் சுருள் முதன் முதலில் ஒரு பத்திரிகை வசம் போனதும், அதைப் பெறத் தாம் படாதடாடுபட்டதாகவும் இந்த வழக்கின் தலைமைப் புலனாய்வு அதிகாரி கூறி இருக்கிறார் அப்படி என்றால், அந்தச் சம்பவ இடம் உடனே பாதுகாக்கப் படவில்லை. என்று தானே அர்த்தம்? இதை வைத்தே உண்மை யான குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாக ஏன் குற்றம் சொல்ல முடியாது?

15) சம்பவ இடத்தில் ஹிரிபாபுவால் எடுக்கப்பட்டதாக சொல்லப் படும் புகைப்படத்தில் உள்ள தனுவின் நெற்றியில் பொட்டுக் கிடையாது. ஆனால், அவர் இறந்து கிடக்கும் படத்தில் அவர் நெற்றியில் பொட்டு இருக்கிறது. ஒன்று, புகைப்படத்தில் இருக்கும் பெண் ணும் இறந்த பெண்ணும் வெவ்வேறு பெண்ணாக இருக்க வேண் டும். அல் லது, அந்த சம்பவம் நடந்த பின் இறந்த பெண்ணின் நெற்றியில் யாரோ பொட்டு வைத் திருக்க வேண்டும். இந்த உண்மை குறித்து ஏன் விசாரிக்கப்படவில்லை? ஒரு மிக முக்கியக் கொலை வழக்கில் புகைபட ஆதாரங்களைக் கூட புலனாய்வு அதிகாரிகள் பொருட்படுத்தாமல் போனது எப்படி?

16) மேற்படி அதே புகைப்படத்தில் இருக்கும் தனுவின் தோளில் கைப்பை உள்ளது. அது சம்பவ இடத்தில் கைப்பற்றப்படவும் இல்லை: அது பற்றி விசாரணை செய்யப் படவும் இல்லை. கொல்லையாளியின் கைப்பை எவ்வளவு முக்கியமான ஒன்று ... அது எப்படி மாயமானது? அந்தக் கைப்பை பர் [illegible]ிய விசாரணை, உண்மையான குற்றவ[illegible]ளிகளை அடையாளம் காட்டியிருக்கலாம். என்பது சி.பி.ஐ- யினருக்கு எப்படித் தோன்றாமல் போனது? அந்தக் கைப்பையில் இருந்து ஏதா வ து ஒரு பொரு ளாவது உண்மைக்குற்ற வாளி களை நோக்கி விசாரணை அதிகாரிகளைத் திருப்பி இருக்குமே... அப்படி இருக்க, அந்தக் கைப்பை குறித்த கவலை எவருக்குமே இல்லாது போனது ஏன்?

17) இத்தனை கேள்விகளுக்குப் பிறகும் "சி.பி.ஐ- இனர் சொன்னால் சரியாகத் தானே இருக்கும்" எனக் கறைபடியாத காங்கிரஸ் காரர்கள் நம்பலாம்.

இதே சி.பி.ஐ. அதிகாரிகள் தான் யார் யாரையோ காப்பாற்ற முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் மீது பொய் வழக்கு புனைய முடியும் என்றால், கொடூர, காட்டுமிராண்டித்தனமான தடா சட்டத்தின் அதிகாரத்தை வைத் துக் கொ ண் டு அப்பா வி க ள் எங்க ளை, அதிகாரி கள் ஏன் பலிக்கடாக்கள் ஆக்கி இருக்க முடியாது? எங்களின் நிலை யில் இருந்து ஒரு நிமிடம் யோசித்தாலே, உங்களின் மனோபாவம் மாற வாய்ப்பு இருக் கிறதே.



அதை ஏனய்யா செய்ய மறுக்கிறீர்கள்? 21 வருடங்களை இழந்துதவிக்கும் எங்களுக்காக சில நிமிடங்கள் கூட உங்களின் இதயம் இடம் கொடுக்கவில்லையா?

11

ஜூனியர் விகடன்

# இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை எதிர்பார்க்கும் சர்வதேசம்

(கொழும்பு)

**இலங்கை அனைத்துலக போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்தக் கோரும் நாடுகள், நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மீது தாக்குதல் தொடுக்கத் தயாராகி வருதாக கொழும்பு ஊடகத் தகவல் ஒன்று கூறுகிறது.**

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையைச் சமர்ப்பிக்க வழங்கப்பட்டுள்ள காலக்கெடு எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

ஆனால், இந்த அறிக்கை இலங்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்பது குறித்து குழுப்பமான தகவல்களே வெளியாகின்றன.

எதிர்வரும் 18 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதியின் பிறந்த நாளன்று இந்த அறிக்கை கையளிக்கப்படும் என்று முன்னர் கூறப்பட்டது.

அதேவேளை, காலக்கெடு முடிந்த நான்கு நாட்களின் பின்னர் நவம்பர் 19 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்று இலங்கை அரசின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

நேற்றுடன் இந்த அறிக்கை தயாரிப்புப் பணி முடிந்து விடும் என்றும் இந்த வாரமே இது இலங்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்றும் மற்றொரு தகவல் கூறுகிறது.

அதேவேளை, அறிக்கை தயாரிப்பு முடிவடைந்து செப்பனிட்டு சரிபார்க்கும் பணிகள் நடந்து வந்ததாகவும் நேற்றுடன் அது நிறைவடையும் நிலையில் எதிர்வரும் 11 ஆம் திகதிக்கும் 15 ஆம் திகதிக்கும் இடையில் இலங்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்றும் ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே மகிந்த ராஜபக்ஷவின் தந்தையாரான டி.ஏ.ராஜபக்ஷவின் நினைவு நாளான நேற்று நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை கையளிப்பு இடம்பெற்றிருக்கலாம் என்ற தகவலும் உள்ளது.

இந்த அறிக்கை கையளிப்பு எப்போது என்பது பற்றி பல்வேறு தகவல்கள் வெளியாகின்றன. ஆனால், அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை கையளிக்கப்பட்டு விடும் என்பது உறுதியாகியுள்ளது.

இந்த நிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்குள் செயற்படும் சில எதிர்க்கட்சிகள் தமது அரசியல் விளையாட்டுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று இலங்கை அரசாங்கம் கவலை கொண்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அதேவேளை, ஆணைக்குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் அது பொதுமக்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்ற அழுத்தங்கள் இலங்கை அரசுக்கு அதிகரித்துள்ளன.

முன்னதாக இந்த அறிக்கை பொது மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்படாது என்று ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் கூறியிருந்தார்.

ஆனால், அந்த அறிக்கையை இலங்கை ஜனாதிபதி நாடாளுமன்றத்தின் மூலம் பகிரங்கப்படுத்துவார் என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எனினும் இரண்டு வாரங்களுக்குள் இந்த அறிக்கையைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று கொழும்பிலுள்ள சில வெளிநாட்டு இராஜதந்திரிகளும் ஊடகங்களின் ஒருபகுதியும் அரசசார்பற்றநிறுவனங்களும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

அத்துடன் இந்த அறிக்கையை அடுத்த ஆண்டு ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்குமாறு பரப்புரை செய்யவும் இவர்கள் திட்டமிட்டுள்ளதாகவும் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று கூறியுள்ளது.

குறிப்பாக இந்த முயற்சிக்கு கனடா தலைமை தாங்கலாம் என்றும் பிரித்தானியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம், அனைத்து லக மன்னிப்புச் சபை போன்றன ஆதரவளி க்கலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கொழும்பு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (அ)

## ஜனாதிபதியும் ரணிலும் சந்திப்பு

(கொழும்பு)

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை அரசாங்கம் கையேற்கும் சட்டமூலம் தொடர்பில் கலந்துரையாடுவதன் பொருட்டு தாம் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியை சந்தித்ததாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சேதவத்தை வேஹெரகொட விஹாரையில் இடம்பெற்ற சமய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது சிங்கள வர்த்தகர்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் அவர் வலியுறுத்தினார். (அ)

## சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கிய சந்தேகநபர்கள் கைது

தமிழ்ச் சிறுமி ஒருவரைக் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய இருவரும் இவர்களுக்கு உதவி புரிந்தவர்கள் இருவருமாக 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக வத்தளை பொலிஸார் குறிப்பிட்டனர்.

மற்றுமொரு சந்தேகநபரை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நான்கு சந்தேகநபர்களும் சிங்களவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

14 வயதான குறித்த சிறுமி கடந்த2 ஆம் திகதி கொழும்பு–வத்தளைப் பகுதியில் வைத்து துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## உணவுச்சட்டத்தினை மீறி பொதிசெய்து விற்பனை செய்தோர் நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

நீர்கொழும்பு வீதி, சீதுவ பகுதியில் உள்ள பிறிமா சன்றைஸ் பிரைவெட் லிமிட்டெட் கம்பனியிலிருந்து திருகோணமலைக்கு ஏற்றி வந்த பாண், பணிஸ் மற்றும் வெதுப்பகப் பொருட்களுடன் நான்கு பேரைப் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் கைதுசெய்துள்ளனர்.

உணவுச் சட்டத்திற்கு எதிராக பொதி செய்து விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே மேற்படி கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. அத்துடன் மேற்படி பொருட்களை ஏற்றி வந்த இரண்டு வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

சீதுவ பகுதியிலிருந்து வெதுப்பக பொருட்களைத் தயாரிக்கின்ற வேளையில் அதாவது 4 ஆம் திகதி பக்கெற் இடப்பட்ட பொருட்களுக்கு 5 ஆம் திகதி என பக்கெற் செய்து விற்பனை செய்து வந்த சந்தர்ப்பத்திலேயே உப்புவெளி பகுதியில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டதாக பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட வாகனம் உட்பட நால்வரையும் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் யூ.எல்.ஏ.அஸ்ஹர் முன்னிலையில் ஆஜர்படுத்திய வேளை தலா இரண்டு இலட்சம் ரூபாய் சரீரப்பிணையில் செல்வதற்கு உத்தரவிடப்பட்டதுடன் இன்று நீதிமன்றத்திற்கு ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டது. (அ)

## 37 நிறுவனங்கள் மட்டுமே சுவீகரிக்கப்படவுள்ளன

### ஜனாதிபதி தெரிவிப்பு


(கொழும்பு)

நட்டத்தில் இயங்கி வரும் 37 நிறுவனங்கள் மட்டுமே சுவீகரிக்கப்பட்டு தேசியமயப்படுத்தப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வேறு நிறுவனங்கள் இந்த சட்ட மூலத்தின் ஊடாக தேசியமயப்படுத்தப்படாது என அவர் உறுதியளித்துள்ளார்.

எதிர்கட்சிகள் குற்றம் சாட்டுவதனைப் போன்று இலாபத்தில் இயங்கி வரும் தனியார் நிறுவனங்களை அரசாங்கம் அபகரிக்காது என அவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தக சம்மேளனப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)



யாழ்.வல்வை சிதம்பராக்கல்லூரியில் மாணவர்களின் உடல் உள நலன் கருதி தும்பளை யோகசாந்தி நிலையத்தினரால் யோகாசன கண்காட்சி அண்மையில் நடைபெற்றபோது யோக செய்முறை படத்தினை பாடசாலை அதிபரிடம் வழங்குவதையும் யோகசாந்தி, நிலையத்தின் ஆசிரியர் தே.தேவராஜேந்திரம் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## தைபோய்ட் நோயாளர் எண்ணிக்கை கொழும்பு நகரில் அதிகரிப்பு

கொழும்பு நகரில் தைபோய்ட் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில் தைபோய்ட் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட 35 நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக கொழும்பு மாநகரசபை வைத்திய அதிகா்ரி பிரதீப் காரியவசம் குறிப்பிடுகின்றார்.

அவர்களுள் அதிகமானவர்கள் ஹோட்டல் ஊழியர்கள் எனவும் இந்த வருடம் தைபோய்ட் காய்ச்சலினால் சுமார் 55 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நாட்டிலுள்ள ஏனையவர்களுக்கு இந்தக் காய்ச்சல் பரவாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகரசபையின் பிரதான சுகாதார வைத்திய அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (அ)

## அகதிகளை திருப்பி அனுப்பும் சுவிசின் தீர்ப்புக்கு கண்டனம்

அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட இலங்கை அகதிகள் நாட்டுக்கு திருப்பியனுப்படலாம் என்று சுவிட்சர்லாந்து நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அந்த நாட்டின் மனித உரிமை அமைப்புக்கள் கண்டித்துள்ளன.

சுவிட்சர்லாந்தின் அகதிகள் சபை, நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு முதிர்ச்சியற்றது என்று விமர்சித்துள்ளது.

இந்நிலையில் கடந்த ஒக்டோபர் 27 ஆம் திகதியன்று சுவிட்சர்லாந்தின் பிராந்திய நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றில் இலங்கையின் வடக்கை சேர்ந்தவர்களை தவிர ஏனைய இடங்களில் மனித உரிமை மேம்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வடக்கில் இருந்து அகதி அந்தஸ்தை கோரியுள்ளவர்களை தவிர ஏனையவர்கள் திருப்பியனுப்பப்படலாம் என்று அந்த நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (அ)

# இனங்களுக்கிடையே முரண்பாடுகளை ஏற்படுத்துவதே த.தே.கூ.வின் நோக்கம்



## அமைச்சர் மஹிந்த சமரசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

இனங்களுக்கிடையே முரண்பாடுகளை ஏற்படுத்துவதே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நோக்கம் என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வழங்க சில நாடுகள் முயற்சி செய்கின்றன.

சில கூட்டமைப்பு உறுப்பினர்கள் புலிக்கொடியேற்றப்பட்ட கூட்டங்களில் கலந்து கொண்டு அவர்களுக்கு நிதி திரட்டவும் உதவி செய்துள்ளனர்.

புலிகளுக்கு ஆதரவாக செயற்படும் ஓர் அரசியற் கட்சியை ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகள் சந்திப்பு ஏற்றுக்கொள்ள முடியாது. அது உறுப்பு நாடான இலங்கைக்கு இழைக்கும் அநீதியாகவே கருதப்படவேண்டும்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக கருதப்படமுடியாது.

கூட்டமைப்பினரின் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட கட்சிகளும் அரசியல் நீரோட்டத்தில் இயங்கி வருகின்றன. முஸ்லிம் அரசியல் கட்சிகளும் இயங்கி வருகின்றன.

எனவே, இந்த சகல தரப்பினரும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்தை சந்திக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என தினமின பத்திரிகைக்கு அளித்த நேர்காணலில் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பலம் பொருந்திய நாடுகள் இரட்டை நிலைப்பாட்டை பின்பற்றி வருகின்றன.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு இலங்கையில் நடத்தப்படுவதனை தடுப்பதற்கு சில நாடுகள் கடும் முயற்சி மேற்கொண்டன. எனினும் ஜனாதிபதி தலைமையிலான குழுவினர் வெற்றிகரமாக அந்த முயற்சிகளை முறியடித்ததாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராக மக்களை பயன்படுத்த வேண்டும்

## அநுரகுமார திஸாநாயக்க எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராக மக்கள் சக்தியை பயன்படுத்த வேண்டுமென ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது. துனிசியா, எகிப்து போன்ற நாடுகளில் ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிராக மக்கள் சக்தி வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டது என ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தைப் பயன்படுத்தி இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். துனிசியா போன்ற நாடுகளில் பாராளுமன்ற பெரும்பான்மை பலமுடைய அரசாங்கங்கள் மக்கள் சக்தியினால் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் எதிர்ப்பின் காரணமாக தனியார் துறை ஊழியர்களுக்கான ஓய்வூதிய சட்டத்தை இலங்கை அரசாங்கம் வாபஸ் பெற்றுக் கொண்டது என அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் போராட்டங்களை நடத்தாது மக்களின் சக்தியைப் பயன்படுத்தி மாற்றங்களை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தனியார்துறை சொத்துக்களை தேசியமயப்படுத்தும் உத்தேச சட்டம் ஆபத்தானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் எந்தவொரு தனியார்துறை உடைமையையும் தேசியமயப்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் காலத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்காத வர்த்தகர்கள் இந்தப் புதிய சட்டத்தின் மூலம் பாதிக்கப்படலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

சிம்பாவேயின் ஜனாதிபதி றொபர்ட் முகாபேவும் இவ்வாறான சட்டத்தையே அமுல்படுத்தியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# சமயதீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட சமய தீட்சை வைபவம் யாழ்.நீராவியடி பிள்ளையார் கோவில் மண்டபத்தில் எதிர்வரும் 11 திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இச்சமய தீட்சையினை 7 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் பெற்றுக் கொள்ள முடியும் என சைவ பரிபாலன சபை செயலாளர் தி.மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார். (அ)

# தனியார் சொத்துக்களை அபகரிப்பது குறித்து சர்வதேச ரீதியில் முறையிடப்படும்

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

தனியார் சொத்துக்களை தேசிய மயப்படுத்தல் குறித்து சர்வதேச ரீதியில் முறைப்பாடு செய்யப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகள் பாராளுமன்றக்குழு மற்றும் சர்வதேச சமூகத்திடம் இந்த விடயம் முறைப்பாடு செய்ய நேரிடும் என கட்சி அறிவித்துள்ளது.

இந்தச் சட்டத்தின் மூலம் தனியார் துறையினருக்கு எவ்வித நன்மையும் கிட்டாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த புதிய சட்டம் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் முக்கியஸ்தர்களுக்கு விளக்கம் அளிக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். (அ-2)

# நாட்டின் சட்டம்- ஒழுங்கு பாரியளவில் சீர்குலைந்துள்ளது



## தயாசிறி எம்.பி.குற்றச்சாட்டு

நாட்டில் சட்டம்- ஒழுங்கு பாரியளவில் சீர்குலைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றம் சுமத்தியுள்ளார்.

மக்கள் மீது பொலிஸாரும் பொலிஸார் மீது மக்களும் தாக்குதல் நடத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாளுக்கு நாள் நாட்டில் சட்டம்- ஒழுங்கு நிலைமைகள் மோசமடைந்து செல்வதாகத் தெரிவித்துள்ள அவர் அரசாங்கத்துக்கு நெருக்கமாக செயற்படுவோர் குற்றச் செயல்களில் ஈடுபட்டாலும் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ள வாய்ப்பிருக்கின்றது.

இவ்வாறான நிலைமைகளுக்கு எதிராக போராடவேண்டியது எதிர்க்கட்சியின் கடமையாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எதிர்க்கட்சிகளுக்குள் நிலவிவரும் முரண்பாடுகள் களையப்பட்டு சகலரும் அணிதிரண்டு அடக்கு முறைகளுக்கு எதிராக போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகள் சிலர் அரசாங்கத்துடன் மறைமுகமான தொடர்புகளை பேணிவருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். சட்ட காரணிகளை கவனத்திற் கொள்ளாது பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு வெளிநாட்டில் சிகிச்சை பெற்றுக்கொள்ள அரசாங்கமே வாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்தமை பிழையான முன்னுதாரணமாகும்.

துமிந்தவுக்கு வெளிநாட்டில் சிகிச்சை அளிக்கப்படுவதனை தாம் எதிர்க்கவில்லை எனவும் சட்டக் காரணிகளை பின்பற்றி அதனை மேற்கொண்டிருக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# முச்சக்கரவண்டிகளுக்கு கட்டண மானியம்

## போக்குவரத்து அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

சகல முச்சக்கரவண்டிகளுக்கும் தகுந்த கட்டண மானியங்களை வழங்க போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் குமார் வெல்கம தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பை தொடர்ந்து முச்சக்கரவண்டிகளின் சாரதிகள் தமது விருப்பத்திற்கு ஏற்றவகையில் கட்டணங்களை அறவிடுவதன் காரணத்தினாலேயே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இது தொடர்பான சட்ட மூலம் மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கரந்தெனிய மருத்துவர் கொலையின் சந்தேகநபர்கள் 2பேர் சரணடைந்தனர்

(கொழும்பு)

கரந்தெனிய மருத்துவர் படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு படைவீரர்களும் சரணடைந்துள்ளனர். மருத்துவர் பிரியங்க பிரசாந் ஜயசிங்க என்பவரை படுகொலை செய்வதற்காக இராணுவ கப்டன் ஒருவரினால் ஒப்பந்தம் செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இரண்டு படைவீரர்களே இவ்வாறு சரணடைந்துள்ளனர்.

கடந்த செப்டெம்பர் மாதம் 29 திகதி இனம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் மருத்துவர் ஜெயசிங்க உயிரிழந்துள்ளார்.

போட்டி காரணமாக சக மருத்துவர் ஒருவர் இராணுவ கப்டன் ஒருவரின் மூலம் மருத்துவர் ஜயசிங்கை படுகொலை செய்துள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதனை தொடர்ந்து கரந்தெனிய பிரதேசத்தில் பெரும் பதற்ற நிலைமை நிலவியது.

சந்தேகநபர்களின் வீடுகளை பிரதேச மக்கள் தாக்கியதுடன் இரண்டு நாட்களுக்கு இரவுவேளையில் குறித்த பிரதேசங்களில் பொலிஸார் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)




துணுக்காய் கல்வி வலயத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுகிடையே நடத்தப்பட்ட வலய ரீதியான போட்டியில் வெற்றிபெற்ற மு/மாங்குளம் மகா வித்தியாலய மாணவர்களுடன் கல்லூரி அதிபர் ப.இரவீந்திரநாதன், உப அதிபர் அருட்சகோதரி மேரி சிறிய புஸ்பம், ஆசிரியர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

# பிரித்தானிய பொருளாதாரத்தை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - கமரூன்

உலகத்துக்கு முன்னுதாரணமாக தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்த பிரித்தானியா தற்போது ஆபிரிக்க நாட்டின் தரத்தில் உள்ளது என டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

16 ஆம் நூற்றாண்டிற்கு பின்னர் பிரித்தானியாவின் பொருளாதாரம் மந்த நிலையில் இருந்து வந்துள்ளது.

விக்டோரியாவின் ஆட்சிக் காலத்தில் 5 பில்லியன் பவுண்ஸ்க்கு விமான நிலையம் தேம்ஸ் நதியின் அண்மையில் நிறுவப் பட்டது. இது பிரித்தானியரின் தொழில்நுட்ப அறிவை பறைசாற்றிக் கொண்டிருந்தது.

நாட்டின் அபிவிருத்தி காலத்துக்கேற்ற சவால்களுக்கு இசைவாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.சிறிய துறைகளில் தமது கவனத்தைச் செலுத்தாமல் பாரிய அபிவிருத்தித் துறையில் நமது நாட்டின் பொருளாதாரத்தை திசை திருப்பினால் மாத்திரமே பொருளாதாரத்தில் முன்னர் இருந்தது போல மேலோங்கி இருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

பல மில்லியன் பிரயாணிகள் சென்று வரும் எமது விமான நிலையம் அதே தரத்தில் இன்று இயங்குகின்றது. குறைந்தது 150 மில்லியன் பிரயாணிகளைக் கொண்டு செல்லக்கூடியவாறு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

பாரிய வீதிகள், அதி வேகமாகச் செல்லக் கூடிய புகையிரதப் பாதைகள் என்பன அமைக்கும் தொழில்நுட்பவியலாளர்களை எமது நாடு கொண்டிருக்க வேண்டும். இதனால் நாட்டின் வேலையில்லாப் பிரச்சினைகளுக்கு தீர்வாக இருக்கும். இன்று பல மில்லியன் மக்கள் வேலையின்றி கஷ்டப்படுகின்றனர்.

பிரான்ஸ் இத்தகைய பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுகின்றது. இது எமக்கு உதாரணமாக அமைய வேண்டும் எனவும் சீனா இன்றைய பொருளாதார உலகில் முன்னிலையில் இருக்கின்றது.

சீனாவில் அதிவேக புகையிரதங்கள் இருக்கின்றன. சீனாவில் தொழில்நுட்பம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் கற்பவர்களின் எண்ணிக்கை வீதம் எம்மைவிட அதிகமாக இருக்கிறது. எனவே வரவு -செலவுத்திட்டத்தில் நவீன அபிவிருத்தித்துறையில் எமது பங்கீடு வழமைக்கு மாறாக அதிகமாக இருக்க வேண்டும்.



அப்போதுதான் நாட்டை ஏனையவர்களுக்கு முன்னோடியாக ஆக்கலாம் என அவர் தெரிவித்தார். (அ-2)

# நேபாள இராணுவத்திற்கு நிதியுதவி வழங்க சீனா முடிவு

(காத்மண்டு)

நேபாள இராணுவத்திற்கு 7.7 மில்லியன் டொலர் நிதி உதவி அளிக்க சீனா முடிவு செய்துள்ளது. சீனா- நேபாளம் இடையே இராணுவ ஒத்துழைப்பு ஏற்படுத்தும் விதமாக நேபாள நாட்டு இராணுவ தலைமை தளபதி ஜெனரல் சத்ரமான்சிங்க் கூரங் தலைமையிலான 6 பேர் கொண்ட குழு சீனா சென்றிருந்தது.

அங்கு சீனா நாட்டு இராணுவ உயரதிகாரிகள் மற்றும் சீனா இராணுவ முகாம்களை பார்வையிட்டது.

அப்போது அந்நாட்டுடன் இருதரப்பு இராணுவ ஒத்துழைப்பு கையெழுத்தானது. இதனை தொடர்ந்து நேபாள நாட்டிற்கு சீனா 7.7 மில்லியன் டொலர் நிதி உதவி அளிக்க முடிவு செய்துள்ளது.

இதன்படி இராணுவத்திற்கு தேவையான நவீன உபகரணங்கள் வழங்குவது தலைநகர் காத்மண்டுவின் சாச்சாவுனி நகரில் உள்ள பீரேந்திரா இராணுவ மருத்துவமனையின் அறிவிப்பை சீன மத்திய இராணுவ கமிஷனர் ஜெனரல் சென்பிங்க்டே தெரிவித்துள்ளார். (அ-2)

# ஜமத் உத் தாவா அமைப்பை தடைசெய்தது பாகிஸ்தான்

பாகிஸ்தானில் செயற்பட்டு வரும் லஷ்கர் இ தொய்பா அமைப்பின் உட்பிரிவான ஜாமாத் உத் தாவா அமைப்பை தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இந்த அமைப்பு தான் கடந்த 2008 ஆம் ஆண்டு மும்பைத்தாக்குதலில் தொடர்புடையதாக கூறப்படுகின்றது. இது குறித்து பாகிஸ்தான் உள்துறை அமைச்சரகம் வெளியிட்டுள்ள செய்தியில்,

பாகிஸ்தானில் தற்போது 31 பயங்கரவாத அமைப்புக்கள் உள்ளன. இவை தடை செய்யப்பட்ட அமைப்புகளாகும். மேலும் கடந்த 2008 ஆம் ஆண்டு இந்தியாவில் மும்பை தாக்குதலில் 166 பேர் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலுக்கு மூளையாக ஜாமத் உத் தாவா என்ற பயங்கரவாத அமைப்பு செயற்பட்டுள்ளது. இது தொடர்பாக இந்த அமைப்பின் மீது கடந்த 2009 ஆம் ஆண்டு லாகூர் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

ஏற்கனவே ஐ.நா. பாதுகாப்பு குழுவில் இந்த அமைப்பை லஷ்கர் இ தொய்பா அமைப் புடன் தொடர்புடையது என அறிவித்துள்ளது. எனவே ஜாமத் உத் தாவா அமைப்பு தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புக்கள் பட்டியலில் உள்ளதாக உள்துறை அமைச்சர் ரஹ்மான்மாலிக் தெரிவித்துள்ளார். (அ-2)




துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் நடைபெற்ற ஆப்கானிஸ்தான் குறித்த கருத்தரங்கில் கலந்து கொண்ட பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹீனா ரப்பானி ஹர் ஐ (இடது) துருக்கி வெளியுறவுத்துறை அமைச்சர் அகமத் தேவூடோக்லு வரவேற்று கைலாகு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# வெடிகுண்டு தாக்குதலில் 150 பேர் வரை உயிரிழப்பு

## நைஜீரியாவில் சோகம்

(அபுஜா)




ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில் போகோ ஹராம் என்ற பயங்கரவாத அமைப்பு நடத்திய தொடர் வெடிகுண்டுத் தாக்குதல்களில் 150 பேர் பலியாகினர். நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள யோப் மாகாணத்தின் டமாடுரு என்ற நகரில் நேற்று முன்தினம் பல தேவாலயங்கள், பொலிஸ் தலைமை நிலையம், மசூதிகளில் அடுத்தடுத்து தொடர் குண்டு வெடிப்புக்கள் நிகழ்ந்தன.

அதேபோல் யோப் மாகாணத்தை அடுத்துள்ள போர்னோ மாகாணத்தின் மைடுகுரி நகரில் தற்கொலைத் தாக்குதல் நடந்தது. இரு சம்பவங்களிலும் ஏழு பொலிஸார், இரு இராணுவ வீரர்கள் உட்பட 150 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். பலர் காயம் அடைந்தனர்.

இச்சம்பவங்களுக்கு அல்கொய்தாவுடன் தொடர்புடைய போகோ ஹராம் என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. பாதுகாப்பு படையினர் எங்கள் நபர்களைத் தாக்குவதும் பொதுமக்களைத் துன்புறுத்துவதும் நிற்கும் வரையில் அரசு அமைப்புகளின் மீதான எங்கள் தாக்குதல் தொடரும் என போகா ஹராம் மிரட்டல் விடுத்துள்ளது.

இக்கொடூர சம்பவங்களுக்கு ஜனாதிபதி குட்லக் ஜொனாதன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். கடந்த 2004 இல் நிறுவப்பட்ட போகோ ஹராம் அமைப்பின் முக்கிய நோக்கம் நைஜீரியாவை முழுமையாக இஸ்லாமிய ஷரியா சட்டம் அமுல்படுத்தும் நாடாக்குவது தான்.

மேற்கத்தேய கல்வி முறைகளுக்கு எதிரான இந்த அமைப்பு நாட்டின் வட பகுதியில் உள்ள 12 மாகாணங்களில் அமுலில் உள்ள ஷரியா சட்டம் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக இது போன்ற தாக்குதல்களை நடத்தி வருகின்றது. (அ-2)




# ஆப்கானில் ஆதிக்கம் செலுத்த இந்தியா முயற்சிக்கின்றது

## முஷாரப் குற்றச்சாட்டு



ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்துவதற்காக அங்கு இந்தியா நன்றாக விளையாடி வருகிறது என பாகிஸ்தான் முன் னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் குற்றம் சாட்டியுள்ளார்.

2014 இற்கும் ஆப்கானில் இருந்து படைகளை வாபஸ் பெற அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அதன்பின்னர் அங்கு ஆதிக்கம் செலுத்தலாம் என இந்தியா முயற்சித்து வருகிறது. அதற்கேற்ற வாறு ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாயுடன் இந்தியாவுடன் நெருங்கி வருகிறார் என முஷாரப் கூறினார்.

இந்தியாவில் பயிற்சி மேற்கொள்வதற்காக ஆப்கானிஸ்தானில் இருந்து தூதரக அதிகாரிகள், உளவுத்துறையினர், இராணுவத்தினர், பாதுகாப்புப் படையினர் என அனைவரும் செல்கின்றனர்.

ஆனால் இதேபோன்று நாங்களும் பயிற்சி அளிக்கிறோம் என்று பாகிஸ்தான் கூறினால் அதை வேண்டாம் என்று மறுக்கின்றனர். இதைவைத்துதான் இந்தியாவுடன் ஆப்கஜுன் நெருங்கி வருகிறது என்கிறேன் என முஷாரப் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கான் ஜனாதிபதி கர்சாயை முழுமையாக நம்பிவிட்டாலும் சமீபத்தில் அவர் பாகிஸ்தானுக்கு ஆதரவாக தெரிவித்த கருத்துகளுக்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எனினும் அவர் கூறியவாறு பாகிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தும் எனக் கூறுவது முட்டாள்தனமான கற்பனை என முஷாரப் தெரிவித்தார். (அ-2)

# மனித உரிமைகள் பேரவை மாநாட்டுக்கு ரணில் பயணம்

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு பிரித்தானியா சென்றுள்ளார்.

லண்டனில் இடம்பெறவுள்ள சர்வதேச மனித உரிமைகள் பேரவையில் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதன் பொருட்டே எதிர்க்கட்சி தலைவர் பிரித்தானியா செல்கிறார்.

சர்வதேச மனித உரிமைகள் பேரவையில் பிரதி தலைவராக ரணில் விக்ரமசிங்க செயற்படுகிறார்.

இந்த நிலையில் இந்த மாநாட்டில் மனித உரிமைகள் தொடர்பில் பல யோசனைகளை ரணில் விக்ரமசிங்க முன்வைக்க உள்ளார்.

இதனிடையே சர்வதேச தலைவர்கள் மற்றும் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரையும் எதிர்க்கட்சி தலைவர் சந்தித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க நாட்டில் இல்லாத காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சி தலைவரது செயலாளரினால் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிற்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜோன் அமரதுங்க நாடாளுமன்றில் எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளராக கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# துறைமுகத்திற்குள் நிலவும் தாமதத்திற்கு ஒழுங்கற்ற சோதனைகளே காரணம்

(கொழும்பு)

துறைமுகத்திற்கு வெளியே கொள்கலன்களை சோதனைக்கு உட்படுத்தலே தாமதத்திற்கு காரணமெனவும் அச்சோதனை நடவடிக்கையினை துறைமுகத்திற்குள் மேற்கொள்வதன் மூலம் தாமதத்தினை தவிர்க்க முடியுமெனவும் அகில இலங்கை சுங்க சேவைகள் திணைக்களத்தின் செயலாளர் ஜே.எ.குணதிலக்க தெரிவித்துள்ளார்.

துறைமுகத்திற்குள் நிலவும் தாமதத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து அண்மையில் கொள்கலன் சாரதிகள் சிலர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர். தமது பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வொன்றை பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் செயலாளர் தெரிவிக்கிறார்.

தற்போது துறைமுகத்திற்கள் இடப்பற்றாக்குறை நிலவுவதால் கொள்கலன்களை சோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கையை வெளியே மேற்கொள்வது இந்த தாமதத்திற்கு காரணமாக அமைந்துள்ளதாக துறைமுக அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பேலியகொட பகுதியில் கொள்கலன்களின் நடவடிக்கைகளுக்காக புதிய இடம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்படும் என சபை மேலும் சுட்டிக்காட்டுகிறது. (அ)

# லிட்டில் எய்ட் நிறுவனத்தின் வேலைத்திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

பிரித்தானியாவில் இருந்து செயற்படும் நிறுவனமான லிட்டில் எயிட் இன்று செவ்வாய்க்கிழமை தனது வேலைத்திட்டங்களில் மூன்றினை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

குருநகர் புனித/றோச் கத்தோலிக்க பாடசாலையின் நூல் நிலைய திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கும் யாழ்/ஒஸ்மானியா கல்லூரி நூல்நிலைய திறப்பு விழா காலை 11 மணிக்கும் நடைபெறவுள்ளது.

அத்துடன் கோப்பாய் நவமங்கை நிவாசம் கட்டடத்தில் இளைஞர்களிற்கான கணனி தொழிற்பயிற்சி நிலையத்தினை பிற்பகல் 4 மணிக்கும் திறக்கப்படவுள்ளன. இந்நிகழ்வுகளினை லிட்டில் எயிட் ஸ்தாபகரும் வேலைத்திட்ட இணைப்பாளருமான டறின் கொன்ஸ்டன்ரைன் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த ஸ்தாபனமானது மன்னார் புனித/சேவியர்ஸ் கல்லூரியிலும் ஊர்காவற்றுறை புனித/அந்தோனியார் கல்லூரியிலும் நூற்றுக்கும் அதிகமான ஆதரவற்ற பிள்ளைகளை பராமரித்து வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# விருது மற்றும் சான்றிதழை பெற்றுள்ள படைப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இலக்கிய பேரவையின் 2010 ஆம் ஆண்டிற்கான விருதுகள் மற்றும் சான்றிதழ்களைப் பெறும் நூல்களின் விபரங்கள் யாழ்.இலக்கிய வட்டத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

காவியத்திற்கான விருதினை **நீலாவணண் காவியங்கள்** என்னும் படைப்பிற்கு கவிஞர் நீலாவணனுக்கும் சான்றிதழினை **தீரன் திப்பு சுல்தான் காவியம்** எனும் படைப்பிற்கு ஜின்னாஹ்ஷரிபுத்தீனுக்கும் வழங்கப்படவுள்ளன. கவிதைக்கான விருதினை **சுவடெச்சம்** எனும் படைப்பிற்கு கவிஞர் சோ.பத்மநாதனுக்கும் சான்றிதழினை **கடந்து போகுதல்** எனும் படைப்பிற்கு நீ.பி. அருளானந்தமும் **சிறகு முளைத்த தீவாக** எனும் படைப்பிற்கு மட்டுவில் ஞானக்குமரனுக்கும் வழங்கப்படவுள்ளது.

சிறந்த நாவலுக்கான விருதினை **குடை நிழல்** எனும் படைப்பிற்கு தெளிவத்தை யோசேப்பிற்கும் சான்றிதழினை **சாம்பல் பறவைகள்** எனும் படைப்பிற்கு எஸ்.அரசரெத்தினத்திற்கும் வழங்கப்படவுள்ளது.

சிறுகதைக்கான விருதினை **முட்டைக் கோப்பி** எனும் படைப்பிற்கு திக்குவல்லை கமாலிற்கும் சான்றிதழினை **தாயின் மடி தேடி** படைப்பிற்காக கார்த்திகாயினிக்கும் வழங்கப்பட்டுள்ளது.

சிறுவர் இலக்கியத்திற்கான விருதினை **இனிக்கும் பாடல்கள் படைத்த இருபது கவிஞர்கள்** எனும் படைப்பிற்கு த.துரைசிங்கத்திற்கும் சான்றிதழினை **மழலைப்பாக்கள்** எனும் படைப்பிற்கு சிதம்பரபத்தினியிற்கும் வழங்கப்படவுள்ளது.

ஆய்விற்கான விருதினை **நெடுந்தீவு சிதையும் சின்னங்கள்** எனும் படைப்பிற்கு நெடுந்தீவு லக்ஸ்மனுக்கும் (வரலாறும் வளங்களும்) சான்றிதழினை **சூழ ஓடும் நதி** (ஜெயகாந்தன் படைப்புக்கள் பற்றிய ஆய்வு நூல்) எனும் படைப்பிற்கு கெக்கிறாவ ஸஹானாவிற்கும் வழங்கப்படவுள்ளது.

அறிவியலிற்கான விருதினை **வாதரோகம்** எனும் படைப்பிற்கு வைத்திய கலாநிதி செல்லத்துரை பரமசிவம்பிள்ளைக்கும் வழங்கப்படவுள்ளது.

சமயத்திற்கான விருதினை **திருவருட் பயன் கதைகள்** எனும் படைப்பிற்கு தமிழறிஞர் கே.வி.குணசேகரத்திற்கும் (குறள், உரை விளக்கம், கதைகள்) பல்துறை சார்ந்த விருதினை **இலங்கையில் தொலைக்காட்சி** எனும் படைப்பிற்கு எம்.பகீரதிக்கும் சான்றிதழினை **தொடர்பாடல் ஊடகக்கல்வி** எனும் படைப்பிற்கு பரராஜசிங்கம் இராஜேஸ்வரனுக்கும் வழங்கப்படவுள்ளது.

மொழி பெயர்ப்புக்கான விருதினை **கசந்த கோப்பி** எனும் படைப்பிற்கு இரா. சடகோபனிற்கும் சான்றிதழினை **அந்தப் [illegible] சந்திரிகையின் இரவு** எனும் படைப்பிற்கு கெக்கிறாவ சுலைகாவிற்கும் அளிக்கபட்டுள்ளது. நாடகத்திற்கான விருதினை **மனித தர்மம்** எனும் படைப்பிற்காக கலைச்செல்வனுக்கும் சான்றிதழினை **மாவீரன் சங்கிலியன்** எனும் படைப்பிற்கு (நாட்டுக் கூத்து) அண்ணாவியார் மு.அருட்பிரகாசத்திற்கும் வழங்கப்படவுள்ளது.

இவ் விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்விற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என இலங்கை இலக்கியப் பேரவையின் செயலாளர் சி.சிவநேசன் அறிவித்துள்ளார். (அ-2)

# தமிழ் நாட்டிலிருந்து 49 இலங்கை தமிழ் அகதிகள் நாடு திரும்புவர்

(கொழும்பு)

தமிழ் நாட்டிலிருந்து 12 குடும்பங்களைச் சேர்ந்த 49 இலங்கைத் தமிழ் அகதிகள் கப்பல் மூலம் இன்று செவ்வாய்க்கிழமை நாடு திரும்பவுள்ளதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் முகவரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டின் பல்வேறு முகாம்களிலும் தங்கியுள்ள 12 குடும்பங்கள் இரண்டாம் கட்டமாக இலங்கை செல்லவுள்ளனர். இவர்கள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் தூத்துக்குடியிலிருந்து நாடு திரும்பவுள்ளதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் சென்னையிலுள்ள இணைப்பு அதிகாரி ஆர்.வித்தியபாரதி இதன்போது கூறினார்.

இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட தூத்துக்குடி-கொழும்பு கப்பல் சேவை மூலம் முதற்கட்டமாக கடந்த ஒக்டோபர் மாதம் 37 அகதிகள் நாடு திரும்பினர். அவர்களின் சம்மதத்துடன் அழைத்து வரப்பட்டவர்கள் தங்களின் சொந்த இடங்களின் நிலைமைகளை அறிந்து கொண்டுள்ளனர். பெரும்பாலானவர்கள் தங்களின் உறவினர்களுடன் தொடர்புகளை வைத்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டு 800 இலங்கை அகதிகளும் 2010 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 054 அகதிகளும் இந்த வருடம் செப்டெம்பர் மாதம் ஆயிரத்து 448 அகதிகளும் நாடு திரும்பியுள்ளதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் விமானம் மூலமே நாடு திரும்பினர்.

தூத்துக்குடி-கொழும்பு கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தங்களுடன் உடைமைகளையும் எடுத்து வரக்கூடிய வசதி காணப்படுவதால் இக்கப்பல் சேவை மூலம் பயணிப்பதற்கு பெரும்பாலானோர் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த பயணிகள் கப்பல் தூத்துக்குடியிலிருந்து இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு புறப்படவுள்ளதாகவும் 14 மணித்தியாலய பயணத்தின் பின்னர் கொழும்பை வந்தடையவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# யோகாசன தியான வகுப்பு

யாழ்/ சிவானந்தா மகரிஷி யோக நிலையத்தினரால் எச்சாட்டி வைரவர் ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள பாலர் பாடசாலை மண்டபத்தில் நளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு புதிய யோகாசன தியான வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

இப் பயிற்சி வகுப்பில் ஆண், பெண், இன, மத, வேறுபாடுகள் எதுவுமின்றி அனை வரும் கலந்து கொண்டு பயன் பெற்றுக் கொள்ளலாம்.

நோயாளர்களுக்கு விசேட கவனங்களுடன் பயிற்சிகள் வழங்கி நோய்கள் குணப்படுத்தப்படும். அத்தோடு பயிற்சி பெற விரும்புவோர் எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னராக நிலையத்திற்கு வருகை தந்து விபரங்களைப் பதிவு செய்தபின் பயிற்சிகளில் ஈடுபட்டுக் கொள்ளலாம் என சிவானந்த மகரிஷி யோக நிலைய பொருளாளர் ச.விமேஸ் அறிவித்துள்ளார். (அ)





மு/ஒலுமடு தமிழ் வித்தியாலய விளையாட்டு மைதானம் திறப்பு விழாவும் பாடசாலை வாரத்தின் கலை விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கண் பார்வையை இழந்த மாணவன் சி.றஜீவன் பாடல் ஒன்றைப் பாடியமைக்காக பொலிஸ் அதிகாரி அன்பளிப்பு வழங்கியுள்ளதையும் விளையாட்டு மைதானத்தில் மாணவர்கள் விளையாட்டுகளில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.

இலம் என்று இருப்பாரைக் காணில்
நிலம் என்னும் நன்னாள் நகும்.

*- திருவள்ளுவர்.*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மூடப்பட்டபோது முழுத்துன்பமும் எங்களுக்கு திறக்கப்பட்டபோது பெரும் பயன் அவர்களுக்கு

ஏ9 பாதை மூடப்பட்டிருந்த காலம்,அந்தப் பாதை திறக்கப்பட்டதன் பின்னரான நிலைமை என்பவற்றை மிக உன்னிப்பாக அவதானித்தால் இரண்டு விடயங்கள் எமக்குப் புரியும்.

அதில் ஒன்று ஏ9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர் அதன் பெரும்பாலான அனுகூலங்களை தென்பகுதி மக்களே அனுபவித்து வருகின்றனர்.

அதேநேரம் ஏ9 மூடப்பட்டிருந்தபோது முழுத் துன்பமும் வட பகுதி மக்களுக்குரியதாக இருந்தது.

பாதை மூடப்பட்டிருந்தபோது துன்பத்தை அனுபவித்த மக்களே பாதை திறக்கப்படும் போது ஏற்படக்கூடிய நன்மைகளை அனுபவிப்பவர்களாக இருந்திருக்க வேண்டுமாயினும், துரதிர்ஷ்டவசமாக வட பகுதி மக்களுக்கு அந்தப் பொசுப்பு இல்லாமல் போயிற்று. இதற்கு எமது இளம் சமூகம் சரியாக வழிப்படுத்தப்படாமையே முக்கிய காரணமாகும்.

பட்டம் பெற்ற இளைஞர்களாயின் அவர்கள் அரச பணி தவிர வேறு எதனையும் செய்வதற்கு தயாரில்லை.அதுபோல உயர்தரம் படித்தவர்களோ கௌரவமான வேலையில்லையேல் சும்மா இருக்கலாம் என்ற நினைப்போடும் உள்ளனர்.

ஆக; அரச நியமனம், கௌரவமான வேலை என்ற கனவோடு காலம் கழிகின்றது. இதனால் எங்கள் மனித வளம் வீணாகி – விரயமாகிப் போக நீண்ட நாளில் வேலையில்லாத விரக்தியும் தவறான நட்புகளும் எங்கள் இளம் சமூகத்தின் எதிர்காலத்தையே சின்னாபின்னமாக்கி விடுகின்றது.

ஆனால்,தென்பகுதி இளைஞர்களோ றம்புட்டான் பழத்தை வட பகுதிக்கு கொண்டு வந்து அதனை பணமாக்கிக் கொள்ள இன்னொரு பகுதியினர் கட்டில், மேசை, கண்ணாடி என்று வீட்டுத் தளபாடங்களை தோளில் சுமந்து லாபமீட்ட, இன்னுமொரு தரப்பு எங்கள் பகுதி செப்பையும், இரும்பையும் கிலோவுக்கு கணக்கிட்டு கொழும்புக்கு எடுத்துச் சென்று பெரும் இலாபமடைகின்றனர்.

இதுதவிர மரக்கறி, உடுபுடைவை, த[illegible]டம், சமையல் அறைப் பாத்திரங்கள் என்பவற்றின் வியாபாரத்தை வட பகுதியில் உள்ள ஆலயங்களிலும் வெற்றுக் காணிகளிலும் நடத்தி எங்கள் தேட்டத்தை அற்புதமாக தம்வசமாக்கிக் கொள்கின்றனர்.

இவற்றுக்கு மேலாக சிங்கள இளைஞர்கள் இல்லாத கட்டிட வேலைகள் வட பகுதியில் இல்லையென்றாகி விட்டது. மேசன் தொழில் முதல் மாபிள் பதித்தல் கண்ணாடி பொருத்துதல், வர்ணம் பூசுதல் இப்படி கட்டுமானப் பணிகளும் வீதிகள் பாலங்கள் அமைத்தலும் சிங்கள இளைஞர்களுக்கே வேலை வழங்குவதாக இருக்க,

எங்கள் இளம் சமூகத்தில் ஒரு பகுதியினர் பியர் போத்தலோடு குந்தியிருந்து குடித்துவிட்டு போத்தலை வீதியில் அடித்து நொருக்கி மகிழ்கின்றனர். என்செய்வோம்! எங்கள் இளைஞர்களை வழிப்படுத்த, நெறிப்படுத்த அமைப்புகள் உருவாகினாலன்றி இவர்களை காப்பாற்ற வேறுவழியில்லை.

# இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தேசிய மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்

நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டப கலையரங்கில் கடந்த 04ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தேசிய மாநாட்டில் இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் இருந்து வருகை வந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தலைவர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டிற்குப் பிரதம விருந்தினராக பிரட்றிக் ஈபேர்ட் மன்றத்தின் வதிவிடப் பிரதிநிதி திருமதி பெற்றீனா மெஜர், சிறப்பு விருந்தினராக வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், கௌரவ விருந்தினராக வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இம்மாநாட்டில் மிக முக்கியமான தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன. அவை வருமாறு;

1.ஆசிரியர்களின் விருப்பத்துக்கு மாறாக அவர்களை இடமாற்றம் செய்வதைத் தவிர்த்தல். (காரணம்: உளப்பூர்வமாக செய்யப்படும் ஆசிரியப் பணிக்கு ஓர் ஆசிரியர் தன்னை முழுமனதுடன் அர்ப்பணிக்க வேண்டும். கட்டாயப் படுத்தி கற்பித்தலில் ஈடுபட வைக்க முடியாது.)

2. ஆசிரிய உதவியாளர்களுக்கான வேதனத்தை நாட்டின் சகல பாகங்களிலும் ஒரே முறையில் வழங்குதல். அவர்களில் பட்டதாரிகளாக உள்ளவர்களை அவர்களின் கல்வித் தரத்திற்கு ஏற்ப உள்வாங்குதல்.

3.வடக்கு கிழக்கில் உள்ள உயர் கல்வி நிறுவனங்கள், கல்வித் திணைக்களங்கள் என்பவற்றில் நீண்ட காலமாக தற்காலிக கடமையில் உள்ளவர்களுக்கு விசேட திட்டத்தின் மூலம் நிரந்தரமாக்குதல். அதிபர் சேவைக்காக நடத்தப்பட்ட பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் இன்னும் உள்ளதால் அவர்களைக் கவனத்தில் கொள்ளல்.(உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய வள நிலையங்களின் முகாமையாளர்கள், கல்வியற் கல்லூரி மற்றும் ஆசிரிய கலாசாலைகளில் இணைக்கப்பட்ட விரிவுரையாளர்கள், பதில் அதிபர்கள்)

4.ஆசிரிய வெற்றிடங்களை புதிய முறைகளுக்கு ஊடாக நிவர்த்தி செய்தல்( திணைக்களத்தின் அங்கீகாரத்தோடு பாடசாலைகளில் சிறப்பாக கடமை புரியும் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குதல். இளைப்பாறும் தொகைக்கேற்ப புதிய ஆசிரிய நியமனங்களை வழங்குதல், பல்கலைக் கழகங்களில் இருந்து வெளியேறிய பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்குதல்)

5.புதிய ஆசிரியசேவை ஒன்றினை உருவாக்கி அதன் மூலம் சிறப்பாக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு அதிகரித்த ஊதியம் வழங்குதல்( உருவாக்கப்படும் பிரமாணக்குறிப்பு ஆசிரியர்களின் முன்னைய நடைமுறைகளில் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடாது.)

6.ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமல் உள்ள சம்பள நிலுவைகளை உடனடியாக வழங்குதல்.

7.கல்வி அமைச்சினால் வெளியிடப்படும் அனைத்து சுற்று நிருபங்களும் சகல ஆசிரியர்களுக்கும் கிடைக்க வழிசெய்யப்படுதல். (உரிய மொழி மூலங்களில்)

8.பாடசாலைகளுக்கு வழங்கப்படும் வளங்கள் புதிய கற்றல், கற்பித்தலுக்கு உகந்த வகையில் பாரபட்சம் இன்றி வழங்கப்படுதல் வேண்டும்.

9.விசேட விடுமுறை நாட்களில் ஆசிரியர்களை அவர்களின் விருப்புக்கு மாறாக கடமையில் ஈடுபடுத்துவதைத் தவிர்த்தல்.

10. அனர்த்தங்களின் போது இழப்புகளைச் சந்தித்த மாணவர்களுக்கு கற்றலுக்கான ஏதுக்கள் செய்து கொடுக்கப்படுதல்.

11. ஆசிரியர் சேவை உள்ளீர்ப்புக்களில் மாவட்டத்திற்கு மாவட்டம் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை நீக்குதல்.

12. பாடசாலைகளுக்கான கஷ்டப் பிரதேச படிகளை உரிய காலங்களில் வழங்குதல்.

ஆகிய தீர்மானங்களை கல்வி அமைச்சருக்கும், கௌரவ ஜனாதிபதி அவர்களுக்கும் சமர்ப்பிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

❒ இதுதவிர கல்விப்புலம் சார்ந்த அதிகாரிகள் பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் உதவக்கூடியவர்களாக இருக்க வேண்டுமே தவிர அவர்களை இம்சைப்படுத்துபவர்களாக இருக்கக்கூடாது. அவ்வாறு யாரும் தொழிற்பட்டால் அது தொடர்பில் நேரடியாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டது.

❒இதைவிட ஆசிரியர்கள் தங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை அந்தந்த கிளைத் தலைவர் , செயலாளருக்குத் தெரியப்படுத்தி உடனடியாக பொதுச் செயலாளாரின் கவனத்திற்குக் கொண்டு வந்து இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் ஏகமனதாக கேட்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரனின் நன்றியுரை இடம் பெற்று புதிய நிர்வாகிகள் தெரிவு இடம் பெற்றது.

சங்கத்தின் புதிய தலைவராக அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த வி.ரி. சகாதேவராஜாவும், பொதுச் செயலாளராக யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த சரா.புவனேஸ்வரனும், நிதிச் செயலாளராக வலிகாமத்தை சேர்ந்த சி. தேவகுமாரனும், நிர்வாகச் செயலாளராக மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த மு. தயானந்தனும், பிரசார செயலாளராக ஏ.மடுத்தீனும் (மன்னார் மாவட்டம்), பத்திரிகைச் செயலாளராக சு.உதயகுமாரும் (வவுனியா மாவட்டம்), கல்வி கலாசார செயலாளராக திருமதி தயா நந்தினியும் (புத்தளம் மாவட்டம்), திலீப் உதயசுரேந்திராவும் (புத்தளம் மாவட்டம்) தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து துணைத் தலைவர்களாக எஸ்.கே.சண்முகலிங்கம் (தீவகம்), சு.பாலசுப்பிரமணியம் (மலையகம்), திருமதி சரோஜா இராமநாதன் (திருமலை), திருமதி சிவமணி கிருபாகரன் (மட்டக்களப்பு),

துணைப் பொதுச் செயலாளர்களாக பொ.அருணகிரிநாதன் (தீவகம்), சி.தனஞ்சயன்(கொழும்பு), திருமதி சரஸ்வதி பாலசுப்பிரமணியம் (மலையகம்) ஆகியோர் தெரிவாகினர்.

துணைநிதிச் செயலாளர்களாக அ.ஜெயக்குமார்(சங்கானை),செல்வி வளர்மதி சங்கரலிங்கம்(உடுவில்) உள்ளிட்ட 16 ஆட்சி மன்ற உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ந)

# உட்கட்சிபூசலே ஜே.வி.பி.இன் வீழ்ச்சிக்கு காரணம்–விமல்

(கொழும்பு)



ஜே.வி.பியினர் மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளின் தேவைகளுக்கமைய நடந்து கொள்கிறனர் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.ஒரு இடதுசாரிக் கட்சியாக இருக்கும் பட்சத்தில் நாட்டுக் கெதிராக செயற்படும் வெளிநாட்டு சக்திகளுக்கு இணங்கும் வகையில் நடந்து கொள்ளமாட்டாது.

கட்சிக்குள் உட்பூசல் இருப்பது காரணமாக ஜே.வி.பி. கீழ்த்தரமான மட்டத்திற்கு வீழ்ச்சி அடைந்திருப்பதாக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சரத் பொன்சேகாவும் ஆர். சம்பந்தனும் செய்து கொண்ட வடக்கு–கிழக்கை ஒரே மாகாணமாக அங்கீகரிக்கும் உடன்படிக்கையை ஜே.வி.பி. ஆதரிப்பது குறித்து அமெரிக்க தூதுவர் ஏற்றுக் கொண்டுள்ளார். (அ–2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



✷ உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல. இங்கிருந்து நீ தப்பி ஓட முயற்சி செய்யாதீர்கள். வெற்றியா, தோல்வியா என்று சிந்தித்துக் கொண்டிருக்காமல் சேவையில் ஈடுபடுங்கள்.

✷ தெய்வீகத்தன்மை இல்லாமல் பெறும் மிதமிஞ்சிய அறிவும், ஆற்றலும் மனிதர்களைச் சாத்தான்களாக்கி விடுகின்றன.

✷ பெரியவர்கள் வாழ்வில் பெருந்தியாகங்களைச் செய்கிறார்கள்.அதன் விளைவால் உண்டாகும் நன்மைகளை மனிதகுலம் பெற்று அனுபவிக்கிறது.

✷ இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவையாகும்.

✷ ஒவ்வொரு உயிரிலும் தெய்வீக சக்தி ஒழிந்து கிடக்கிறது. அந்த தெய்வசக்தியை வெளிக்கொண்டு வருவது தான் வாழ்க்கையின் இலட்சியம்.இதற்கான புறவாழ்விலும் அகவாழ்விலும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுங்கள்.

✷ அரிய செயல்கள் யாவும் பெரிய உழைப்பின்றி ஒரு போதும் முடிந்ததில்லை. அதனால் இடைவிடாமல் உழைத்து வாழ்வில் உயர்வு பெறுங்கள்.

# சன் டி.வி நிர்வாக இயக்குநர் குடும்பத்துடன் பிரான்ஸ் பயணம்



(புதுடில்லி)

ஏர்செல் -மேக்சிஸ் முறைக்கேடு வழக்கில் சி.பி.ஐயின் விசாரணை வளையத்தில் உள்ள சன் டி.வி நிர்வாக இயக்குநர் கலாநிதி மாறன் தனது குடும்பத்தினருடன் சென்னையில் இருந்து கடந்த சனிக்கிழமை அதிகாலை பின்லாந்துக்கு புறப்பட்டுச் சென்றார்.

இந்தப் பயணம் டில்லி அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏர்செல் நிறுவனத்தை விற்பனை செய்ய அப்போதைய மத்திய தொலைத்தொடர்பு துறை அமைச்சர் தயாநிதி மாறன் நிர்ப்பந்தித்தார். இதற்கு கைமாறாக மலேசியாவின் ஆஸ்ட்ரோ நிறுவனம் மாறன் குடும்பத்தினரின் சன் டைரக்ட் நிறுவனத்தில்ரூ629 கோடி முதலீடு செய்தது என்று கூறப்படுகிறது.

இந்த விவகாரத்தில் தயாநிதி மாறன் அதிகார துஷ்பிரயோகம் செய்ததாக கடந்த செப்டெம்பர் மாதம் சி.பி.ஐ வழக்குப் பதிவு செய்தது. இதில் அவரது சகோதரர் கலாநிதி மாறன் இங்கிலாந்து ஆஸ்ட்ரோ ஓல் ஆசியா நிறுவனம், மலேசியா மேக்ஸிஸ் நிறுவனம் ஆகியவற்றின் இயக்குநர் ரால்ப் மார்ஷல், மலேசியா உஷாக டொகாஸ் நிறுவனத்தின் தலைவர் டி. அனந்தகிருஷ்ணண் உட்பட 8 பேர் மீது சி.பி.ஐ வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது. அத்துடன் சென்னை ஆந்திரம், டில்லியில் உள்ள அவர்களது வீடுகள், அலுவலகங்களில் சோதனை நடத்தப்பட்டது.

இந்த நிலையில் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட கலாநிதிமாறன் தனது குடும்பத்தினரிடம் தனி விமானத்தில் பின்லாந்துக்குப் புறப்பட்டுச் சென்றார். அந்த விமானத்தில் ஏராளமான லக்ஜேஜ் எடுத்துச் செல்லப்பட்டதாக சென்னை விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. கலாநிதிமாறன் குடும்பதாரால் எடுத்துச் செல்லப்பட்டவை ஆவணங்களாக இருக்கக் கூடும் என்கிற சந்தேகம் எழுப்பப்படுகிறது.

சி.பி.ஐ வழக்கு விசாரணையில் இருக்கும் நிலையில் கலாநிதிமாறன் பின்லாந்துக்குச் சென்றுள்ள விவகாரம் குறித்து டில்லி .சி.பி.ஐ அதிகாரிகள் விசாரித்து வருகிறார்கள்.

இந்த வழக்கு தொடர்பான முக்கிய ஆதாரங்களை சி.பி.ஐ சேகரித்து வருகிறது. மாறன் சகோதரர்கள் உட்பட குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் வரும் நாட்களில் விசாரணை நடத்த சி.பி.ஐ திட்டமிட்டிருந்தது.

இதைப் புறக்கணிப்பதற்காக கலாநிதி மாறன் திடீரென பின்லாந்துக்கு பயணம் மேற்கொண்டிருக்கக்கூடும் என்கிற சந்தேகம் எழுகிறது. இந்த வழக்கில் கலாநிதிமாறன் பின்லாந்தில் குடியேறினால் அவரை நாடு கடத்த இந்திய அரசு வலியுறுத்த முடியாது.

ஏனெனில், அந்த நாட்டுடன் இந்திய அரசு குற்றவாளிகளை நாடுகடத்தி பரஸ்பரம் ஒப்படைக்கும் ஒப்பந்தத்தை செய்து கொள்ளவில்லை. அதனால்தான் கலாநிதிமாறன் தனது குடும்பத்துடன் பின்லாந்து சென்றிருக்கிறாரா என்ற கோணத்திலும் நாங்கள் ஆராய்ந்து வருகிறோம்.

சாதாரணமாக இதுபோன்ற வழக்குகள் விசாரணையில் இருக்கும் போது அதில் தொடர்புடையவர்கள் வெளிநாட்டுக்குச் செல்வதை கண்காணித்துக் தங்களுக்கு தெரிவிக்கும் படி இமிக்கிரேஸன்துறைக்குப் புலன் விசாரணை நடத்தும் அலுவலர்கள் எச் சரிக்கை அனுப்புவது வழக்கம். கலாநிதி மாறன் விடயத்தில் விமான நிலைய இமிக்கி ரேஸன் அலுவலர்களுக்கு அப்படிப்பட்ட எச்சரிக்கை எதுவும் சி.பி.ஐ ஆல் தரப்படாதது ஏனென்கிற கேள்வி எழுப்பப்படுகிறது.

கலாநிதிமாறன் ஆவணங்களுடன் வெளிநாடு சென்று சாட்சியங்களை அழிக்க முற் படக்கூடும் என்றும் அவர் வெளிநாட்டில் தங்கியிருந்து இந்தியப் புலனாய்வுத்துறையின் விசாரணை வளையத்தில் இருந்து தப்பிவிட முயற்சிக்கிறார் என்றும் வெளிவரும் தகவல்களில் எந்தவித உண்மையம் கிடையாது. உலகத்தின் எந்த மூலையில்போய் ஒளிந்து கொண்டாலும் எந்தக் குற்றவாளியும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிட முடியாது. (அ-2)

# தீவிரவாதத்தை பாக்.ஆதரிக்கிறது

## இந்தியா குற்றச்சாட்டு

பாகிஸ்தான் கூறும் வார்த்தைகளின் மீது நம்பிக்கை வைக்க முடியவில்லை என்று மத்திய உள்துறைச் செயலாளர் கூறியுள்ளார்.

தீவிரவாத அமைப்புகளை அழிப்பதற்கு பதிலாக பாகிஸ்தான் தனது மண்ணில் தீவிரவாதிகளுக்கு தொடர்ந்து புகலிடம் கொடுத்து வருகிறது என மத்திய அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து மத்திய உள்துறைச்செயலாளர் ஆர்.கே.சிங் கூறியதாவது,

தீவிரவாதிகளை ஆதரிப்பதற்கு எதிராக இந்தியா பலமுறை பாகிஸ்தானிடம் கூறியுள்ளது.

ஆனால் பாகிஸ்தான் எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லையென அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

தீவிரவாதத்தையும்,தீவிரவாதிகளையும் நாங்கள் ஆதரிக்கமாட்டோம் என்று பல முறை பாகிஸ்தான் கூறினாலும் அவர்களின் வார்த்தைகளை நம்ப முடிய வில்லை என்று ஆர்.கே.சிங். குற்றஞ்சாட்டியுள்ளார். (அ-2)

# கூடங்குளம் அணுமின் நிலையத்தால் எந்த பாதிப்பும் ஏற்படாது- அப்துல்கலாம்

(சென்னை)

கூடங்குளம் அணுமின் நிலையத்தால் எந்த பாதிப்பும் ஏற்படாது என்று அங்கு நேற்று முன்தினம் நேரில் ஆய்வு நடத்திய முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே. அப்துல் கலாம் கூறினார்.

நெல்லை மாவட்டம் கூடங்குளம் கிராமத்தில் அமைந்துள்ள அணுமின் நிலையத்துக்கு எதிராக அப்பகுதி கிராமமக்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதியும் அணு விஞ்ஞானியுமான ஏ.பி.ஜே. அப்துல்கலாம் கூடங்குளத்துக்கு வருகை தந்துள்ளார். பின்னர் அணு விஞ்ஞானிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

அப்துல்கலாம் புறப்பட்டு கூடங்குளம் அணுமின் நிலையத்துக்குள் சென்றார். அங்கு நிறுவப்பட்டுள்ள அணு உலைகளை பார்வையிட்டார். மேலும் அணு உலையின் பாதுகாப்பு அம்சங்களையும் சுற்றிப் பார்த்தார். கடலுக்குள் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு தடுப்பு சுவர், கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம், தானியங்கி, ஜெனரேட்டர்கள் ஆகியவற்றினை பார்வையிட்டார்.

அங்கு அவர் உரை நிகழ்த்துகையில்,

கூடங்குளத்துக்கு நான் 2 ஆவது முறையாக தற்போது வந்துள்ளேன். இங்கு வந்ததற்கு காரணம் அணு விஞ்ஞானி என்பதாலும் நாட்டின் அறிவியல் வளர்ச்சி மக்களுக்கு பயன்பட வேண்டும் என்பதற்காகத்தான். நான் இங்கு போராட்டக்காரர்களுடன் பேசி சமரசம் செய்வதற்காக வரவில்லை. அணு உலையை பார்வையிட்டு அதிலுள்ள பாதுகாப்பு அம்சங்களை ஆய்வு செய்து விஞ்ஞானிகளுடன் ஆலோசனை நடத்தவே வந்துள்ளேன்.

கூடங்குளம் அணு உலைகள் 3 ஆவது தலைமுறை பாதுகாப்பு அம்சங்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. அதை பார்க்கத்தான் வந்தேன் இதில் 3 முக்கியமான பாதுகாப்பு விடயங்களை கூற வேண்டும். அணு உலையில் எதிர்பாராத விதமாக மின்சாரம் தடைப்பட்டால் எரிபொருளை சுற்றி குளிர்ந்த தண்ணீர் தானாகச் செல்லும் வகையில் தானியங்கி குளிர்விப்பு கருவி பொருத்தப்பட்டுள்ளது. இதேபோல் அதிக வெப்பத்தால் எரிபொருள் உருகினால் அதனுடன் மற்றொரு பொருள் வினைபுரிந்து தானாகவே கதிர்வீச்சு தடுக்கப்பட்டு விடும். அணு உலை சுவர்கள் ஈரடுக்கு சுவர்களாக கட்டப்பட்டுள்ளன. இது அணு கதிர் வீச்சை தடுக்கும். மேலும் இயற்கை பேரிடம் மற்றும் சுற்றுச்சூழல் விளைவுகளால் ஏற்படும் விபத்துக்களாலும் சேதம் அடையாது. இந்த பாதுகாப்பு அம்சங்களை பார்த்து எனக்கு முழு திருப்தி ஏற்பட்டுள்ளது நம்பிக்கையும் அடைந்துள்ளேன் என்றார். (அ-2)

# நாம் ஆட்சிக்கு வந்தால் தனித்தெலுங்கானா கோரிக்கை நிறைவேற்றப்படும்- சுஷ்மா

(நலகொண்டா)

அடுத்து வரும் லோக்சபா தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வந்தால் மூன்று மாதங்களில் தெலுங்கானா தனி மாநில கோரிக்கை நிறைவேற்றப்படும் என லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் உறுதி அளித்தார்.

ஆந்திரா, நலகொண்டா நகரில் என்.ஜி கல்லூரி மைதானத்தில் ஆந்திர மாநில பா.ஜ சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போர் சபை என பெயரிடப்பட்ட பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய சுஷ்மா மேலும் கூறியதாவது,

தெலுங்கானா தனி மாநிலம் உருவாக்க நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் மத்திய அரசு தீர்மானம் கொண்டு வந்தால் அதற்கு ஆதரவு வழங்க பா.ஜ. தயாராக உள்ளது. பெரிய மாநிலங்கள் பிரிக்கப்பட்டு சிறிய மாநிலங்கள் உருவானால்தான் வளர்ச்சியடைய முடியும். பா.ஜ. ஆட்சியின் போது புதிதாக உருவாக்கப்பட்ட மூன்று மாநிலங்கள் அபிவிருத்தி அடைந்தால் அங்குள்ள



மக்கள் பா..ஜ ஆட்சி ஏற்பட ஆதரித்தனர்.

அரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பின்னர்தான் நாட்டிலேயே வளர்ச்சி பெற்று முன்னிலையில் உள்ளன. தெலுங்கானா பகுதி சமமாக வளர்ச்சி பெறவில்லை என்பதற்கு இந்த நலகொண்டா மாவட்டமே உதாரணமாகும். மாவட்டத்தில் இலட்சம் பேர் புளோரைட் தண்ணீரை குடித்து நோய்த்தாக்குதலுக்குள்ளாகி வருகின்றனர் என அவர் கூறினார். (அ-2)

## பாரதச் செய்திகள்

# கறுப்புப்பண பதுக்கல் குறித்து தகவல் பெறும் முயற்சியில் இந்தியா

(புதுடில்லி)

கறுப்புப்பண பதுக்கல் குறித்து சம்பந்தப்பட்ட வெளிநாடுகளிடம் தகவல்களைப் பெறுவதற்கான முயற்சியில் இந்திய அரசு தீவிரமாக செயற்பட்டு வருகிறது என சர்வதேச பொருளாதார மற்றும் மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

சமீபத்தில் பிரான்சில் நடந்த ஜி20 நாடுகளின் மாநாட்டில் வரி ஏய்ப்பு நடவடிக்கைகளை தடுப்பதற்காக உலக நாடுகள் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து அறிக்கை பொருளாதார மற்றும் மேம்பாட்டு அமைப்பு (ஓ.இ.சி.டி) சார்பில் தாக்கல் செய்யப்பட்டது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது, உள்ளநாட்டில் வரி ஏய்ப்பு நடவடிக்கைகளை தடுப்பதற்காக சீனாவும் இந்தியாவும் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. குறிப்பாக 2009 இல் இருந்து வரி ஏய்ப்பு செய்வதற்காக வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணம் பற்றிய தகவல்களை பெற இந்திய அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நாடுகளை இந்திய அரசு அதிகமாக அணுகி வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் கறுப்பு பண பதுக்கலை தடுக்க வகைசெய்யும் இரட்டை வரி தவிர்ப்பு தொடர்பாக 19 புதிய ஒப்பந்தங்களில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. ஏற்கனவே உள்ள இது தொடர்பான ஒப்பந்தங்களை புதுப்பிக்கும் முயற்சியிலும் இந்திய அரசு ஈடுபட்டு வருகிறது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)



ராஜஸ்தானில் நவம்பர் மாதத்தில் நடைபெறம் புகழ்பெற்ற புஷ்கர் விழாவையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் பாரம்பரிய இசைக்கருவிகளை இசைத்து மகிழும் கலைஞர்களைப் படத்தில் காணலாம்.

# சார்ஜா டெஸ்ட் சமநிலையில் முடிவு; பாகிஸ்தான் தொடரை சுவைத்தது

(சார்ஜா)

சார்ஜாவில் நடைபெற்ற இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்தது.

இதன் மூலம் பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதிய 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அபுதாபியில் நடைபெற்றது.

இதில் முதலாவது போட்டி சமநிலையில் முடிபுற்றதுடன் இரண்டாவது போட்டியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 3ஆம் திகதி சார்ஜாவில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 413 ஓட்டங்களை எடுத்தது.



தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 340 ஓட்டங்களை எடுத்தது.

இதன்மூலம் முதலாவது இன்னிங்ஸில் 73 ஓட்டங்களால் முன்னிலை வகித்த இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிவில்5 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் நேற்றைய 5ஆம் நாள் ஆட்டம் மழை காரணமாக தாமதமாக ஆரம்பமானது.

இதில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

துடுப்பாட்டத்தில தரங்க பரணவிதான ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களையும் குமார் சங்கக்கார 51 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இதன் மூலம் 255 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 87 ஓட்டங்களை எடுத்தபோது ஆட்டம் சமநிலையானது என இரு அணியினரும் ஏற்றுக் கொண்டனர்.

இதனடிப்படையில் பாகிஸ்தான் அணி தொடரை 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இப்போட்டியில் சிறப்பாக ஆடிய இலங்கை வீரர் குமார் சங்கக்கார ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

அத்துடன் தொடர் நாயகன் விருதையும் குமார் சங்கக்கார பாகிஸ்தான் வீரர் சயிட் அஜ்மல் உடனும் பகிர்ந்து கொண்டார்.

# டில்லி டெஸ்டில் ஒரே நாளில் 17 விக்கெட்டுக்கள் சரிந்தது

## மேற்கிந்தியத் தீவுகள் முன்னிலை



(டில்லி)

டில்லி டெஸ்டில் இரண்டாம் நாள் ஆட்டத்தில் 17 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டது. இதில் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 209 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வரு கிறது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று முன்தினம் டில்லியில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் சமி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

இதன் அடிப்படையில்ஆடிய மேற்கிந்திய தீவுகள் அணி முதல்நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 256 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 304 ஓட்டங்களை எடுத்தது

இதில் சிவ் நாராயணன் சந்தர்போல் 196 பந்துகளில் (7பவுண்டரிகள், 2சிக்ஸர்கள் உட்பட) 118 ஓட்டங்களையும் பிரத்வைற் 63 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பிரஜன் ஓஜா 34.2 ஓவர்கள் பந்து வீசி 9 ஓட்டமற்ற ஓவர்கள்உட்பட 72 ஓட்டங்களை கொடுத்து 6 விக்கெட்டக்களையும் அஸ்வின் 3 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 209 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் மேற்கிந்திய தீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக சேவாக் 46 பந்துகளில் (9பவுண்டரிகள் உட்பட) 55 ஓட்டங்களையும் டிராவிட் 54, காம்பீர் 41ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் அணித் தலைவர் சமி 3 விக்கெட்டுக்களையும் ராம்போல், பிஷோ தலா 2விக்கெட்டுகளையும் எட்வேட்ஸ், சாமுவேல்ஸ் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 2விக்கெட்டுக்களை யிழந்து 21 ஓட்டங்களை எடுத்தது.

இப்போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# ஒரே அறையில் ஆசிப், சல்மான் பட்

(லண்டன்)

சூதாட்டத்தில் ஈடுபட்டு சிறைத் தண்டனை பெற்ற பாகிஸ்தான் வீரர்கள் சல்மான் பட், முகமெட் ஆசிப் இருவரும் ஒரே அறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்துக்கு எதிரான லோர்ட்ஸ் டெஸ்டில் ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்ட, பாகிஸ்தான் வீரர்கள் சல்மான் பட், முகமெட் ஆசிப், முகமெட் அமீர் பிடிபட்டனர். இவர்களுடன் முகவர் மசார் மஜீத்தும் சிக்கினார். இவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட, லண்டன் நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்தது.

தற்பொழுது வோன்ட்ஸ் ஓர்த் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதில் முகமெட் அமீர் வடக்கு லண்டனில் உள்ள சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளார். இதனிடையே, நீதிமன்றத்தில் ஒருவர் மீது ஒருவர் மாறி, மாறி குற்றம் சுமத்திய, சல்மான் பட், முகமெட் ஆசிப் இருவரும், தற்போது ஒரே அறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என செய்திகள் வெளியாகி உள்ளன.

இது குறித்து தி டெய்லி மெயில் என்ற பத்திரிகையில் வெளியான செய்தியில், சிறையில் எந்தெந்த அறையில், குற்றவாளிகள் இருக்க வேண்டும் என்று,அதிகாரிகள் தான் முடிபு செய்யவேண்டும். சல்மான் பட் (30 மாதங்கள்), முகமெட் ஆசிப் (1 ஆண்டு) விடயத்தில், முடிபு எதுவும் எடுக்கப்பட வில்லை. இதனால் வேறு வழியின்றி இவர்கள் ஒரே அறையில் அடைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.

## டிப்பர் ...

இந்த விபத்துச் சம்பவத்தில் அனுராதபுரத்தைச் சேர்ந்த யாழ் மின்சார சபை ஊழியரான இரு பிள்ளைகளின் தந்தை ந.அமரானந்தன்(வயது-35), கொள்ளுப்பிட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிறிகாந் (வயது-21), கொக்குவில் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான எம்.அஜந்தன் (வயது-29) ஆகிய மூவர் உட்பட ஆறு பேரே படுகாயமடைந்தவர்களாவர்.

(பா- 6 ,8 ,11)

## சார்க் அமை ...

மாலைதீவு அடு நகரத்தில் இடம்பெறவுள்ள 17வது சார்க் உச்சி மாநாட்டிலும் , அதன் தலைவர்கள் இது குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சார்க் உறுப்பு நாடுகள் அனைத்துமே பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு உள்ளான நாடுகளாக திகழ்வதாக தெரிவித்த அமைச்சர் ஜி.எல். பீரிஸ், அந்தப் பிரச்சினையில் இருந்து மீள சிறந்த யுக்தியினை பிரயோகிக்க வேண்டும் எனவும்அந்த செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

(பா-11)

## வெளிநாட்டு ...

கருத முடியாது.

அரசியல் போராட்டங்களின் போது ஆக்கபூர்வமான முறையில் அவர்களினால் பங்களிப்பு செலுத்த முடியாது.

யாழ்.மறைமாவட்டத்திலிருந்து வெளிநாட்டுக்கு சென்று தற்போது பொருத்தமற்ற அரசியலில் ஈடுபட்டு வரும் இமானுவல் ஆண்டகையின் நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது.

அத்துடன் இலங்கையில் மீண்டும் பிரிவினைவாதத்தை எவரேனும் தூண்ட முற் பட்டால் அதற்கு இடமளிக்கக் கூடாது எனவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார். (பா)

## தமிழக ...

மொன்றில் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

எமது மீனவர்கள் மீது மேற்கொள்ளப்படும் இத்தகைய தாக்குதல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் உங்கள் உணர்வை வார்த்தை மூலமும் நடவடிக்கை மூலமும் தெரிவிக்குமாறும் நான் பணிவாக கோருகிறேன்.

இவ் வருட மே மாதத்திலிருந்து இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்ட 22 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(பா-8)

# TILKO JAFFNA CITY HOTEL

TILKO hotels

70/6, K.K.S ROAD, JAFFNA. T.P:0212225969

Web:cityhoteljaffna.com
e-mail:info@hoteljaffna.com

Tilko Jaffna City Hotel for Business & Relaxation in the heart of Jaffna City
Conference Hall Facilities including Multimedia & PA System
Large Banquet Hall For Wedding Receptions, Work Shops, Conventions & Seminars
Non Ac Mini Conference Hall
Special take away Lunch/Dinner Pack
Morning/ Evening Snacks
Special Package Rate for
Family Get-to-Gathers, Birthday/ Anniversary Functions, Company Get to Gathers

*Await Opening*
*Special Barbaque at our Garden Cafeteria*
*Inclusive of Chines/Indian Jaffna Authentic*
*Variety Cuisine s From our open hot ranga Kitchen*

உங்கள் வியாபார நடவடிக்கைகள் மற்றும் பொழுது போக்கு அம்சங்களுக்கு யாழ். நகரின் மத்தியில் ஒளி, ஒலி அமைப்பு மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய மாநாட்டு மண்டபம், சிறிய /நடுத்தர /பிரமாண்டமான குளிருட்டபட்ட, குளிருட்டபடாத சகல வசதிகளுடன் கூடிய மண்டபங்கள், திருமண, பிறந்த நாள் கொண்டாட்டங்கள், வியாபார நிறுவன ஒன்றுகூடல்களுக்கும் ஏதுவான பாரிய மண்டப வசதி அத்துடன் மதிய, இரவு பொதி செய்யப்பட்ட உணவு வகைகள், காலை, மாலை சிற்றுண்டிகள்...

இந்தியா, சீனா மற்றும் யாழ். பாரம்பரிய உணவு வகைகளும் ஒரே இடத்தில்...



மிகவிரைவில் TILKO HOTEL இல் Barbeque வசதியுடனான பூந்தோட்ட உணவகம் திறக்கப்பட வுள்ளது.

உங்கள் வியாபார நடவடிக்கைகள்
மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு
யாழ் நகரில்...

T.P.:077 6943479
K.Gunaseelan
Marketing Executive



Gtv மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை

G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.

MAHARAJA FOOD PRODUCT

மேலதிக விபரங்களுக்கு:-

கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha,
Wellawathte.
T.P:-0112360926,0112259849

கொழும்புக்கான கட்டணம்
ரூபா 200/= மட்டுமே

யாழ்ப்பாணம்
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825

aramex
delivery unlimited





# இடமாற்றம்

இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த

நியூ லலிதாஸ் ஜூவல்லறி ஸ்தாபனம்

10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு : 021 222 4134





# வாக்காளர் மீள்பதிவு 2011

தயாரிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பட்டியல் பின்வரும் அலுவலகங்களில் நவம்பர் மாதம்2ஆந் திகதியில் இருந்து 30ஆந் திகதிவரை பார்வைக்கு வைக்கப்படும்.

- மாவட்ட தேர்தல் அலுவலகர்,
- பிரதேச செயலகம்,
- கிராம அலுவலர் அலுவலகம்,
- உள்ளூராட்சி மன்றங்கள்,
- தபால் அலுவலகங்கள்,

அங்கு,

1. 2010 இடாப்பிலிருந்து அகற்றப்படும் பெயர்கள் (A பட்டியல்)
2. 2010 இடாப்பிற்கு சேர்க்கப்படும் புதிய பெயர்கள் (B பட்டியல்)
3. 2010 இடாப்பு,

உங்கள் பார்வைக்காக வைக்கப்படும்.

தயவு செய்து இவற்றைப் பரிசீலனை செய்து குறைபாடுகள் இருப்பின் அவற்றை நிவர்த்தி செய்யும் முகமாக உங்கள் பகுதி கிராம சேவையாளரை அல்லது மாவட்ட தேர்தல் அலுவலகத்தை அணுகவும்

(அ-4923)

மேலதிக தகவல்களுக்கு ☎ பிரகாஷ் 0776513729
நிருபராஜ் 0778415543

பஃவ்ரல்

12/3, றொபேட் ரெறஸ்

றொபேட் குணவர்த்தன மாவத்தை, கொழும்பு – 06.

தொலைபேசி இல : 011-2514441-2 Fax: 011-2514443


## இலங்கை மீது ...

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நேரடியான ஆய்வுகளைக் கொண்டிருப்பதோடு, வெளிப்படைத்தன்மையையும் கொண்டிருக்க வேண்டும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அடிக்கடி வலியுறுத்தி வருவது இலங்கை அரசாங்கத்தின் மீதான ஒரு உளவியல் போராகும்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை விரைவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படவுள்ள நிலையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இத்தகைய உளவியல் போரொன்றை ஆரம்பித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை குறித்து பெரும் எதிர்பார்ப்புடன் இருப்பதாக கடந்த 03-ம் திகதி மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்ரோரியா நூலண்ட் கூறியிருந்தார்.

அத்துடன், உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டிருந்த விக்ரோரியா நூலண்ட், சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்ற வகையில் இவ்வறிக்கை இருக்க வேணடும் என்றும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா-11)

## சட்டத்திற்கு மேலானவரா ...

கிடமானதாகும்.

அரசமைப்பு என்பதன் பொதுக் கருத்து அர்த்தத்தை இழந்த பின்னர் அதிகாரப் பகிர்வு என்பது அர்த்தமாக இருக்க முடியுமா? சட்டம் ஒழுங்கு பேணல் என்பது நாடு முழுவதும் இல்லாதநிலையில் வடக்கு மற்றும் கிழக்கு வாழ் மக்களுக்கு எவ்வாறு நீதியை வழங்க முடியும்?

இன்னும் சில தினங்களில் வெளியாக இருக்கும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை உலக நாடுகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

அந்த ஆணைக்குழுவின் அறிக்கை விமர்சகர்களின் எதிர்மறைக் கருத்துக்களுக்கு அப்பால் மிகவும் திறமான அறிக்கை என்று கூறினாலும் சட்டத்திற்கு மேலானவராக ஜனாதிபதியிருக்கும் போது அந்த அறிக்கை பலனளிக்குமா?

நீதித்துறை தொடர்ந்து அச்சுறுததலுக்கு உட்பட்டிருக்கும் போதும், வழக்கு தொடருநர்கள் தொடர்ந்து அரசியல் மயப்படுத்தப்பட்டு வரும் போதும் மற்றும் பொலிஸார் அரசியல்வாதிகளின் எடுபிடிகளாக இருக்கும் வரையும் ஆணைக்குழுவின் அறிக்கையினால் எவ்வித பலன் கிடைக்கப்போகின்றது?

எனவே இவ்வாறானவற்றுக்கு மாற்றத்தை காணவேண்டிய தேவை ஏற்பட்டு இருக்கின்றது என ஆசிய மனித உரிமை ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் எழுச்சி ஏற்படும் ...

இந்தியாவில் ஆட்சியாளர்கள் ஒரு போதும் அப்படி செய்யவில்லை. அவர்கள் தொழில் முனைவோரையும் முதலீட்டாளர்களையும் ஊக்குவித்தனர். அதனால் தான் பிர்லா, டாடா போன்ற உலகப் புகழ் பெற்ற கோடீஸ்வரர்கள் உருவானார்கள்.

இலங்கையில் சில தொழிலதிபர்கள், 1956 ஆம் ஆண்டின் தவறுக்குப் பின்னரும் எல்லா பிரச்சினைகளையும் எதிர்கொண்டு தலை தூக்கினர். செவனகல சீனித் தொழிற்சாலை உரிமையாளர் தயா கமகே, பெல்வத்தை சீனித் தொழிற்சாலை உரிமையாளர் ஹரி ஜயவர்த்தன ஆகியோரும் அவர்களில் இருவராவர் என கரு ஜய சூரிய குறிப்பிட்டுள்ளார். (பா-11)


SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

A/L எழுதிய மாணவர், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் நுழைவு மாணவர், பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர் கலந்துகொள்ளும்

இலவச ஆங்கில வகுப்பு (English Workshop)

10.11.2011 வியாழக்கிழமை (போயா விடுமுறை)
பிரிவுகள் : (ஆறு பிரிவுகளில் ஏதாவதொரு பிரிவில் சேரலாம்)
காலை : 8-9.30, 9.30-11, 11-12.30
மாலை 1-2.30, 2.30-4, 4-5.30

இலவச வகுப்பு ஊடாக வார மற்றும் வார இறுதி பயிற்சியிநெறியில் சேரலாம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.